# தேவன்

## நித்திய ஜீவனுக்காக
## என்னைத் தெரிந்து கொண்டார்

ஹம்ரான் அம்ப்ரி

**THEVEN NITHIYA JEEVANUKAKA ENNAI THERINTHU KONDAR (TAMIL)**

**GOD HAS CHOSEN FOR ME EVERLASTING LIFE**

**By**
**Hamran ambrie**

**All rights Strictly reserved. No Part of this publication may be transtated or transmitted on any form or by any means electronic or mechanical, including photocopy. recording or any information storage and retrieval system without permission in writing from the publisher.**

# உள்ளே


| | |
|---|---|
| இயேசு தேவனுடைய குமாரன் என்று அழைக்கப்படுகிறார் | 28 |
| இயேசு கர்த்தர் (தூஹான்) என்று அழைக்கப்படுகிறார் | 32 |
| கிறிஸ்தவத்தின் (தௌஹித்) ஏக தெய்வ வணக்கம் | 40 |
| தேவனின் திரியேகத்துவம் | 50 |
| இயேசு கிறிஸ்துவின் மரணமும் உயிர்தெழுதலும் | 55 |
| சத்திய வேதாகமத்தின் புனித உண்மை | 81 |
| சூழ்நிலைக்கு எதிராக எனது போராட்டம் | 88 |
| எனது ஊழியம் மேலும் விரிவடைதல் | 119 |
| வினா விடை | 129 |




## தேவன் என்னுடன் நேரடியாகத் தனிப்பட்ட முறையில் பேசுகிறார்:

முந்தின நாட்களில் நான் ஒரு வைதீக, தீவிர முஸ்லீமாகவும், இஸ்லாமிய போதகராகவும், 'முஹம்மதியா,' இயக்கத்தின் அமைப்பாளராகவும் இருந்து வந்தேன். 1947ம் ஆண்டில் இத்ஹம் சாலித் அவர்களும் நானும் அமுன்தாயில் **K.H.**கலிமந்தானும் முஸ்லிம் காங்கிரஸின் இன் தலைவர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டோம். 1950-51 இல் பணிபுரியும் இஸ்லாமியப் போதகராக, உயர்ந்த ஸ்தானத்தில் (Second Lieutenant) நியமிக்கப்பட்டேன் சிறந்த எழுத்தாளன் என்கிற பெயரும் புகழும் பெற்றேன். (சோலோவிலிருந்து வெளியிடப்படும்); மின்க்குவான் அதீல் ஜக்கார்த்தாவிலிருந்து பிரசுரமாகும் மின்க்குவான் ரிசாலா ஜிஹாத்; மற்றும் பான்துங் சஞ்சிகையான. மின்க்குவான் ஆன்டிகம்யூனிஸ்ட் ஆகிய பத்திரிக்கைகளில் என்னுடைய கட்டுரைகள் ஒழுங்காக வெளியிடப்பட்டு வந்தன. கிறிஸ்தவத்தை மும்முரமாக எதிர்க்கின்றவர்களோடெல்லாம் தீவிரமாக ஒத்துழைத்தேன். 1936-ல் இருந்தே 'முஆரா திவேஹ்' (பரீட்டோ) என்ற இடத்திலிருந்து 1962 வரை

இந்தோனேஸியாவில் இஸ்லாமிய மத அடிப்படையிலான அரசைக் கொண்டு வருவதற்காகவும், அதினிமித்தம் இயல்பாகவே கிறிஸ்தவர்களை எதிர்க்கின்ற குழுக்களுடன் ஒரு அனுதாபியாக செயல்பட்டு வந்தேன்.

1936லிருந்தே என்னிடம் ஒரு முழு வேதாகமம் (பைபிள்) இருந்தபோதிலும், அது கூறும் உண்மையினைக் கண்டு பிடிப்பதற்காக அதைப் படிக்காமல், கிறிஸ்தவத்தை குறை கண்டு பிடிப்பதற்கும், எதிர்ப்பதற்கும் எனக்கு சாதகமாக இருக்கக் கூடிய வசனங்களையும், பகுதிகளையும் தேடிக் கொண்டிருந்தேன்.

இவ்வாறு என்னுடைய நாற்பதாவது வயது மட்டும் கிறிஸ்துவை பரிகாசிக்கிறவனும், அவருடைய தெய்வீகத்துவத்தை நிராகரிக்கிறவனாகவும் இருந்தேன். வேண்டுமென்றே, துணிகரமாக நான் சத்தியத்தை அவதூறாகப்பேசியும், எழுதியும் அதைப் புறக்கணித்தும் வந்தேன் கடவுளுடைய சொல்லிமுடியாத அன்பு, அவரை எதிர்த்தும், பழித்தும் பேசிவந்த, என்னையும் கண்டுபிடித்து இரட்சித்தது.

1962இல், மசூதியில் பேசுவதற்காக நான் ஆயத்தம் செய்து கொண்டிருந்த பிரசங்கத்தைக் குறித்து நான் தியானிக்கையில் குர்-ஆனில் உள்ள வசனம்5:68-ல்



வேதத்தையுடையவர்களே! நீங்கள் தவ்றாத்தையும் இன்ஜீலையும், உங்கள் இறைவனிடமிருந்து உங்களுக்கு அருளப்பெற்ற மற்றவைகளையும் மெய்யாகவே நீங்கள் கடைப்பிடித்தொழுகும் வரை, நீங்கள் எதிலும் சேர்ந்தவர்களல்லர்" (5:68)

இந்த வசனத்தை நான் நூற்றுக்கணக்கான தடவைகள் வாசித்திருந்தபோதிலும் அதன் பொருளை உணராதவனாக இருந்திருக்கிறேன். தவ்றாத் இன்ஜீல் என்று குர்ஆன் குறிப்பிடும் நூல்களையெல்லாம் பைபிளில் உள்ள தவ்றாத், இன்ஜீல் தான் என்று தேவன் என்னுடன் அமைதியாகப் பேசினார். குர்-ஆனில் கூறப்பட்டுள்ள தவ்றாத்தும் இன்ஜீலும் இப்பொழுது காணக்கூடிய முறையில் இவ்வுலகத்தில் இல்லை எனவும் ஆனால் அதின் பொருளடக்கம் குர்-ஆனில் சுருக்கமாகக் காணப்படுகிறதென்றும் நம்பி வந்தேன். மேலும் இப்பொழுது பைபிள் என்று அழைக்கப்படுகிற தவ்றாத்தும் இன்ஜீலும் உண்மையானவை அல்ல; கிறிஸ்தவர்களால் சிதைக்கப்பட்டு. கெடுக்கப்பட்டு. வரிசைக்கிரமம் மாற்றப்பட்டு, போலியான புத்தகமாக இருக்கின்றதென்று ஸ்திரமாக நம்பி வந்தேன்.

ஆகிலும் பைபிளில் உள்ள தவ்றாத்தும் இன்ஜீலும் உண்மைதான் என்று என்னுடைய அந்தராத்மா சொல்லி வந்தது; ஆனால் என்னுடைய

மூளையறிவோ என் உள்ளத்தில் இருந்து அமர்ந்த மெல்லிய சத்தத்தை இடைவிடாமல் அடக்கிக் கொண்டே இருந்தது. பைபிளில் உள்ளதெல்லாம் பொய்யும் புரட்டுமாக இருக்கின்றதென அறிவு உரத்த சத்தமிடுகையில், என்னுடைய ஆத்துமாவும், மனச்சாட்சியும் அதை மறுத்துக் கொண்டே இருந்தது. ஆதலால் எது சரி, எது தவறு என்று தீர்மானம் செய்வதில் என்னுள்ளத்தில் பெரிய போராட்டம் நடைபெற்றுக் கொண்டே இருந்தது.

என் மனசாட்சிக்கு அமைதியும் சாந்தியும் ஏற்படுத்தும் நோக்கத்துடன், என்னுடைய பிரச்சனையை நள்ளிரவு ஜெபத்தில் (துவ்ஜுத் Tahjud) தொழுகையில்) அல்லாஹ்விடம் பாரத்துடன் விண்ணப்பித்தேன். உண்மையைக் காண்பிக்கும் அடையாளங்களையும், ஆதாரங்களையும், தந்துதவுமாறு இறைவனிடம் கெஞ்சி மன்றாடினேன். என்னுடைய மன்றாட்டு இவ்வாறிருந்தது.

“வானங்களையும், பூமியையும் படைத்த இறைவனே அல்லாஹ்வே, முஸ்லீம்கள் கிறிஸ்தவர்கள் மற்றும் புத்தர்களின் கடவுளே, சூரிய சந்திர நட்சத்திரங்கள் மற்றும் மலைகள் பள்ளத்தாக்குகளின் , இப்பிரபஞ்சத்தின் தேவனே, தவ்றாத்தையும், இன்ஜீலையும் குறித்து குர்-ஆன்



கூறுவதின் மெய்ப்பொருளை எனக்குக் காட்டியருள். ஆதித்தன்மை கெடாத தவ்றாத் இன்ஜீலின் சாராம்சம் குர்ஆன் தர்ஜுமாவில் உள்ளதா, இல்லையா? என்று எனக்குச் சொல்லும், அது உண்மையெனில், இனி ஒரு பொழுதும் நான் பைபிளை படிக்காதிருக்க என் இருதயத்தை ஸ்திரப்படுத்தும் பைபிள் உண்மையெனில், அதை உத்தம இருதயத்தோடும், திறந்த மனதோடும், விடா முயற்சியாய்ப் படிக்க உதவியருளும்”.

சரியான தீர்மானத்திற்குள் வருவதற்கு உதவிடுமாறு நான் எந்த மனிதனையும் அணுகவில்லை அல்லது எந்த மௌலவியையும், அறிவும் அனுபவமும் உள்ள இஸ்லாமிய நண்பர்களின் உதவியையும் நாடவில்லை. ஏனெனில், சரியான முடிவிற்கு வருவதற்காகவும், தேவ சித்தத்தை அறிந்து கொள்வதற்காகவும், சர்வத்தையும் அறிந்துள்ள, சகல ஞானமுள்ள கடவுள் எனக்கு மெய்வழியை காண்பிக்க வேண்டும் என்று கெஞ்சி மன்றாடினேன்.

**மரணத்திற்குப்பிறகுதான் உண்மையான வாழ்க்கை துவங்குகிறதென மதப்பற்றுடைய ஒவ்வொருவரும் நம்புகின்றனர்.** மேலும் மரணத்திற்குப்பிறகு, ஒன்று நித்திய நரக அக்கினியில் வாதிக்கப்படும் ஆக்கினைத்தீர்ப்பும்; அல்லது

மற்றொன்று தேவனுக்கு மகிமையாக, அவருடன் பேரின்ப வாழ்வில் பரலோகத்தில் ஜொலிப்பேன் என்றும் நிச்சயமாக நம்பி வந்தேன். இவ்விரு நித்திய முடிவுகளைப் பற்றி நான் அலட்சியமாய் இருக்கவில்லை.

எடுத்துக்காட்டாக, நாம் பத்து பவுன் தங்கம் வாங்கியிருப்பதாகக் கொள்வோம். நாம் ஏமாந்து விடாத படிக்கும், பின் ஒருக்காலும் வருந்தாத படிக்கும், அதைப் பெற்றுக் கொண்ட உடனேயே, திருப்திகரமான முறையில் சோதித்துப் பார்ப்போம் அல்லவா? அப்படியானால் நம்முடைய ஆத்துமாவின் எதிர்காலத்தைப்பற்றி நமக்கு நிச்சயமிருக்க வேண்டியது எவ்வளவு அவசியமாகிறது! பரலோக பாக்கியங்களின் உரிமையாளரான எல்லாம் வல்ல பரிசுத்த தேவனின் திருச்சித்தப்படி நம்முடைய வாழ்க்கையும், விசுவாசமும், தொழுகையும் இருக்கின்றதா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். இல்லாவிடில், நாம் நித்தியமாக நமது கவனக்குறைவிற்காக வருந்திக் கொண்டே இருக்க வேண்டும். மோட்சத்தையும், நரகத்தையும் சிருஷ்டித்தவர் ஒரே மெய்யான தேவன் என்று எப்பொழுதுமே நிச்சயமாக அறிந்திருந்தேன். ஆதலால் இதனைக் குறித்து கிறிஸ்தவ அல்லது முஸ்லிம் வல்லுநர்களின் கருத்துக்களையோ அல்லது



ஆலோசனைகளையோ நாடவில்லை. அவர்களும் மனிதர்கள்தானே? ஆதலால் அவர்கள் தேவ சித்தப்படி மெய்யுண்மையை தெரிந்திருக்க வாய்ப்பில்லையல்லவா! எனவே எல்லா சத்தியத்திற்கும் ஏகபோக உரிமையாளரான கடவுளை அணுகி அவரே எனக்கு மெய் வழியைக் காண்பிப்பார் என்ற முழு நம்பிக்கையுடன் அவரிடமே இறைஞ்சி மன்றாடினேன்.

அவர் என் விண்ணப்பங்களுக்கு மறு உத்தரவு அருளின படியால் என் தேவனைத்துதிக்கிறேன்! சத்தியத்தை அறிய வேண்டும் என்ற ஆர்வத்துடனும், தாகத்துடனும் கேட்கின்ற ஒவ்வொருவருக்கும் அவர் மறுப்பதில்லை என்பது உண்மையாயிற்று.

அந்த சமயத்தில் குர் ஆன் 5:68ஆம் ஆயத்தைத் தவிர, வேறுபல குர்-ஆனின் வாக்கியங்களும் அழுத்தந்திருத்தமாக என் நினைவிற்கு வந்தன. உதாரணமாக

وَلَقَدْ أَتَيْنَا مُوسَى ٱلْكِتَـٰبَ فَلَا تَكُنْ فِي مِرْيَةٍ مِن لِّقَآئِهِ.

நிச்சயமாக நாம், மூஸாவுக்கும் ஒரு வேதத்தை கொடுத்திருந்தோம். ஆகவே நபியே! அவர் அதனை பெற்றதைப் பற்றி நீர் சந்தேகிக்காதீர். நாம் மூஸாவுக்கு கொடுத்த அதனை, இஸ்ராயீலின் சந்ததிகளுக்கு

ஒருவழி காட்டியாக ஆக்கினோம் (32:23).

وَقَفَّيْنَا عَلَىٰٓ ءَاثَٰرِهِم بِعِيسَى ٱبْنِ مَرْيَمَ مُصَدِّقًا لِّمَا بَيْنَ يَدَيْهِ مِنَ ٱلتَّوْرَىٰةِ وَءَاتَيْنَٰهُ ٱلْإِنجِيلَ فِيهِ هُدًى وَنُورٌ وَمُصَدِّقًا لِّمَا بَيْنَ يَدَيْهِ مِنَ ٱلتَّوْرَىٰةِ وَهُدًى وَمَوْعِظَةً لِّلْمُتَّقِينَ.

முன்னிருந்த நபிமார்களாகிய அவர்களுடைய அடிச்சுவடுகளிலேயே மர்யமுடைய மகன் ஈஸாவையும், நாம்அனுப்பிவைத்தோம். அவர் தம்முன் இருந்த தவ்றாத்தை உண்மையாக்கி வைப்பவராக இருந்தார். அன்றி, அவருக்கு இன்ஜீல் என்னும் வேதத்தையும் நாம் அருளினோம். **அதில் நேர்வழியும் பேரொளியும் இருக்கின்றன. அது தன் முன்னுள்ள தவ்றாத்தை உண்மையாக்கி வைக்கின்றது.** பயபக்தியுடையோருக்கு அது ஒரு நேர்வழி காட்டியாகவும் நல்லுபதேசமாகவும் இருக்கின்றது (5:46)

அடுத்த வசனத்திலும் இதே கருத்துதான் தொடர்வதைப் பார்க்கிறோம்.

وَلْيَحْكُمْ أَهْلُ ٱلْإِنجِيلِ بِمَآ أَنزَلَ ٱللَّهُ فِيهِ وَمَن لَّمْ يَحْكُم بِمَآ أَنزَلَ ٱللَّهُ فَأُو۟لَٰٓئِكَ هُمُ ٱلْفَٰسِقُونَ.

இன்ஜீலையுடைவர்கள், அதில் அல்லாஹ் அறிவித்திருக்கும் கட்டளைகளின் பிரகாரமே



தீர்ப்பளிக்கவும் எவர்கள் அல்லாஹ் அருளிய கட்டளைகளின் பிரகாரம் தீர்ப்பளிக்கவில்லையோ அவர்கள் நிச்சயமாகப் பாவிகள் தாம்! (5:47)

إِنَّ ٱلَّذِينَ ءَامَنُوا۟ وَٱلَّذِينَ هَادُوا۟ وَٱلنَّصَٰرَىٰ وَٱلصَّٰبِـِٔينَ مَنْ ءَامَنَ بِٱللَّهِ وَٱلْيَوْمِ ٱلْءَاخِرِ وَعَمِلَ صَٰلِحًا فَلَهُمْ أَجْرُهُمْ عِندَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُونَ.

விசுவாசிகளாயினும், யூதர்களாயினும், கிறிஸ்தவர்களாயினும் ஸாபியீன்களாயினும் - எவர்கள் அல்லாஹ்வையும் இறுதிநாளையும் உண்மையாகவே விசுவாசித்து, நற்கருமத்தை செய்தார்களோ அவர்களுக்கு, அவர்களுடைய கூலி அவர்களுடைய இறைவனிடத்தில் நிச்சயமாக உண்டு, மேலும், அவர்களுக்கு எவ்வித பயமுமில்லை; அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள் (2:62)

கடவுளின் திருச்சித்தத்திற்கு இசைவாகவே தவ்றாத்தும் இன்ஜீலும் யதார்த்தமான சத்திய வழியைக் காண்பிக்கின்றன என்பதை வலியுறுத்துகின்ற வேறுபல குர் ஆனின் வசனங்களும் உண்டு. கடவுள் எனக்குள் பேசி என் இருதயத்தைத் தூண்டி விட்டபடியால் **குர்ஆனின் அதிகாரத்தையும், ஆதாரத்தையும் கொண்டு பைபிளை ஆழமாக, ஒழுங்காக கற்கலானேன்.**

எனது நள்ளிரவு ஜெபத்தில் நல்வழிகாட்டும்படி நான் இறைவனிடம் கெஞ்சி மன்றாடிக் கேட்டுக்

கொண்ட மறுநாள் காலையிலிருந்தே எனக்குள் பெரியதொரு மாற்றம் ஏற்பட்டதை உணர ஆரம்பித்தேன். அந்த நேரம் முதல் நான் பைபிளை பகைவனாக அல்ல, நல்ல நண்பனாக மதிக்க ஆரம்பித்தேன். அதிகாலையில் எழுந்தவுடன் மிகுந்த நம்பிக்கையுடனும் எதிர் பார்ப்புடனும். பரிசுத்த வேதாகமத்தின் ஒவ்வொரு வார்த்தைகளையும் கருத்தூன்றிப் படிக்க ஆரம்பித்தேன். ஏனென்றால், என்ன கிரயம் செலுத்தியாவது உண்மையை அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் மேலிட்டது.

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

“அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால் (துவங்குகின்றேன்)”

“In the name of Alah.
the Merciful the compassionate”

என் வார்த்தைகளை உச்சரித்து விட்டு பைபிளை திறந்து வாசிக்க ஆரம்பித்தேன். என் கண்களில் முதலில் பட்ட வசனம் உபாகமம் 18:18 ஆகும். இவ்வசனமே முன்பு பன்முறை கிறிஸ்தவர்களையும் சுவிசேஷகர்களையும், பிரசங்கி மார்களையும் மடங்கடிப்பதற்காக நான் வீராவேசத்துடன் பிரயோகித்த



சம்மட்டியாக இருந்தது. அப்படிச் செய்வதின் மூலமாக அவர்கள் அனைவரும் முஹம்மது நபியை விசுவாசிக்க வேண்டும். அங்கீகரிக்க வேண்டும் என்று எதிர் பார்த்தேன். ஏனெனில், என்னைப் போல ஒரு தீர்க்கதரிசியை எழும்பப் பண்ணுவார் என்ற சொற்றொடர் முஹம்மது நபியைத்தான் குறிக்கும் என்று குதர்க்கம் பண்ணினேன். ஆனால் அந்தக் காலை வேளையில். இந்த வசனத்தின் பொருளே எனக்கு எதிர்மாறாகப்பட்டது! மெய்யாகவே, பயபக்தியுடனும், விசுவாசத்துடனும் பைபிளைப் படிப்போருக்கு மெய்ஒளி கிடைக்கிறது. அவர்கள் இருதயம் பரிசுத்த ஆவியினால் நிறைந்திருந்தால் அவர்கள் திருவசனங்களின் உண்மைப் பொருளைக் கண்டு கொள்கின்றனர். ஆனால் பைபிளை விசுவாசிக்காதவர்களுக்கோ, அது மூடப்பட்டு முத்திரை இடப்பட்டுள்ள புஸ்தகமாகவும், அறிவதற்கு அரிதான நூலாகவும் தோன்றுகிறது உபாகமம் 18:18ல் இவ்வாறு காண்கிறோம்.

“உன் தேவனாகிய கர்த்தர் என்னைப் போல ஒரு தீர்க்கதரிசியை உனக்காக உன் நடுவே உன் சகோதரரிலிருந்து எழும்பப் பண்ணுவார்; அவருக்கு செவி கொடுப்பீர்களாக”

அநேக காலமாக இந்த தீர்க்கதரிசன வசனம் முஹம்மது நபியைத்தான் குறிப்பிடுவதாக அர்த்தப்படுத்திக் கொண்டிருந்தேன். ஏனெனில் மோசே: என்னைப் போல ஒரு தீர்க்கதரிசி என்று அறிவிப்பதிலிருந்து இந்த முன்னறிவிப்பு முஹம்மது நபிக்கே முற்றும் பொருந்தும் என்று அர்த்தப்படுத்தினேன். அதாவது மோசேக்கும் முஹம்மதுவுக்கும் அநேக ஒற்றுமைகள் இருக்கின்றன:

சரீரப் பிரகாரமான தாய்க்கும் தகப்பனுக்கும் மகனாக மோசே பிறந்தது போல, முஹம்மதுவுக்கும் பெற்றோர்கள் இருந்தனர். இவ்விருவரும் இயேசுக்கிறிஸ்துவைப் போல பிறக்கவில்லை; இயேசுக் கிறிஸ்துவுக்கு மனுஷீக தந்தையில்லை, தாய் மட்டுமே உண்டு.

- மோசே பெரியவரான போது விவாகம் செய்து கொண்டார்; அதுபோலவே முஹம்மதுவும் திருமணம் செய்து கொண்டார்; ஆனால் இதற்கு மாறாக இயேசுக்கிறிஸ்து விவாகமின்றி வாழ்ந்தார்.
- மோசேக்கு குமாரர்கள் இருந்தது போல முஹம்மதுவுக்கும் பிள்ளைகள் இருந்தனர்; ஆனால் இயேசுக்கிறிஸ்துவோ இவர்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டவர் என்றறிவோம்.



- மோசே முதிர்வயதாகி மரித்து அடக்கம் பண்ணப்பட்டார்; அப்படியே முஹம்மதுவுக்கும் சம்பவித்தது. ஆனால் இயேசுக்கிறிஸ்துவின் வாழ்க்கை நிறைவு பெற்ற விதம் வித்தியாசமாக உள்ளது. சிலுவையில் மரித்த அவர் அடக்கம் பண்ணப்பட்டாலும், அவர் உயிர்த்தெழுந்து பரலோகம் சென்றார். அவருடைய கல்லறை வெறுமையாக இருக்கிறது.

இவ்வாறிருப்பதால் உபாகமம் 18:18 இயேசுக் கிறிஸ்துவுக்கல்ல, முஹம்மதுவுக்கே பொருந்தும் என்று அது வரையிலும் நினைத்து வந்தேன். இயேசுக்கிறிஸ்துவை ஒரு தீர்க்கதரிசியாகப் பாவித்து மோசே எழுதியிருக்க மாட்டார் என்று யூகித்தேன். மேலும் கிறிஸ்தவ விசுவாசத்தின்படி கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று கருதப்படுவதால் இவ்வசனம் அவரைக் குறிக்காது என்றும் அனுமானித்தேன். ஆனால் அந்த நாளில், இந்த வார்த்தைகளை மெதுவாக நிறுத்தி வாசிக்கும் பொழுது, அதன் உள் அர்த்தத்தை புரிந்து கொள்ள வேண்டும் என்று வாஞ்சித்தேன். என்னைப்போல ஒரு தீர்க்கதரிசி என்ற சொற்றொடருக்கு வந்தபொழுது பரிசுத்த ஆவியானவர் என் ஆத்துமாவுடன் இவ்விதமாகக் கூறினார், மகனே, இது வரையிலும் மோசேக்கும்

முஹம்மதுவுக்கும் உள்ள மனுஷீக ஒற்றுமைகளை மட்டும் நீ எடுத்துரைத்தாய், ஆனால் இவை இந்த தீர்க்கதரிசன உண்மைக்கு கொஞ்சமும் பொருந்தாது.

முதலாவதாக, மோசேயும் முஹம்மதுவும் தாய் தகப்பன் மாருக்கு பிறந்தவர்கள் என்றால் மற்ற மனிதர்கள் எல்லாருமே அப்படித்தானே பெற்றோர்களை உடையவர்களாக பிறந்திருக்கின்றனர்.

இரண்டாவதாக, மோசேயும் முஹம்மதுவும் குடும்ப வாழ்க்கை நடத்தினதுதான் அவர்களுக்குள்ள ஒற்றுமையென்றால், அவர்கள் இருவரும் உலகத்திலுள்ள மற்றெல்லா மனிதரைப் போலத்தான் இருக்கின்றனர்! எனவே இந்த ஒற்றுமையை வைத்துக் கொண்டு முஹம்மதுவை ஒரு தீர்க்கதரிசி என்று கூறுவது எவ்வாறு ஏற்புடையது.

மூன்றாவதாக, மோசேக்கும் முஹம்மதுவுக்கும் பிள்ளைகளும் வாரிசுகளும் இருந்தார்கள் என்பது எதைக்குறிக்கிறது? பிற மனிதர்களைப் போலவேதான் அவர்களும் இருந்தனர் என்ற உண்மையை மாத்திரம் குறிப்பிடுகின்றது. இந்த அடையாளத்தை மட்டும் வைத்துக் கொண்டு முஹம்மதுவின் நபித்துவத்தை நிரூபிக்க முயல்வது அறிவுடமை ஆகாது.

நான்காவதாக, இருவரும் முதிர்வயதிலே மரித்து



அடக்கம் பண்ணப்பட்டனர் என்ற உதாரணத்தை வைத்துக்கொண்டு பிந்தின வரும் முந்தினவரைப் போலவே தீர்க்கதரிசிதான் என்று உண்மைப்படுத்த நினைப்பது, மற்றெல்லா மனிதர்களுமே தீர்க்கதரிசிகள் தான் என்று முடிவு செய்வது போலாகும். ஏனென்றால், மரணத்திற்குப்பின் அடக்கம் செய்யப்படுதல் எல்லா மனிதர்களுக்கும் ஏற்படுவதுதான் அதில் எவ்வித சிறப்புத்தன்மையும் இல்லையே!

இந்தக் கருத்தோட்டத்தின் முடிவாக, மோசேயின் தீர்க்கதரிசனம், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவர் இயேசுக்கிறிஸ்துதான் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது என்பது மிகமிகத் தெளிவாக எனக்கு வெளிப்படலாயிற்று. இக்காரணத்தை முன்னிட்டு, எல்லா மனிதருக்கும் பொருந்தாத, மோசேக்கும் இயேசுக் கிறிஸ்துவுக்கு மாத்திரம் உண்மையாகக் கூடிய, நிகரில்லா ஒற்றுமைகளை தான் தேடிக் கண்டு பிடிக்க வேண்டியதாயிருந்தது. மற்றவர்களுடன் சம்மந்தப்படுத்த முடியாதது, மோசேக்கும் இயேசுக்கிறிஸ்துவுக்கும் மாத்திரமே உண்மையாகக் கூடிய நிகரில்லா உவமைகள் அநேகம் தலை சிறந்து விளங்குவதைக் கண்டுபிடித்தேன் அவை முறையே.

1. மோசே சிசுவாக இருக்கையில் அவரைக் கொன்று போடும்படி பார்வோன் பயமுறுத்திக் கொண்டிருந்தான்; அஃதே போன்று இயேசுவின் குழந்தை பருவத்தில் அவரையும் கொன்று போட ஏரோது முயற்சித்தான். இவ்வாறு பிறந்த குழந்தைகளையெல்லாம் உடனே கொன்று போடுவதற்கு உலகில் முயற்சிகள் நடப்பதில்லை.

2. மோசே பிறந்த வேளையில், எபிரெயருக்கு பிறக்கின்ற எல்லா ஆண் மகவுகளும் உடனே கொல்லப்பட வேண்டும் என்று பார்வோன் உக்கிர கோபத்துடன் கட்டளையிட்டிருந்தான். இயேசு பிறந்த வேளையிலும் உடனே அவரை அழித்துப் போட இயலாமல் போனதால், தன் ராஜ்யத்திலெங்கும் இரண்டு வயதிற்குட்பட்ட ஆண்பிள்ளைகள் அனைவரும் சங்கரிக்கப்பட வேண்டும் என்று ஏரோது கோபாவேசத்துடன் கட்டளை பிறப்பித்தான்! முழு உலக வரலாற்றிலும், இந்த இரண்டு நபர்கள் மீதுதான் இவ்வளவு காய்மகாரமும், எரிச்சலும் ஏற்பட்டிருந்ததாக அறிகிறோம்.

3. தமது சிசுப் பருவத்தில் மோசே பார்வோனின் மகளால் பராமரிக்கப்பட்டார்; ஆதலால் அவளே மோசேயின் வளாப்புத்தாயாவாள். அங்ஙனமே,



குழந்தையாகிய இயேசுவை பாதுகாத்து வந்தவர் அவருடைய வளர்ப்புத் தகப்பனாரான யோசேப்பு ஆவார். இவ்வாறு குழந்தைப் பருவத்தில், அவருடைய உயிருக்கே ஆபத்து ஏற்பட்ட பொழுது, தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களைக் கொண்டு தகவல் பண்ணப்பட்டவர்கள் வெகு சிலரே! மோசேயும் இயேசுவும் அதில் அடங்குவர் என்பது ஆச்சரியமாக இல்லையா.

4. மோசே பிறந்த வீடும், குடும்பமும் வேறு; ஆனால் வளர்ந்த இடமும் சூழ்நிலையும் வேறு; அதைப் போன்றே இயேசுவும் பிறந்த நாட்டை விட்டு விட்டு, அகதியாக நாடு கடத்தப்பட்டவராக அநேக வருஷங்களை எகிப்திலே கழித்தார். இப்படி எல்லாப் பிள்ளைகளுக்கும் சம்பவிப்பதில்லை. இவ்விருவருக்கும் மாத்திரமே இது பொருந்தும் என்றால் மிகையாகாது.

5. தேவன் தம்முடைய பிரதிநிதியாகவும், ஸ்தானாதிபதியாகவும் இஸ்ரவேலரிடம் அனுப்புகின்ற வேளையில் அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்யக் கூடிய சக்தியைக் கொடுத்து அனுப்பினார். அது போலவே இயேசுவும் தேவனுடைய ஜிவனுள்ள வார்த்தையாக, வியாதியஸ்தரை சொஸ்தமாக்கவும்

மரித்தோரை உயிரோடெழுப்பவும், வேறு பல அற்புதங்களைச் செய்யவும் வல்லவராக தேவனால் அபிஷேகிக்கப்பட்டிருந்தார்.

6. மோசே இஸ்ரவேல் மக்களை எகிப்தின் அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்கி, வெளியே கொண்டு வந்தார்; ஆனால் இயேசுவோ மக்கள் எல்லாருடைய பாவச் சங்கிலிகளையும் உடைத்தெறிந்து அவர்களை மரணத்திலிருந்து விடுதலை செய்தார்.

7. மோசே எல்லாக் காரியங்களிலிலும் தேவனுக்கு கீழ்ப்படிந்திருந்து, அவருடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவராய் இருந்தது போல இயேசுக்கிறிஸ்துவும் எல்லாக்காரியங்களிலேயும், மரண பரியந்தமும் தம்மை அனுப்பினவருக்கு உண்மையுள்ளவராயிருந்தார்.

மேற்கூறின இந்த சிறந்த அம்சங்களெல்லாம் உபாகமம் 18:18ன் தீர்க்கத்தரிசனம் முஹம்மதுவுக்காக அல்ல, மாம்சத்தில் அவதரித்த தேவனுடைய வார்த்தையாகிய இயேசுக் கிறிஸ்துவிலேயே முற்றிலும் நிறைவு பெறுகிறது.

இவ்வாறு பற்பல அற்புதமான வெளிப்பாடுகளின் மூலமாக பைபிள் உண்மையிலேயே தேவனுடைய



வார்த்தைதான் என்ற மனப்பிரகாசத்தையும், உள்ளுணர்வையும் தந்த அளவில்லாத தேவனுடைய அன்பு என்மீது காட்டப்பட்ட போதிலும், நான் இன்னும் கிறிஸ்தவனாகிறதற்கு ஆயத்தமாக இல்லை. ஏன்? ஏனென்றால், இன்னும் சில கிறிஸ்தவ கோட்பாடுகளை ஏற்றுக்கொள்ள முடியாதவனாக இருந்தேன் அவற்றுள் பிரதானமானது கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்பது தான். சிறு பிராயமுதல் எனக்கு கற்பிக்கப்பட்டு வந்ததும், பிறகு நான் மற்றவர்களுக்கு கற்பித்ததுமான போதனை என்ன வென்றால்:

لَمْ يَلِدْ وَلَمْ يُولَدْ

அல்லாஹ் சந்ததிகளை விட்டும் மிகப் பரிசுத்தமானவன்

لَا إِلَٰهَ إِلَّا ٱللَّهَ

அல்லாஹ்வைத் தவிர வேறொரு தேவன் இல்லை

لَّقَدْ كَفَرَ ٱلَّذِينَ قَالُوٓاْ إِنَّ ٱللَّهَ ثَالِثُ ثَلَٰثَةٍ

அல்லாஹ் மூவரில் மூன்றாமவன் என்று கூறியவர்கள் திட்டமாக காஃபிர்களாகிவிட்டனர்: ஆண்டவர்கள் மூவர் என்றும் கூறாதீர்கள் (4:171)

இயேசுக்கிறிஸ்து மெய்யாகவே சிலுவையில் அறையுண்டு மரித்தார் என்ற அடிப்படை கிறிஸ்தவ

நம்பிக்கையையும் என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை ஈஸா அல் மஸிஹ் என்று குர்ஆனால் அழைக்கப்படுகின்றவரும், கிறிஸ்தவ மதக் கோட்பாட்டின்படி தேவனுடைய குமாரன் என்று பாராட்டுக்குரிய முறையில் அழைக்கப்படுகிறவருமான இயேசு உண்மையும் உத்தமமுமான இறைத்தூதுவர் என்றால், அவரை அவ்வளவு சுலபமாக யூதர்கள் பிடித்து, அவமானப்படுத்தி, சிலுவையில் அறைந்து சாகும் வரை சித்திரவதைப்படுத்துவதற்கு கடவுள் இடங் கொடுத்திருப்பாரா என்பது ஒரு பெரிய கேள்விக்குறியாகவே என் மனதில் இருந்து வந்தது. கடவுள் ஏன் அவரை பாதுகாக்காமல், இந்த அவல மரணத்திற்கு இடம் கொடுத்தார்? எனது மகனை இப்படி ஒரு எதிரிக் கூட்டத்தினர் சித்திரவதை செய்து, சிலுவையில் சாகடிக்கத் துணிவார்கள் எனில், நான் அதைப்பார்த்துக் கொண்டு சும்மா இருப்பேனா? என்ன விளைவுகள் ஏற்படினும் அதைச் சற்றேனும்சிந்தித்துப் பாராமல் எனது அருமை மகனை அந்த கொடூரமான முடிவினின்று காப்பாற்றுவதற்காக என்னால் இயன்ற அளவு பிரயாசப்பட மாட்டேனோ? யூதர்கள் மீதுள்ள தமது வல்லமையையும் அதிகாரத்தையும் எவ்வாறு அல்லாஹ் இழந்து போக முடியும்? அப்பொழுது இவற்றையெல்லாம் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.



மிகுந்த மனக்குழப்பம் அடைந்தவனாய், இந்தக் கேள்விகளுக்கெல்லாம் ஏதாவது தகுந்த விளக்கம் கிடைக்குமா என்ற நோக்கத்தோடு சில பாதிரிகளையும், சுவிசேஷகர்களையும் அணுகி, ‘கிறிஸ்து ஏன் தேவனுடைய குமாரன் அல்லது கர்த்தர்’ (தூஹான்) என்று அழைக்கப்படுகிறார்’ எனவும், தேவன் திரித்துவமாக இருக்கிறார் என்றால் அதன் பொருள் என்ன என்றும் வினவினேன். மேலும் ஏன் தேவனுடைய குமாரனாகிய இயேசுக் கிறிஸ்து யூதர்களால் சிலுவையில் அறையப் பட்டவராய் மரித்தார் என்பதையும் ஆராய்ந்து பார்த்தேன். இன்னும் “பிதாக்களின் பாவங்களை பிள்ளைகள் சுதந்தரித்துக் கொள்ளுகிறார்கள்” அல்லது ஆதாமினால் தோன்றிய ‘ஜென்மபாவம்’ என்பது வாழையடி வாழையாக மனுக்குலத்தை பற்றிப்பிடித்துக் கொண்டது என்ற மூலக் கோட்பாட்டையும் சந்தேகித்தவனாய் அது தேவனுக்கு அடுக்காத அநீதியான ஆக்கினைத்தீர்ப்பு ஆகும் என்றும் அவர்களிடம் விசாரனை செய்தேன்.

நான் விசாரித்தப் போதகர்கள் எல்லாரும் மிகவும் தயவுடனும், பொறுமையுடனும் என் கேள்விகளுக்கெல்லாம் தகுந்த ஆதாரங்களுடன் பதிலளித்தார்கள் என்ற போதிலும் அந்த வேளையில் என்னால் எல்லாவற்றையும் புரிந்து கொள்ள முடியவில்லை. அப்பொழுது சமய மற்றும் கலாச்சார

பேதங்களும், பின்னணிகளும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள பிளவுபோல் இருந்தன. இந்த வித்தியாசமான மத அடிப்படைகளை சமரசம் செய்வதற்குரிய, இருசாராரும் இசைந்த மனதுடன் ஒத்துக் கொள்ளக்கூடிய பொது உண்மைகளை எடுத்தியம்பு வதற்குரிய ஆராய்ச்சி நடத்தப்படவில்லை. பல்வேறு சமயங்களுக்கிடையில் இருக்கும் கொள்கைப் பேதங்களையும், கருத்து வேறுபாடுகளையும் நன்கு ஆராய்ந்து பார்த்து, இவைகளை நீக்குவதற்கோ அல்லது குறைப்பதற்கோ எவ்வாறு இணைப்புப் பாலங்கள் அமைக்கலாம் என்று கண்டுபிடித்தல் அவசியம். அக்காலத்தில் நான் ஒரு வானொலிப் பெட்டி போலவும், கிறிஸ்தவ பிரசங்கிமார்கள் ஒலிபரப் பாளர்களைப் போலவும் இருந்த சூழ்நிலை காணப்பட்டது. இருசாராரிடையுமே பழுதொன்றும் இல்லாவிடினும் செய்தி அனுப்புவோரின் அலைவரிசையும் கேட்பவனாகிய எனது அலைவரிசையும் வெவ்வேறாக இருந்தன. எனவே அவர்களின் ஒலிபரப்பை என்னால் வாங்கிக் கொள்ள முடியவில்லை. சுருங்கக் கூறினால், எடுத்துக்காட்டாக அவர்கள் 19 மீட்டர் அலைவரிசையில் செய்திகளை அனுப்பிக் கொண்டிருக்கும்போது நான் எனது வானொலிப்பெட்டியை 31 மீட்டர் அலைவரிசையில் வைத்துக் கொண்டிருந்தால் என்னென்ன விளைவு ஏற்படும் என்பதை சொல்லாமலே புரிந்து கொள்வீர்கள்.



இவ்வாறு கிறிஸ்தவ வியாக்கியானிகள் மிகுந்த அனுதாபத்துடன் கூறின விளக்கங்களெல்லாம் எனது வலது காதில் நுழைந்து இடது காது வழியே வெளியேறி விட்டன. அவர்களுடைய சொல் அகராதி எனக்கு விபரீதமாகப்பட்டதால் அவர்கள் கூறின ஒன்றும் என் இதயத்தைத் தொடவில்லை. எனது பின்னணியை அவர்கள் அறியாத காரணத்தால், நான் எதிர்பார்த்த விதத்திலோ அல்லது நான் விளங்கிக் கொள்ளும் வகையிலோ அவர்களுடைய பதில்கள் அமையவில்லை. இருவருடைய சிந்தனாமுறைகளும், சோதனை முறைகளும், விடை காணும் வழிகளும் வித்தியாசமாக இருந்ததால் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளாமலேயே கடந்து சென்றனர்! இவ்வாறிருந்த போதிலும், நான் நம்பிக்கையுடனிருந்தேன். நான் உண்மையை அறிந்து கொள்வதற்கு தேவன் ஒருமுறை உதவி செய்வார் என்றால் பின்னர் இந்த உண்மைப்பாதையிலேயே நான் நடப்பதற்கு வழிகாட்டுவார் என்றும் அப்பொழுது என்னுடைய கேள்விகளும், பிரச்சனைகளும், குழப்பங்களும் தீர்ந்துவிடும் என்றும் மிகுந்த ஆவலுடன் எதிர் நோக்கிக் காத்திருந்தேன்.

“தேவனே தேவனுடைய குமாரன் அல்லது கர்த்தர் (தூஹான்) என்ற பட்டங்கள் இயேசுக் கிறிஸ்துவுக்கு அளிக்கப்படுவதை நீர் எனக்கு மிகுந்த

தயவுடனும், கருணையுடனும் விளக்கித் தர வேண்டும் என்று கெஞ்சுகிறேன். மேலும் பரிசுத்த திரித்துவத்தையும், சிலுவையின் இரகசியத்தையும் எனக்கு வெளிப்படுத்தித்தர வேண்டும் என்று உமது பாதம் பணிந்து மன்றாடுகிறேன். இப்பொழுதும் தேவனே பரிசுத்த வேதாகமம் தெய்வீகநூல் என்ற உள்ளுணர்வை நீர் எனக்குத் தந்திருக்கிறபடியால், நிச்சயமாகவே நீர் எனக்கு எல்லாவற்றையும் புரிந்துகொள்ளவும், மனதில் பதித்து வைக்கவும், எனது ஆவிக்குரிய தடைகளை எல்லாம், இதுநாள் வரைக்கும் சத்தியம் என்று நிரூபிக்கப்பட்டதும், இனிமேலும் வானமும் பூமியும் ஒழிந்து போனாலும், ஒருபோதும் மாறாத, உண்மையுள்ள உமது பரிசுத்த வேதாகமத்தின் மூலமாகவே விளக்கிட வேண்டும் என்னை நேர்வழிப்படுத்திட வேண்டும் என்று வெகுமனத்தாழ்மையுடன் கெஞ்சி மன்றாடுகிறேன்" என்பதுதான் எனது இடைவிடாத ஜெபமாக இருந்தது.

நிச்சயமாக அநேக வேளைகளில், என்னுடைய இருதயத்தில் கிரியை செய்து கொண்டிருந்த தம்முடைய ஆவியாகிய பரிசுத்த ஆவியானவரால் எனக்கு சகாயம் செய்தார். எனக்கிருந்த தடைகளை யெல்லாம் மேற்கொண்டு ஜெபிக்க எவ்வாறு ஒத்தாசை புரிந்தார் என்பதை இந்நூலின் வாயிலாக மேலும் விளக்க முனைகிறேன்.



## இயேசு தேவனுடைய குமாரன் என்று அழைக்கப்படுகிறார்.

"ஆதியிலே வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது.... அந்த வார்த்தை மாம்சமாகி கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார் அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது. என்று யோவான் நற்செய்தி நூலில் 1:1-14ல் பறைசாற்றப்பட்டுள்ளது.

இந்த வசனத்தில், 'தேவனுடைய குமாரன்' என்பதற்கு ஆவிக்குரிய அர்த்தம் வெளிப்படுத்தப் பட்டுள்ளது. 'தேவனுடைய வார்த்தை மாம்சமாகி' இயேசுக்கிறிஸ்து என்ற மனிதனாக பூலோகத்தில் வந்து பிறந்தார். ஆதலால் இயேசு, 'ஜீவனுள்ள தேவனுடைய வார்த்தை' என்று 1 யோவான் 1:1ல் அறிமுகப் படுத்தப்படுகிறார்.

அநேகர் பிழையாக எண்ணுகின்றபடி பிதாவாகிய தேவன் உயிரியல் அடிப்படையில் சரீரப் பிரகாரமான ஒரு குமாரனை பிறப்பித்தார் என்ற அர்த்தத்தில் இயேசுவை 'தேவனுடைய குமாரன்'

வார்த்தை ஆவியானவர் மூலமாக கன்னிகையாயிருந்த மரியாளிடத்தில் வெளிப்பட்டார்.

முஹம்மது நபியும் அடிக்கடி இந்த வசனத்தின் மெய்ப்பொருளை உணர்ந்தவராய் இவ்வாறு சாட்சி பகன்றார்:

عِيسَى فَإِنَّهُ رُوحُ ٱللَّهِ وَكَلِمَتُهُ

"மெய்யாகவே இயேசுகடவுளுடைய ஆவியாகவும், கடவுளுடைய வார்த்தையாகவும் இருக்கிறார்." (ஹதீத் அனாஸ் பின் மாலிக் - முத்தியாரா ஹதீத், பக்கம் 353)

'அவனுடைய வார்த்தை' அல்லது 'கடவுளுடைய வார்த்தை' என்ற சொல் இயேசுக்கிறஸ்துவின் சரீரமாயிற்று என்பதாக டாக்டர். ஹஸ்புல்லாபக்ரி தமது நூலாகிய 'நபி ஈஸா தலாம் அல்குர்ஆன் என்ஸ்' (குர்ஆனில் இயேசு நபி) 109ம் பக்கத்தில் கூறுகிறதாவது: "இயேசு நபியை தன் கருவிலேற்று பிள்ளையாக, பெற்றெடுக்க வேண்டும் என்று மர்யம் கட்டளைப் பெற்றாள். அவளிடத்தில் பிறப்பது தேவனுடைய வார்த்தையின் திரு அவதாரமாக இருப்பதால் இயேசு நபிக்கு 'கலிமத்து அல்லாஹ்' (தேவனுடைய வார்த்தை) என்ற பெயருமுண்டு.

அக்கணத்திலிருந்து, நான் இயேசுவை 'தேவனுடைய குமாரன்' என்று பகிரங்கமாய்



அறிவிப்பதற்கு கொஞ்சமும் தயங்கவில்லை; ஏனென்றால் இன்ஜீலும் குர்ஆனும் ஏகமனதுடன் சர்வ வல்லமையுள்ள தேவனின் ஜீவனுள்ள வார்த்தைதான் மனிதனாக அவதரித்தார் என்று ஆணித்தரமாக இயம்புகின்றன. இதற்கு முன்னர் இயேசுவை தேவனுடைய குமாரன் என்றழைப்பதற்கு என் நாவு கூசிற்று; ஏனென்றால் உயிரியல் அடிப்படையிலும், மனுஷீகரீதியிலும் கணவன்-மனைவி சேர்க்கையினால் மாத்திரமே பிள்ளை பெறக்கூடும் என்பதாக கருதி வந்தேன்.

அல்லாஹ் எவருடைய தேவையுமற்றவன் அவன் எவரையும் பெறவுமில்லை; எவராலும் பெறப்படவுமில்லை. ஆகவே அவனுக்குத் தகப்பனுமில்லை, சந்ததியுமில்லை, தவிர அவனுக்கு ஒப்பாகவும் ஒன்றுமில்லை (112:1-4)

இந்த "விசுவாச வாசகம்" அடிக்கடி இஸ்லாமியப் போதகர்களால் வலியுறுத்தப்படுகிறது. நானும் அவ்விதமாகவே தேவனுக்கு குமாரன் இல்லை என்று தம்பட்டம் அடித்து வந்தேன். "இயேசுக்கிறிஸ்து தேவனுடை குமாரன்" என்ற கிறிஸ்தவர்களின் அஸ்திபார உபதேசத்தையே கிள்ளி எறிவதற்கு அனுகூலமாக இருக்கிறது. இதுவும் கிறிஸ்தவர்கள் முழுமனதுடன் சம்மதிக்கக் கூடிய ஒரு போதனைதான். ஏனென்றால் உயிரினக் கோட்பாட்டின்படி தேவன்

விவாகம் செய்து ஒருமனைவியின் மூலமாக ஒரு குமாரனை பெற்றார் என்று கிறிஸ்தவர்கள் கனவிலும் நினைப்பதில்லை; அப்படிப்பட்ட துர்உபதேசம் அவர்களுக்கு தூரமாயிருப்பதாக! ஒப்பற்ற, விசேஷித்த அர்த்தத்தில் தான் தேவனுடைய வார்த்தையாகிய இயேசுவை தேவகுமாரன் என்று விவிலியம் பெயர் சூட்டுகின்றது. ஆனால் குர் ஆனில்தான் இந்தக் குறைவுள்ள, உலகப் பிரகாரமான வெளிச்சத்தில், "Walad" புதல்வன் 'வலத் وَلَدٌ என்று வர்ணிக்கப் பட்டுள்ளது. ஆனால் அரபிக்கிறிஸ்தவர்கள் சட்டரீதியில் "தேவ குமாரன்" 'இபின்' إِبْنٌ என்ற பதத்தைப் பிரயோகித்துள்ளனர். குர்-ஆனில் குறிப்பிடப்பட்டது போல் 'வலத்' என்று அங்க சரீரப்பிரகாரமான பிறப்பில்லாத இபின் Ibn என்ற வார்த்தையே சரியான பதம்.

சட்டபூர்வமான-தார்மீக அடிப்படையில் 'இபின்' إِبْنٌ என்ற வேதாகம அர்த்தத்தில் தேவகுமாரன் என்று இயேசுக்கிறிஸ்துவை அழைப்பதை குர்ஆனில் ஒரு ஆயத்தாகிலும் மறுக்கவில்லை என்று முடிவு செய்கிறேன். தாம்பத்திய உறவின் பலனாக தேவனுக்கும் மர்யமுக்கும்-பிறந்த புதல்வன்/மகன் என்று விளக்குவதை குர்ஆனும் பைபிளும் தேவ தூஷணமாக கருதுகிறது. நாமும் இதனை முழு மனதுடன் நிராகரிக்கிறோம்.



## இயேசுக்கிறிஸ்து கர்த்தர் என்று அழைக்கப்படுகிறார்

இந்தோனேஸிய மொழியில் கர்த்தர் என்பதற்கு தூஹான் எனப்படுகிறது)

இயேசுக்கிறிஸ்து ஏன் 'கர்த்தர்' என்று அழைக்கப்படுகிறார்? நான் ஏற்கனவே விளக்கிக் கூறினபடி, எனது வாழ்க்கையில் நெடுங்காலமாக, இயேசுவை 'கர்த்தராகிய/ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்து என்று சொல்லுவதற்கு இயலாதவனாக இருந்தேன், எனது சின்ன பருவத்திலிருந்தே

لَا إِلَهَ إِلَّا اللَّهُ

**"அல்லாஹ்வை தவிர வேறொரு தேவன் இல்லை**

என்று போதிக்கப்பட்டிருந்தேன்; நானும் மற்றவர்களுக்கு அவ்வாறே போதித்து வந்தேன்.

ஒருவேளை இயேசுவுக்கு, உலகப்பிரகாரமான தகப்பன் இல்லாத காரணத்தினால் அவர் கர்த்தர் என்று அழைக்கப்பட்டாரோ? இதுதான் விடையாக இருக்கக்கூடும், என்று யோசித்துக் கொண்டிருக்கும் பொழுது, ஆதாமும் அவ்வாறாகத்தானே தோன்றினார்; தாயும் தகப்பனும் இல்லாதவராக

அல்லவா அவர் சிருஷ்டிக்கப்பட்டிருந்தார்; ஆனால் அவர் கர்த்தர் என்று ஓரிடத்திலும் அழைக்கப்படவில்லையே! இதுவும் சரியான விளக்கமாகாது என்று நிராகரித்தேன். அல்லது, ஈஸாநபி அநேக அற்புதங்கள் செய்த காரணத்தால் அவர் 'கர்த்தர்' என்று அழைக்கப்படுகிறாரோ என்று மனதில் தோன்றினது. ஆனால் மோசேயும் அநேக அற்புதங்களைச் செய்திருந்த போதிலும் அவர் கர்த்தர் என்று அழைக்கப்படவில்லையே! அல்லது மரித்தோரையும் உயிரோடெழுப்பி, குஷ்டரோகிகளையும் குணமாக்க வந்தபடியால் இயேசுவை கர்த்தர் என்று அறிக்கை செய்தார்களோ? எலிசா தீர்க்கதரிசியும் அவ்விதமான பெரிய அற்புதங்களைச் செய்திருந்தார். என்ற போதிலும் எலிசா தேவனென்று அழைக்கப்படவில்லையே! அல்லது இயேசுவானவர் நேரே பரலோகத்திற்கு ஏறிச் சென்றபடியால், கர்த்தர் என்றும் கடவுள் என்றும் கருதப்படுகிறாரா? அப்படிக் கூறுவோமாயின், எலியா தீர்க்கதரிசியும் அக்கினிமயமான ரதத்தில் பரலோகத்திற்கு ஏறிச் சென்றாரே! ஆனால் அவரையாரும் கர்த்தர் என்று அழைக்கவில்லையே! பின்னர் ஏன் இயேசு மாத்திரம் கர்த்தர் என்று கண்ணியப்படுத்தப்படுகிறார்.

யோவான் சுவிசேஷம் 1:1இலும் 14இலும் 'தேவனுடைய வார்த்தை' மனிதனாக, இயேசுக்



கிறிஸ்து என்ற பெயரில் பிறந்தார். அதை முன்னிட்டு 1 யோவான் 1:1ல் "ஜீவ வார்த்தை' என்றும், வேறுவிதமாகக் கூறினால் 'தேவன் மனிதனாக அவதரித்தார்' என்றும் அழைக்கப்பட்டுள்ளார்.

"அவதாரம்" என்ற பதமும் அதைப்போன்ற மற்ற பதங்களும் மொழி பெயர்ப்பிலும் அல்லது பேச்சு வழக்கிலும் அகராதியில் இருப்பது போலவே அல்லது பொதுவான உலக வழக்கத்தின் படியோ 'கடவுளுக்கு / தேவனுக்கு' பயன்படுத்தக் கூடாது. இதற்கான காரணத்தை ஒரு எடுத்துக்காட்டின் மூலம் விளக்கலாம். "தேவன் இருக்கிறார் – மனிதனும் இருக்கிறான் என்று கூறும் பொழுது இங்கு பயன் படுத்தப்பட்டுள்ள 'இருத்தல்' என்ற பதம் தேவனைப் பொருத்தவரையில் ஒரு அர்த்தத்தையும், மனுஷனைப் பொருத்த வரையில் வேறொரு அர்த்தத்தையும் கொடுக்கிறதில்லையா? 'தேவன் இருக்கிறார்' என்றால் அவர் நித்தியமாக வசிக்கிறார்; எப்பொழுதுமே இருக்கிறார் என்று பொருள்படும். ஆனால் இந்த வினைச் சொல்லை மனிதனுக்கு அவ்வாறே பயன்படுத்த முடியாது; மனிதன் இடைக்காலத்தில் அல்லது வெகு அண்மையில் சிருஷ்டிக்கப்பட்டவன் தானே!

ஆதலால் தேவனைப் பொறுத்தவரையில் 'அவதாரம்' அல்லது 'அவதரித்தார்' என்ற சொல்லினை உலக மரபில் உபயோகிக்கக்கூடாது.

அகராதிகள் கூறுகின்ற படி, ஒரு யானை பூனையாக அவதரித்தால்; யானை மறைந்து விடும், பூனைமாத்திரமே காட்சியளிக்கும். அஃதே போன்று ஒரு கல் தங்கக்கட்டியாக மறுரூபப்படுத்தப்பட்டால் (அவதாரமாக்கப்பட்டால்) கல்லானது தனது முந்தின நிலமையை அல்லது தனித்தன்மையை இழந்துவிடும். கல் என்பது இருக்காது; ஆனால் அதற்கு பதிலாக தங்கம் இருக்கும். ஆனால் 'தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார்' தேவனுடைய வார்த்தை மனிதனானார்' என்று கூறும் பொழுது, அவருடைய தெய்வீகத்தன்மை என்று நாம் உணர்தல் அவசியம். 'நான் கர்த்தர். நான் மாறாதவர்' (மல்கியா 3:6)

தேவன் மனிதனாக அவதரித்தார், என்று உரைக்கும் போது, தேவன் இல் பொருள் ஆகிவிட்டார், மனிதன் மாத்திரமே மனிதனாக மாறினவர் மாத்திரமே இருக்கிறார் என்ற அர்த்தப்படாது. இவ்வாறு கூறுவது முற்றிலும் தவறு. தேவன் மாறாதவர் என்று பார்த்தோம். தேவன் மனிதனானார் என்றால் தேவனாகவும் இருக்கிறார், மனிதனாகவும் இருக்கிறார். என்பதுதான் மெய்ப்பொருள் விளக்கமாகும். இதனை மனித மொழியிலும் மூளையிலும் புரிந்து கொள்ளுவது மிகவும் சிரமம்தான். மேலும் தேவன் மனிதத் தோற்றத்தில் அல்லது மனிதனைப் போல வெளிப்பட்டார் என்று கருதினால் அதுவும் பொய்யாகி விடும்.



ஆதலால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மெய்யான தேவனும், மெய்யான மனிதனுமாக இருக்கிறார். தேவனுடைய சகலவித பண்புகளுமாகிய சித்தம், வல்லமை, பரிசுத்தம், அன்பு முதலியனவை அனைத்தும் அந்த மாம்ச சரீரத்தை எடுத்துக் கொண்ட இயேசு கிறிஸ்துவுக்குள் இருக்கிறது. இந்த இரகசியத்தை பின்வரும் வேதவாக்கியங்கள் நமக்கு துலாம்பரமாக வெளிப்படுத்துகிறது.

**"பிதா என்னிலும் நான் அவரிலும் இருக்கிறேன் (யோவான் 10:38)**

**"நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் (யோவான் 10:50)**

**"என்னைக் கண்டவன் பிதாவை கண்டான்" (யோவான் 14:9)**

**"தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரபிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது" (கொலோசெயர் 2:9)**

மேற்கூறிய அனைத்து வசனங்களும் இயேசு கிறிஸ்துவே சர்வ வல்லமையுள்ள தேவனென்றும் எல்லாம் அவருடைய ஆளுகைக்குள் இருக்கிற தென்றும் அவர் பிதாவுக்கு சமமானவரென்றும் நிரூபிக்கின்றன.

أَللّٰهُ رَبُّ ٱلْعَٰلَمِينَ

## “அல்லாஹ் அகிலங்கள் அனைத்திற்கும் ரப்பு”

அதாவது அவரே தேவனாகிய கர்த்தர் என்று குர்ஆன் அறிக்கையிடுகிறது. அங்ஙனமே தேவன் இயேசுவை ‘ஆண்டவரும், (கர்த்தரும்) கிறிஸ்துவு மாக்கினார்’ என்று வாசிச்சிறோம். இவ்வசனத்தில் இரண்டு பதங்களையும்-தேவன், கர்த்தர்-நம்மால் பாகுபடுத்திப் பார்க்க முடிகிறது. ‘தேவன்’ என்றால் ‘தியோஸ்’ (Theos) என்று கிரேக்க மொழியிலும் ‘அல்லாஃஹ்’ என்பது ‘கைரியோஸ்’ (KIRIOS) என்று கிரேக்க மொழியிலும் ‘ரப்பு’ (Rabb) என்று அரபியிலும் வருகிறதை நாம் அறிவோம். இரண்டாவது பதம் எப்பொழுதுமே அதிகாரம் அல்லது ஆட்சி செய்வதைக் குறிக்கின்றது. தேவனுடைய அதிகாரம் அல்லது இறையாண்மை இயேசுக்கிறிஸ்துவின் எல்லா விதங்களிலும் இருக்கிறதைக் காண்கிறோம்.

1. சிருஷ்டித்தல்
2. நீதிச் சட்டம் கொடுத்தலும், கட்டளையிடுதலும்
3. வழி நடத்துதலும், உதவியளித்தலும்
4. மன்னிப்பும், இரட்சிப்பும்
5. அவருடைய ஆவியினால் புதுப்பித்தல்



6. நியாத்தீர்ப்பு வழங்குதல்
7. மகிமை

கட்டளை இடுதலும், வழி நடத்துதலும், இரட்சித்தலுமாகிய தேவனுடைய அதிகாரம் இயேசுக்கிறிஸ்துவில் இருப்பதைக் காண்கிறோம். ஆதலால் என்றும் நம்முடைய ஒரே இரட்சகர்’ என்றும் அழைக்கப்படுகிறார் ஜீவனுள்ள வார்த்தையாக தேவனுடைய தெய்வீகத்தையும், இராஜரீகத்தையும் அமுலாக்கி நற்செய்தியை பிரசங்கிக்கவும், பாவ மன்னிப்பை அருளவும் செய்கிறார். இக்காரணத்தை முன்னிட்டே தேவனால் இயேசு ‘கர்த்தராக’ (அப்போஸ்தல நடபடிகள் 2:36 கொலோசெயர் 2:10) நியமிக்கப்பட்டுள்ளார்.

முற்றுமுடிய, பரிபூரணமாக இரட்சிக்கக் கூடியவரான படியாலும் இயேசு கர்த்தர் என்று அழைக்கப்படுகிறார் ‘**நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவிடத்தில் வரான்**’ (யோவான் 14:6)

இயேசுவை கர்த்தராக அறிக்கை செய்து ஏற்றுக் கொள்வதில் எனக்கிருந்த மாபெரும் தடை இஸ்லாத்தின் சாட்சியாகும்.

لَا إِلَهَ إِلَّا ٱللَّهَ

### “அல்லாஹ்வைத்தவிர வேறொரு தேவன் இல்லை”

இந்த இஸ்லாமிய அடிப்படை விசுவாசப் பிரமாணம் பரிசுத்த வேதாகமத்தை பொய்யாக்க வில்லை என்பதையும் ‘திட்டவட்டமாக’ கண்டு கொண்டேன், ஏனென்றால் யாத்திராகமம் 20:3இல் பத்துக் கட்டளைகளின் வரிசையில், முதல் கட்டளையாக இருப்பதே, “என் தேவனாகிய கர்த்தர் நானே; என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்”, என்பதாகும். இயேசுக்கிறிஸ்து தேவனுடைய வார்த்தை என்றும், தேவனுடைய ஆவி என்றும் குர்ஆன் பல இடங்களில் கூறி இருப்பதாலும் முஹமது இதற்கு அடிக்கடி சாட்சி பகர்ந்திருப்பதாலும் இயேசுக்கிறிஸ்துவினுடைய தெய்வீகத்தன்மையும், இறையாண்மையையும் நன்கு புரிந்து கொண்டேன்.

عِيسَى فَإِنَّهُ رُوحُ اللَّه و كلمتَهُ

‘மெய்யாகவே இயேசு கடவுளைடைய ஆவியாகவும், கடவுளுடைய வார்த்தையாகவும் இருக்கிறார்” (ஹதீத் அனாஸ் பின் மாலிக்-முத்தியாரா ஹதீத், பக்கம் 353)



## கிறிஸ்தவத்தின் ஏக தெய்வ வணக்கம் (தௌஹித்)

‘தௌஹித்’ என்ற வார்த்தை கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு மிகவும் புதுமையாக இருக்கும்; ஏனென்றால் கிறிஸ்தவ இறையியலில் இந்தக் கருத்து அபூர்வமாக தான் வெளியிடப்படுகிறது. மேலும் தாங்கள் ஓரே தேவனைத்தான் வழிபட்டுக் கொண்டிருப்பதாக நிச்சயமாய் அறிந்திருக்கிறதால், இந்தப்பதத்தை பயன்படுத்தித்தான் தங்கள் விசுவாசத்தை உறுதிப் படுத்த வேண்டும் என்ற தேவையில்லை. ‘தௌஹித்’ அல்லது ஏக தெய்வ வணக்கம் கிறிஸ்தவத்தில் திரியேக தேவனை வணங்குவதாகும். கிறிஸ்துவ விசுவாச மூலக் கோட்பாடாகிய திரித்துவத்தில் ஏகத்துவமிருப்பதால், ஒன்றான மெய்தேவனைத்தான் தொழுது கொள்ளுகின்றனர் என்பதை பன்முறை விளக்கிக் கூறினாலும், விவாதித்தாலும் இஸ்லாமிய பின்னணியிலும், கலாச்சாரத்திலும் மதாச்சாரத்திலும் ஊறிப்போயிருக்கிற நமது சகோதரர்களால் புரிந்து கொள்ள முடிவதில்லை!

### ஒன்றான மெய்த்தேவன்

கடவுள் ஒருவரே என்பதும் அவருக்கு கூட்டாளியும், இணையானவரும் கிடையாது என்பதும்,

இது ஒருக்காலும் மாறாத மங்காத அடிப்படை இஸ்லாமிய கோட்பாடாக இருக்கிறதென்று ஒவ்வொரு முஸ்லீமும் விசுவாசிக்கிறார், அதனையே ஒவ்வொரு தொழுகை சமயத்திலும் அறிக்கை செய்கிறார்.

கிறிஸ்தவ மதத்திலும் இதுதான் ஆதாரமான அடிப்படைக் கோட்பாடாக இருக்கிறது. இவ்வாறு கிறிஸ்தவர் ஒன்றான மெய்ததேவனையே விசுவாசித்து, அறிக்கையிட்டு ஆராதித்து வருகின்ற வேளையில், இஸ்லாத்தின் கருத்தும் கிறிஸ்தவத்தின் கருத்தும் இசைந்திருக்கிறதா, இரு பிரிவினரும் ஒரே அர்த்தத்தில் தான் 'ஒன்றான மெய்த்தேவன்' என்ற பதத்தை உபயோகிக்கிறார்களா?

ஸூரத்துல் இக்லாஸ் (112:1) - தூய ஏகத்துவம் அல்பஹறா - (2:163) ஸூரத்துல் மாயிதா - (5:73) இன்னும்பிற குர்ஆனின் வசனங்கள் இஸ்லாத்தின் தூய ஏகத்துவ கொள்கையை உயர்த்திக் காண்பிக்கிறது.

பைபிளிலும் தேவனின் ஏகத்துவம் வலியுறுத்தப்பட்டுள்ளதை கீழ்காணும் வசனங்களின் வாயிலாக அறிகிறோம்:

நானே கர்த்தர், வேறொருவர் இல்லை.... (ஏசாயா 45:5)

.... ஒருவரேயன்றி வேறொரு தேவன் இல்லையென்று அறிந்திருக்கிறோம். (1 கொரிந்தியர்8:4)



பிதாவாகிய ஒரேதேவன் நமக்குண்டு. அவராலே சகலமும் நமக்கு உண்டாயிருக்கிறது; அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம். இயேசுக்கிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு; அவர் மூலமாய் சகலமும் உண்டாயிருக்கிறது; அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கிறோம். (1 கொரிந்தியர் 8:6)

இந்த வேத வாக்கியங்களையெல்லாம் பைபிளிலிருந்து வாசித்தறிந்த பின்னர் என்னுடைய ஐயப்பாடும், மனப்பிரமையும் சூரியனைக் கண்டபனிபோல முற்றிலும் நீங்கிற்று. நான் ஒரு கிறிஸ்தவனாக மாறிவிட்டதால் என்னுடைய கருத்தை மாற்றிக் கொள்ள வேண்டியதில்லை என்பதைக் கண்டு பிடித்தேன்! முஸ்லிமாக இருந்தபொழுது தேவனின் ஏகத்துவம் என்ற சத்தியத்தை அறிந்திருந்ததைவிட, மிகவும் தெளிவாக இப்பொழுது உணர்ந்து கொள்ளலானேன். முஹம்மது ஒரு நபி என்ற உரிமைக்கோரலை மட்டும் ஒதுக்கித்தள்ள வேண்டியதாயிற்று!

தேவனின் தூய ஏகத்துவத்தை கிறிஸ்துவர்கள் மறுதலிப்பதாக முஸ்லிம்கள் எப்பொழுதுமே குற்றஞ்சாட்டி வந்திருக்கின்றனர். ஆனால் உண்மையில் கிறிஸ்துவ போதனை இந்த நம்பிக்கையை மேலும் தூய்மைப்படுத்துகிறது என்பது

மிகையாகாது. கிறிஸ்தவ தௌஹித் கோட்பாடுதான் தேவனின் ஒருமைத்தன்மைக்கு மிகச் சிறந்த, மிகத்தூய்மையான விளக்கம் ஆகும். பல தெய்வ வணக்கம் அல்லது (Polytheism) "ஷிர்க்" என்றால் என்ன என்பதை விளக்கிக் கூறுவதன் மூலம் ஏகத்துவத்தை நன்றாகப் புரிந்து கொள்ளலாம்.

## பலதெய்வ வழிபாட்டின் சிக்கல்

இஸ்லாம் பல தெய்வ வழிபாட்டை கடுமையாக சாடுகிறது. மன்னிக்கப்பட முடியாத மூன்று பெரிய பாவங்களுள் இதுவும் ஒன்றாகும். இக்காரணத்தை முன்னிட்டே இந்த இரண்டு மதங்களையும் நன்றாக ஒப்பிட்டு பார்க்க நிர்பந்திக்கப்பட்டேன். கிறிஸ்துவ போதனையிலும், நம்பிக்கையிலும், பல தெய்வ வழிபாடு மறைந்திருக்கிறதா என்று தீர்க்கமாக ஆராய்ந்தேன்.

விக்கரக ஆராதனையையும், பலகடவுள் வணக்கத்தையும் கடுமையாகக் கண்டிக்கின்ற தலைசிறந்த வேதப் பகுதி என் கவனத்தை ஈர்த்தது:

**என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம். மேலே வானத்திலும் கீழே பூமியிலும், பூமியின் கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு**



**சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தை யாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தை பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிற வராயிருக்கிறேன். (யாத்திராகமம் 20:3-5)**

மேலும் 1 யோவான் 5:21ல் பிள்ளைகளே! நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகி உங்களைக்காத்துக் கொள்வீர்களாக. ஆமென், என்று யோவானும் ஞாபகப்படுத்துகிறார். இவ்வாறு விக்கிரக ஆராதனையை வேதம் இடித்துரைக்கும் பொழுது, விக்கிரகம் என்றால் என்ன, விக்கிரக வழிபாடு எதைக் குறிக்கும் என்பதற்குத் தெளிவான இலக்கணம் தேவை. ஒவ்வொரு பொம்மையும், சிலையையும் அல்லது கல்த்தூணையும் "விக்கிரகம்" என்று கூறிவிடமுடியாது. அல்லது கல்லறைகளின் மீது வைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு உருவத்தையும் விக்கிரகம் என்று கூறுவதுமில்லை, புராதன கட்டிடங்களும் விக்கிரங்கள் ஆகா! ஆனால் மக்கள் அவற்றை பூஜித்ததாலோ அல்லது அங்கு சென்று மதக்கைங்கரியங்களை நிறைவேற்றும்பொழுதோ அவை விக்கிரகங்களாகி விடுகின்றன.

ஆறுடம்.. ஜோதிடம் பார்க்கிறவர்களும், மாயவித்தைக்காரரும், சூனியக்காரரும் பலவிதமான மந்திரக் கோல்களையும் கருவிகளையும், ஏடுகளையும் வைத்துக் கொண்டு அவைகளுக்கு தூபங்காட்டவும், மரித்தோர்களின் விக்கிரக வணக்கத்திற்கும், பல தெய்வ வணக்கத்திற்கும் அறிகுறிகளாகும். இப்பேர்பட்டவர்களுடன் எந்த விதமான நட்பும், தொடர்பும் வைத்துக் கொள்ளக்கூடாதென்று பைபிள் அழுத்தந்திருத்தமாகக் கட்டளையிடுகிறது:

“தன் மகளையாவது, தன் மகனையாவது தீக்கடக்கப்பண்ணுகிறவானும் குறிசொல்லுகிறவனும், நாள்பார்க்கிறவனும், அஞ்சனும் பார்க்கிறவனும், சூனியக்காரனும், மந்திரவாதியும், சன்னதக்காரனும், மாயவித்தைக்காரனும், செத்தவர்களிடத்தில் குறி கேட்கிறவனும் உங்களிடத்தில் இருக்க வேண்டாம். இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவன் எவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன். இப்படிப்பட்ட அருவருப்புகளினிமித்தம் உன் தேவாகிய கர்த்தர் அவர்களை உன் முன்னின்று துரத்தி விடுகிறார். உன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நீ உத்தமனாயிருக்கக்கடவாய். உபாகமம் 18:10-13

பல தெய்வ வழிபாட்டைப் பற்றி நான் கூறும் கருத்துரையாவது:



1. தேவன் ஒருவர்தான் என்று கிறிஸ்தவம் அறுதியிட்டு உறுதியாய்க் கூறுகிறது இந்த ஒரே தேவனுக்கு உண்மையாயிருந்து, பக்தி செய்து, அவரை ஆராதிப்பது ஒவ்வொருவர் மேலும் விழுந்த கடமையாக இருக்கிறது. தேவனல்லாத பிற தெய்வங்களை நாடுவது மகா பெரிய பாவமாகும். (லூக் 4:8; மத்தேயு 4:10 உபாகமம் 6:13 யோவான் 24:14,15)

2. கடவுளின் ஏகத்துவத்தை உணர்த்தும் பொழுது, தேவனாகிய கர்த்தரைத்தவிர வணக்கத்திற்கும், பயபக்திக்குமென்று பிரத்தியேகப்படுத்தக் கூடிய சொரூபங்கள், கட்டிடங்கள், ஆலயங்கள், இயற்கையில் மனிதனால் அமைக்கப்பட்ட உருவகங்கள், மெக்காவிலுள்ள முஸ்லிம்களின் காபா பைத்துல்லா அதன் பிரதிபலிப்பாகிய சித்திரங்களை காலண்டர்களிலோ, கம்பளங்களிலோ அல்லது வேறு எந்த வடிவத்திலோ, பல வண்ணத்திலோ அமைத்து முக்கியப் படுத்துவதெல்லாம் விக்கிரக ஆராதனை என்றும், மெய்யான தேவனுக்கு அருவருப்பு என்றும் கிறிஸ்தவ கோட்பாடு தெளிவு படுத்துகின்றது. இவற்றிற்கு முன்பாக தெண்டனிட்டு பணிந்து கொள்வது மாத்திரமல்ல,பயபக்தியுடன் முழுங்காற்

படியிடுவதும், நிற்பதுமே விக்கிரக ஆராதனைக்கு அல்லது பல தெய்வ வணக்கத்துக்கு ஈடாகும். (யாத்திராகமம் 30:3-5)

3. வேதாகமத்தின்படி, ஒரு கிறிஸ்தவன் எல்லாவிதமான மந்திரம், மாயவித்தை, அஞ்சனம், ஆறுடம் பில்லிசூனியம், மந்திரிக்கப்பட்ட கயிறுகள், தாயித்துகள் முதலானவற்றை கையிலோ அல்லது சரீரத்தின் பிற பகுதிகளிலோ கட்டிக்கொள்வது, தூபங்காட்டி அல்லது கோடங்கி அடித்து செத்துப் போனவர்களின் ஆவிகளை வரவழைப்பது அல்லது விரட்டுவது முதலான எதையும் சார்ந்திருப்பது அல்லது சகித்துக் கொள்வது கர்த்தருக்கு அருவருப்பான பாவம், என்று எச்சரிக்கப்படுகிறோம். மேலும் எல்லாவிதமான மூட நம்பிக்கைகளும், பழக்க வழக்கங்களும், சகுனம் பார்த்தலும், முற்றிலும் தடை செய்யப்படுகின்றன. (உபாகமம் 18:10-13)

4. ஒரு நல்ல கிறிஸ்தவன் பேய் பிசாசுகளுக்கும் அவைகளின் தொல்லைகளுக்கும் பயப்படமாட்டான். தனக்கு விரோதமாக அனுப்பப்பட்ட ஏவலாவிகளுக்கும் குறளி வித்தைகளுக்கும், செய்வினைக்



கோளாறுகளுக்கும் அஞ்சி நடுங்க மாட்டான். ஏனென்றால், ஏற்கனவே கிறிஸ்து அவைகளின் மீதும், அந்தகாரத்தின் ஆதிக்கங்கள் மீதும் ஜெயங்கொண்டுவிட்டார், என்று வேதம் உறுதிப்படுத்துவதை விசுவாசிக்கிறான். இறுதியாக, இந்த ஆவிகளெல்லாம், கிறிஸ்துவுக்கும் அவருடைய தொண்டர்களுக்கும் அடங்கியிருக்க வேண்டும். (ஏசாயா 54:17;மாற்கு 16:17; லூக்கா 10:19; கொலோசெயர் 2-15

5. பலவிதமான விலையேறப் பெற்ற கற்களை மோதிரங்களில் பதித்து, அணிந்து, கொள்வதோ அல்லது பாதுகாப்பளிக்கும் அல்லது அதிர்ஷ்டம் அளிக்கும் என்ற நம்பிக்கையில் மந்திரிக்கப்பட்ட சில வஸ்துக்களை அணிந்து கொள்வதோ அல்லது வைத்துக் கொள்வதோ கிறிஸ்தவர்களுக்கு கூடாத செயலாகும். கிறிஸ்தவனுக்கு கொடுக்கப்பட்டுள்ள ஒரே சக்தி பரிசுத்த ஆவியானவர்தான்! (ரோமர் 14:17,18 எபேசியர் 6:10-18).

6. பயம், கவலை,சோர்வு மற்றும் விசனம் இவற்றைக் கொண்டு வரக்கூடிய வாழ்க்கைக்கடுத்த பிரச்சனைகளை எல்லாம், ஜெபத்தில் தேவனுடைய சமூகத்திற்கு மட்டும் கொண்டு

வரும்படி கிறிஸ்தவர்கள் கட்டளையிடப் படுகிறார்கள். ஏனென்றால், நம்முடைய தேவைகள் அனைத்தையும், அவற்றிற்குரிய பரிகாரங்களையும் நம்மை சிருஷ்டித்தவரும், மீட்டுக் கொண்ட வரும்,ஆட்கொண்டவருமாகிய தேவன் மாத்திரமே அறிந்திருக்கிறார். (சங்கீதம் 5:3; மத்தேயு 6:225-34; 11:28 பிலி 4:6,7 1 பேதுரு 5:6,7) ஆதலால் எக்காரணத்தை முன்னிட்டும் மூதாதையர் கல்லறைகளுக்கோ, புண்ணியவான்கள் பரிசுத்தவான்கள் என்பவர்களின் சமாதிகளுக்குங் கூட சகாயந் தேடிப் போக வேண்டாம் என்று எச்சரிக்கப்படுகிறோம்.

முடிவாக எல்லாவிதமான நல் மனச்சாட்சியுடனும் கிறிஸ்தவத்தின் தௌஹித் கொள்கையே உண்மையில் மகா தூய்மையானதும், சிறப்பானதுமான ஏக தெய்வ தொழுகைமுறையாகும் என்று வலியுறுத்திக் கூறுகிறேன். இதில் சாத்தானுக்கோ, அசுத்த ஆவிகளுக்கோ, விக்கிரகங்களுக்கோ அல்லது மனிதரால் ஏற்படுத்தப்பட்ட தெய்வங்களுக்கோ சிறிதேனும் இடமில்லை. பிதாவாகிய தேவன் ஒருவராகவே, அவரிலிருந்து பிரிக்க முடியாத செயல்படுகிற ஜீவனுள்ள வார்த்தையாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும், (அவரிலிருந்து புறப்படுகிற) பரிசுத்த ஆவியானவரும் சதாகாலங்களிலும் ஸ்தோத்தரிக்கப்பட்ட ஒரே நாயனாக இருக்கிறார்.



## தேவனின் திரியேகத்துவம்

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிடம் முழுமையாக மனந்திரும்பி அவரையே அண்டிக் கொள்வதற்கு கடைசியாக எனக்கிருந்த தடை அல்லது முட்டுக்கட்டை கடவுளின் திரித்துவ உபதேசமாகும்.

தேவனின் திரித்துவம் என்ற சொற்றொடரின் அர்த்தம் எவ்விதத்திலும் தேவனின் ஏகத்துவம் ( தௌஹித் ) என்ற கொள்கையை மறுக்கவோ, குலைக்கவோ, அல்லது பங்கப்படுத்தவோ இல்லை என்ற உண்மையையும் கண்டு பிடித்தேன்.

لَّقَدْ كَفَرَ ٱلَّذِينَ قَالُوٓا۟ إِنَّ ٱللَّهَ ثَالِثُ ثَلَـٰثَةٍ

"நிச்சயமாக அல்லாஹ் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி ஆகிய இம்மூவரில், ஒருவன்தான்" என்று கூறாதீர்கள் (5:73)

وَلَا تَقُولُوا۟ ثَلَـٰثَةٌ

"தெய்வங்கள் மூன்று என்று கூறாதீர்கள்" (4:171) கிறிஸ்துவர்களின் தேவ தன்மையின் விளக்கமாகிய திரித்துவத்தைப்பற்றி, அவர்கள் மூன்று தெய்வங்களை தொழுது கொள்ளுகிறவர்கள் என்பதாக கருதி அவர்களைத் தாக்குவதற்கும், அவர்களுக்கு சரியான பதிலடி கொடுப்பதற்கும், அவர்கள் வாயை அடைப்பதற்கும், இந்த குர்ஆன் வசனங்களை

முஸ்லிம்கள் எல்லாரும் நானும் மனந்திரும்புவதற்கு முன்னர் ஒரு "வாய்ப்பாடு" ஆகவும், சூத்திரமாகவும் எப்பொழுதும் பல்லவிபாடி வந்தோம். ஆனால் யதார்த்தமாக நோக்கு மிடத்து. இந்த வசனங்கள் மூன்று வித்தியாசமான தெய்வங்களை துதிப்பதை கண்டிக்கிறதே அன்றி, கிறிஸ்துவத்தின் ஒருமைப்பாட்டை புறக்கணிக்கவில்லை என்று அறிந்து கொள்ளலாம்.

கிறிஸ்தவர்களாகிய நாம் இந்த குர்-ஆனின் வாசகர்களை பாராட்டக்கூடியவர்களாக இருக்கிறோம். இந்த வசனங்கள் நமது மனதை எந்த விதத்திலும் புண்படுத்தக் கூடியதாக அமையவில்லை! ஏனெனில், கிறிஸ்தவமானது எந்தவிதமான பலதெய்வ வழிபாட்டையும் முற்றிலுமாக வெறுக்கிறது. எந்தக் கிறிஸ்தவராகிலும் பிதா-குமாரன் பரிசுத்த ஆவி என்று மூன்று விதமான தனிப்பட்ட தெய்வங்கள் இருக்கிறார்கள் என்று வேதாகமத்துக்கு முரணாகக் கூறுவாரென்றாலும் அதையும் வன்மையாகக் கண்டிக்கிறோம். மேலும் எல்லாமே தெய்வம் **(Pantheism)** என்பதையும், தெய்வமே இல்லை **(Atheism)** என்பதையும் கிறிஸ்தவம் முற்றிலுமாக நிராகரிக்கிறது.

இஸ்ரவேலே, கேள்; நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர் உபாகமம் (6:5) என்ற



தேவனின் ஏகத்துவத்தை வேதாகமம் முத்திரையிட்டுத் தீர்க்கமாக உறுதிப்படுத்துகிறது. இயேசுவும் இதே சத்தியத்தை, பொதுவான இடத்தில், மக்கள் நடுவில் பகிரங்கமாக அறிவித்தார். (மாற்கு12:29,30) இதற்கு மேல் வேறு என்ன சான்று வேண்டும்!

ஏசாயா 45:5ல் கர்த்தர், வேறொருவர் இல்லை; என்னைத்தவிர தேவன் இல்லை என்றும் யோவான் 17:3ல் ஒன்றான மெய்த்தேவானகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசுக்கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன் என்றும் வெளிப்படுத்துவதிலிருந்து கிறிஸ்தவத்தின் அசைக்க முடியாத அஸ்திபாரானின் ஏகத்துவத்தை மறுக்கிறது என்பதற்கு எந்தவித அறிகுறியும் இல்லை எனக் காண்கிறோம். "ஏக மனதுடன் கூடிய, ஒற்றுமையுள்ள மூன்று கடவுள்கள்" இருக்கின்றனர் என்றும் சிலர் வியாக்கியானப்படுத்தத் துணிவது வேதப்புரட்டாகும்.

நம்முடைய குறுகிய, அறிவைக் கொண்டு திரித்துவத்தைப் பின்வருமாறு விளக்கலாம்:

1. "பிதா" என்று அழைக்கப்படுகிற அகில லோகங்களையும், புலனாகிய, புலனாகா ஜீவராசிகளையும் படைத்த சிருஷ்டி கர்த்தாவாகிய தேவன் அவரை "அல்காதிர்" (AL-Qadir) "சர்வ வல்லமையுள்ளவர்" என்று அர்த்தப்படும்படி இஸ்லாமில் கூறப்பட்டுள்ளவர் எனலாம்.

2. ‘அவருடைய வார்த்தை அவருடையகுமாரன்’ மாம்சமாகி இயேசுக்கிறிஸ்து என்ற பெயரில் இவ்வுலகத்தில் வந்து பிறந்தார். அவர் ஜீவனுள்ள வார்த்தையாக, தேவனுடைய சித்தத்தையும், நீதிச் சட்டங்களையும் வெளிப்படுத்துகிறவராக, மனிதருடன், மனித உணர்ச்சிகளுடன், மனித பாஷையில் இடைபாடு கொள்கிறவராக, தேவனின் வாக்குத்தத்தங்களை வெளிப்படுத்துகிறவராக – ‘முரீத் (Murid) அதாவது கட்டாயமின்றி மன உவப்புடன் செய்தல் என்று இஸ்லாமில் காணப்படும் அடைமொழித் தன்மையுடையவர். அல்லது ஜீவன் கொடுப்பவராக விளங்குகிறார்.

**தேவனுடைய ஆவி அல்லது பரிசுத்த ஆவியானவர்;** சத்திய ஆவியாகிய, தம்மிடம் சரண்டைந்தவர்களுக்கு வழியைக் காட்டி உதவி செய்கிறவராக இஸ்லாமில் – முஹிரி (Muhri) அல்லது ஜீவன் கொடுப்பவராக விளங்குகிறார்.

பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்று தேவனுடைய மூன்று தோற்றங்களையும் மூன்று ஆட்களாக சித்தரிப்பதிலிருந்து, இஸ்லாமிலுள்ள ‘ஸிஃபாத் (Sifat) என்றபதத்திற்கு இணையாகக் காணப்பட்டாலும் தேவனுடைய ஒரே விதமான தன்மையையும் ஒருமைப்பாட்டையும் குறிக்கிறது. ஒருவரிலிருந்து ஒருவர் பிரிக்க முடியாதவர்களாய்,



முந்தினவர் பிந்தினவர் என்ற வேற்றுமை இல்லாமல், பெரியவர் சிறியவர் என்ற பாகுபாடு இல்லாமல், மூவரும் ஒரே விதமான நித்திய தன்மையும். வல்லமையும், மகிமையும் உடையவர்களாய், ஒரே வார்த்தையில் “தேவன்” என்று அழைக்கப் படுகின்றனர்.

தௌஹித் கோட்பாட்டை எவ்விதத்திலும் மீறாமல் அல்லது சேதப்படுத்தாமல் கிறிஸ்தவத்தின் திரித்துவம் ஒரே தெய்வத்தின் மூன்று ஆள்த்தன்மைகளை விளக்குகிறதே அல்லாமல் மூன்று அல்லாஹ்கள் அல்லது தெய்வங்கள் மிகுந்த ஒற்றுமையுடன் இணைபிரியாது இருக்கின்றனர் / செயல்படுகின்றனர் என்பதாகப் பொருள் கற்பிப்பதே கிடையாது.

இவ்வாறு கிறிஸ்துவத்தின் திரித்துவத்தைப் புரிந்து கொள்வதை குர் ஆனோ இஸ்லாமோ மறுப்பதில்லை. ஆனால் மூன்று கடவுள்கள் இருக்கின்றனர் என்ற வாதத்தையே அல்மாயிதா 5:76ல் உன்னிஸா 4:171ம் தேவ தூஷணமாக்குகிறது. கிறிஸ்தவமும் அவ்வாறே இந்தக் கருத்தை முற்றிலும் நிராகரிக்கிறது.

இந்தக் காரணத்தை முன்னிட்டு கிறிஸ்தவ வேதாகம திரித்துவத்தை குர்ஆனின் எந்த வசனமும் நேர்முகமாகவோ அல்லது மறைமுகமாகவோ இகழ்வதில்லை என்று எண்ணுகிறேன்.

# இயேசுக்கிறிஸ்துவின் மரணமும் உயிர்தெழுதலும்

وَقَوْلِهِمْ إِنَّا قَتَلْنَا ٱلْمَسِيحَ عِيسَى ٱبْنَ مَرْيَمَ رَسُولَ ٱللَّهِ
وَمَا قَتَلُوهُ وَمَا صَلَبُوهُ وَلَـٰكِن شُبِّهَ لَهُمْ وَإِنَّ ٱلَّذِينَ
ٱخْتَلَفُواْ فِيهِ لَفِي شَكٍّ مِّنْهُ مَا لَهُم بِهِ مِنْ عِلْمٍ إِلَّا
ٱتِّبَاعَ ٱلظَّنِّ وَمَا قَتَلُوهُ يَقِينًا.

"அல்லாஹ்வுடைய தூதர், மர்யமுடைய மகன் ஈஸா மஸீஹை, நிச்சயமாக நாம் சிலுவையில் அறைந்து கொலை செய்துவிட்டோம்" என்று அவர்கள் கூறியதன் காரணமாகவும் அவர்களை சபித்தோம். அவரைஅவர்கள் வெட்டவுமில்லை; அவரை அவர்கள் சிலுவையில் அறையவுமில்லை. அவர் இருந்த அறைக்குள்அவரைத் தேடிச் சென்றவன், அவரைப் போல் ஆக்கப்பட்டு விட்டான். தேடிச் சென்ற மற்றவர்கள், அவரைப்போல் ஆக்கப்பட்டு விட்டான். தேடிச் சென்ற மற்றவர்கள், அவனையே சிலுவையில் அறைந்தனர். இதனால் அவர்கள் சந்தேகத்திற்குள் ளாக்கப்பட்டு விட்டனர். ஆகவே, எவர்கள் இதற்கு மாறான அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்களோ அவர்கள், வீண் சந்தேகத்திலேயே ஆழ்ந்து விட்டனர் (4:157)



இயேசுக்கிறிஸ்து மெய்யாகவே சிலுவையில் மரித்தார் என்ற உண்மையை மறைப்பதற்கும், நிராகரிப்பதற்கும் இஸ்லாமிய பண்டிதர்களும், மௌலவிகளும் இந்த வசனத்தையே மேற்கோள் காட்டுகின்றனர். நானும் அவ்விதமாக இந்த ஒரு வசனத்தையே ஆதாரமாகக் கொண்டு கிறிஸ்தவர்களோடு எதிர்வாதம் புரிந்து வந்தேன்.

தேவனின் பரிசுத்தரும், அவருக்கு அருமையான வரும் பிரியமானவரும், அல்லாஹ்வின் ரஸூலாக, நபியாக அனுப்பப்பட்டு வந்தவருக்கு ஈஸா மஸீஹிற்கு இவ்வளவு மோசமான, மானக்கேடான, வேதனை நிறைந்த சிலுவை மரணம் நேரிடுவதும், அப்படி நேரிடும்படி அல்லாஹ் அனுமதிப்பதும் நடைபெற முடியாத காரியம் என்று நம்பி வந்தேன். மேலும் கிறிஸ்தவர்கள் உரிமை பாராட்டுகிறபடியே கிறிஸ்து தேவனுடைய குமாரனாக இருப்பார் என்றால், எங்ஙனம் தேவன் தம்முடைய குமாரனுக்கு பாதுகாப்பளிக்காமல் இருந்திருப்பார். மேலும் இயேசுகிறிஸ்துவினிடத்தில் ஒரு குற்றமும் காணப்படவில்லை. அவர் பொய் சொல்லவில்லை, அவர் பாவமே செய்யாதவர் மட்டுமல்ல, அவர் பாவமே அறியாதவரும், பாவமே இல்லாதவருமாக திகழ்ந்த, ஒப்பற்ற மகா பரிசுத்தரான ஒரே மனுஷனாக இருக்கையில் அவருக்கா இந்த தண்டனை என்ற

கேள்வியானது, இந்த விதமான விளக்கத்தைக் கொடுக்க முஹம்மதியர்கள் ஏவப்பட்டார்கள்?

பைபிளில் வெளிப்படுத்தப்பட்டுள்ள உண்மையை ஸூரத் அல்மாயிதா 5:68 உண்மைப்படுத்துகிறது கிறிஸ்துசிலுவையில் அறையப்பட்டார். என்பதனை குர்ஆன் முழுமையாக ஆதரிக்கிறது. ஊர்ஜிதப் படுத்துகிறது என்று முழு நிச்சயமாய் அறிந்துக் கொண்டேன் கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டார் என்ற பொருளின் மீது அதிகமதிகமாய் சிந்தனை பண்ணினேன். குர்ஆன் கூறுவதையும், பைபிளையும் ஒப்பிட்டுப் பார்த்தேன். நான் அடைந்த முடிவு:

1. கிறிஸ்துவுக்கு பதிலாக வேறொருவர் சிலுவையில் அறையப்பட்டார் ஆனால் அவர் கிறிஸ்து தானா இல்லையா என்று இனம் கண்டு கொள்வதில் ஐயப்பாடு தோன்றியுள்ளதாக குர்ஆன் நம்புகிறது குர்ஆனின் ஆசிரியர்கள், சிலுவையில் அறையப்பட்டது இயேசு என்பதை மறுதலிப்பதுடன், யூதாஸ் (ஸ்கோரியோத்து) தான் சிலுவையில் அறையப்பட்டான் என்று விதண்டாவாதமாக போதிக்கின்றனர்.

2. மெய்யாகவே தாங்கள் இயேசுவைக் கொன்று விட்டதாக யூதர்கள் உறுதியாக நம்புகிறார்கள் என்று குர்ஆன் இயம்புகிறது.



இயேசுவா அல்லது வேறொவரா, யார் சிலுவையில் அறையப்பட்டு மரித்தது என்பதற்கு போதுமான நம்பகமான, மறுக்க முடியாத சான்றுகளும், காரணங்களும் உண்டா என்று ஆராய்ச்சி செய்யலானேன். எதனையும் மனுஷீக கண்ணோட்டத்தில் அல்லாமல், வெளிப்படையான, பாரபட்சமற்ற வரலாற்றுச் சான்றுகளைத் தேடினேன் அதற்கு பரிசுத்த வேதாகமமே சிறந்த சரித்திர ஆவணமாக இருப்பதைக் கண்டுபிடித்தேன். தீர்க்கதரிசனத்துக்கு மேல் தீர்க்கதரிசனம், வசனத்துக்கு மேல் வசனம் இவ்வாறு ஒன்றல்ல இரண்டல்ல நூற்றக்கணக்கான வசனங்கள் கிறிஸ்துவின் மரணம் - அடக்கம் - உயிர்த் தெழுதலுக்கு சான்றாக எக்காள முழக்கமிட்டுக் கொண்டிருக்கின்றன. (ஆனால் குர்ஆனில் உன்னிஸா 4:157ம் வசனம் மட்டுமே உறுதியில்லாத யூகத்தை எழுப்புகிறது!) வேதாகமத்திற்கு வெளியிலும் ஏராளமான வரலாற்றுச் சான்றுகள் உண்டு.

மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகியோர் எழுதியுள்ள இன்ஜீலின் முதல் நான்கு நற்செய்தி நூல்களும் கிறிஸ்துவின் மரணத்திலும், உயிர்த் தெழுதலிலுமே நிறைவு பெறுகின்றன. இவர்களும் லூக்காவைத் தவிர மற்ற மூன்று பேர்களும் இயேசு கிறிஸ்துவுடன் மூன்றரை ஆண்டுகாலம் வசித்து வந்த

நேரடி சாட்சிகள் ஆவர். லூக்காவைப் பொறுத்தவரையில் எண்ணிறைந்த கண்கூடான சாட்சிகளையும் விசாரித்தறிந்து, ஆவியானவராலே ஏவப்பட்டு தம் நற்செய்தி நூலை எழுதியுள்ளார்.

எந்தவொரு காரியமும், சம்பவமும் இரண்டு மூன்று சாட்சிகளின் வாய்ச் சொல்லால் உறுதிப்படும் (உபாகமம் 17:6,7) என்ற நீதிச் சட்டத்தின்படி இங்கு மூன்றுபேர் கிறிஸ்துவின் ஊழியத்தையும், மரணத்தையும், உயிர்த்தெழுதலையும்நேரடியாகப் பார்த்தது மாத்திரமல்ல, கிறிஸ்துவுடன் நெருங்கி வாழ்ந்தும், அவரது ஊழியத்தில் பங்கு கொண்டும் காரணகாரியங்களைத் தெளிவாக எழுதுகின்றனர். பரிசுத்த ஆவியானவரும் அவற்றிற்கு முத்திரையாக இருக்கிறார். இவை எந்த நீதிமன்றத்திலும் நிலைநிற்கக் கூடியதும், எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமான மெய்ச்சாட்சிகள் ஆகும். ஆனால் முஹம்மது நபியோஅல்லது குர்ஆனோ இந்த நிகழ்ச்சிக்கு600 ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு சந்தேகக் கேள்வியை எழுப்புகின்றனர். அது வெறும் யூகமேயல்லாமல் வேறல்ல! அவரோ அதனை நேரில் கண்டறியவில்லை; ஆனால் கண்டவர்களின் கூற்றைப் பொய்யாக்கப் பார்க்கிறார்!

அடுத்த நம்பகமான சாட்சி அரிமத்தியா ஊரானான, செல்வமும் செல்வாக்குமுள்ள



யூதகுலத்தலைவன் யோசேப்பு ஆவார். இயேசு மரித்துவிட்டார் என்று ரோமத்தலைவன் சான்றிதழ் வழங்கினவுடன் யோசேப்பு ரோம கவர்னர் பிலத்துவிடம் போய் இயேசுவின் சரீரத்தை தம்மிடம் ஒப்படைக்க வேண்டுகோள் விடுத்தார். பிலாத்துவும் அந்த விண்ணப்பத்தை அங்கீகரித்தார் (மாற்கு15:42-46) சிலுவையில் இருந்து இயேசுவின் சரீரத்தை இறக்கி வாசனைத் திரவியங்கள் இட்டு தூயவெள்ளைத் துணியில் சுற்றி தனக்கென்று வெட்டியிருந்த கல்லறையில் வைக்கின்ற வேளையில், இறந்தவர் இயேசுவல்ல; வேறொருவர் என்று இனம் கண்டு அதிர்ச்சி அடைவதுடன், உண்மையை ஒத்துக்கொண்டு அந்த சரீரத்தின் மீது அதற்குமேல் அக்கறையோ உரிமையோ இல்லாமல், பகிரங்கமாக பறைசாற்றியிருக்கமாட்டாரா?

இயேசுவின் கல்லறைக்கு காவல் போட வேண்டும் என்று யூதர்கள் பிலாத்துவிடம்அனுமதி கேட்டார்கள் என்று வேதம் விளம்புகின்றது. அது இயேசுவாக இல்லாவிட்டால் இருசாராருக்குமே எந்தவித சிரத்தையும் இருந்திருக்காது அல்லவா?மரித்தது நிஜமான இயேசுவல்ல வேறொருவர் என்று கவர்னராகிய பிலாத்துவும் உண்மையை ஊர்ஜிதப்படுத்தினவராக, அனுமதி வழங்கின காவல் ஏற்பாடுகளை ரத்து செய்திருக்க

மாட்டாரா? ஏனென்றால் நிஜமான இயேசு மரிப்பதற்கு முன்பாகவே, தாம் மரித்தபின் மூன்றாம் நாள் உயிரோடு எழுந்திருப்பேன் என்று ஆணித்தரமாக வலியுறுத்திக் கூறியிருந்தார். எனவேதான் யூதர்களும் மனுச் செய்தார்கள்; பிலாத்துவும் புரளி எதுவும் நடைபெறாமல் இருக்கக் கடுங்காவல் போட்டார். இயேசுவாக அல்லாமல் வேறொருவராக இருந்திருந்தால் இத்தகைய நடவடிக்கை ஏன்? இன்னும் பிரமிப்படைந்திருக்க மாட்டார்களா? மரித்தது இயேசுதான் என்று நன்கு அறிந்த பின்னர்தான் அவரின் சத்துருக்களாகிய யூத சமயத்தலைவர்கள் மகிழ்ச்சியுடன் பண்டிகை கொண்டாடப் புறப்பட்டனர். இது அடுத்த சான்று.

சிலுவையிலே அறையப்பட்டவர் இயேசு கிறிஸ்துவாக அல்லாமல் வேறொருவராக இருந்திருப்பாராயின் அவர் வாயிலிருந்து இயேசுமொழிந்த கனிவான வார்த்தைகள் புறப்பட்டிருக்குமா? சற்றே சிந்திப்பீர்! "பிதாவே இவர்களுக்கு மன்னியும்; தாங்கள் செய்கிறது இன்னது என்று அறியாதிருக்கிறார்களே!" என்றும், "இன்றைக்கு நீ என்னுடனே கூட பரதீஸிலிருப்பாய் " என்றும் தமது தாயின் பராமரிப்புப் பொறுப்பை தமது அன்பான சீஷன் யோவானிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற நினைவு வந்திருக்குமா? அல்லது முடிந்தது



என்றோ, 'பிதாவே உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புக் கொடுக்கிறேன்' என்றோ கூற இயலுமா? தேவனே இதனை நம்பாதவர்களை தயவாய் மன்னியும்; தாங்கள் சொல்லுகிறது இன்னது என்று அறியாதிருக்கிறார்களே! என்று ஜெபிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

சிலுவையிலே இயேசு கிறிஸ்து மரித்தார் என்றும் கிறிஸ்துதான் வேறு எவரும் அல்ல என்றும் உன்னிஸா 4:157-ல் உள்ள கேள்விக்குறி சந்தேகமான யூகமேயல்லாமல் வேறல்ல. இன்னும் சிலர் சிலுவையில் அறையப்பட்டது. இயேசு அல்ல, யூதாஸ் என்றும் அபிப்பிராயப்படுகின்றனர். இதுவும் ஆறறிவுக்கு புறம்பான வதந்தியாகும். இயேசுதான் சிலுவையில் மரணத்தை தழுவினார் என்று மனப்பூர்வமான நம்பிக்கையும், நிச்சயமும் பெற்றிருக்கிறேன், திருமறையின் நான்கு நற்செய்தியாளர்களின் அறிவிப்பும் வர்ணனையும் உண்மையாகவும், திருப்தியாகவும் வழக்கறிஞர்களும், நீதிபதிகளும் ஏற்றுக் கொள்ளக் கூடிய உண்மை நிகழ்ச்சியாக இருக்கிறது.

# மரித்தோரிலிருந்து கிறிஸ்து மெய்யாகவே உயிர்த்தெழுந்தார்.

'கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை குர்ஆன் எவ்விதத்திலும் மறுக்கவில்லை. கிறிஸ்துவைக் குறித்து முஹம்மது நபிக்கு வெளிப்பாடு இதுதான்:

وَالسَّلَـٰمُ عَلَيَّ يَوْمَ وُلِدتُّ
وَيَوْمَ أَمُوتُ
وَيَوْمَ أُبْعَثُ حَيًّا

"நான் பிறந்தநாளிலும், நான் மரிக்கும் நாளிலும் மறுமையிலும் நான் உயிர்ப்பெற்றெழும் நாளிலும் சாந்தியும் சமாதானமும் என்மீது நிலைப்பெற்றிருக்கும் (19:33)

கிறிஸ்து இயேசு மெய்யாகவே மரணத்தை தழுவினார் என்றும்; ஒரு சிலர் சிலுவை மரணத்தைக் குறித்து ஐயத்தை எழுப்பின போதிலும், கிறிஸ்து மரித்து அடக்கம் பண்ணப்பட்டு பின்னர் உயிரோடு எழுந்தார். ("Ub'athuhayyan") உப-அத்து-ஹய்யான் என்றும் இந்த வசனத்தின் மூலமாக நிச்சயம் பெற்றுள்ளேன். 'உப-அத்து-ஹய்யான்' என்ற



சொற்றொடரின் அர்த்தம் உண்மையான மரணத்தை, 'அமுத்து (Amuthu) அடைந்த பின்னர் மறுபடியும் ஜீவனோடு வருவது ஆகும்.

மூன்றாம் நாளில், இயேசுவானவர் உண்மையாகவே மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்தார். அவருடைய கல்லறை காலியாக இருக்கிறது! அவருடைய உயிர்த்தெழுதலின் சரீரம், மகிமை அடைந்திருந்த போதிலும், பார்க்கவும், தொடவும் கூடியதாக இருந்தது (லூக்கா 4:39,40;பிலிப்பியர் 3:21) இயேசுக்கிறிஸ்து மரித்ததோடு அவரது சரித்திரம் முடிவடைந்திருக்குமானால், அவருடைய வாழ்க்கைக்கும், செய்திக்கும் ஒரு சிறப்பும் இல்லாது போயிருக்கும். ஆனால் அவர் மரணத்தை வென்றுவிட்டார்.

கிறிஸ்துவானவர் சிலுவையில் அறையப்பட்டு, மரித்து, அப்படியே அடக்கம் பண்ணப்பட்டவராக இருந்திருப்பார் என்றால், கிறிஸ்தவர்களின் கடவுளும் மரித்து, மறைந்தே போய்விட்டார், மற்றவர்களைவிட இவர் எவ்விதத்திலும் மேன்மையானவர் அல்ல என்று அர்த்தப்படும் அல்லவா? ஆனால் கிறிஸ்தவம் இன்றைக்கு இமயம் போலவும்; பகலவனைப் போலவும் அசையாது, பிரபலமாய் ஒளிவீசிக் கொண்டே வருகிறது! காரணம், கிறிஸ்து மரணத்தை

விழுங்கிவிட்டார்; சாவாமையை விளங்கச் செய்திருக்கிறார்.

கிறிஸ்து உயிர்த்தெழாவிட்டால், கிறிஸ்தவர்கள் செத்துப்போன தெய்வத்தையோ, நபியையோ, ரஸுலையோ, வணங்குகிறார்கள் என்றுதானே பொருள். இதினால் அவர்களுக்கு என்ன லாபம் உண்டு? செத்துப் போனவரின் நாமத்தில் ஏன் ஞானஸ்நானம் பெறுகிறார்கள் தம்மைத்தாமே இரட்சிக்க இயலாதவர் தம்மை நம்பியிருக்கிறவர்களை எப்படி இரட்சிக்கப்போகிறார்?

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் தேவனருளும் மெய் விளக்கம் என்ன? தேவனின் எல்லையில்லாத அன்பை உறுதிப்படுத்த கிறிஸ்து சிலுவையில் அறையப்பட வேண்டியதாயிருந்தது; மரிக்கவும் வேண்டியதாயிருந்தது ஆனால் நிரந்தரமாக கல்லறையிலேயே இருப்பதற்காக அல்ல; ஜெயக்கிறிஸ்து வெற்றி, சிறந்தவராய் உயிரொடெழுந்து, நித்திய காலமாக, காலங்கள் எல்லாம் முடிந்தபின்னரும், உயிரோடிருக்க உயிர்ந்தெழுந்தார். (எபிரெயர் 13:8) இயேசு உயிர்த்தெழுந்தது சில பலரின் கனவு அல்ல மனப்பிரமையுமல்ல, அவருடன் புசித்துக் குடித்த அநேகரும் அவரை உயிர்த்தெழுந்தவராகக் கண்டு



முதலில் பயந்தனர்; பின்னர் ஒழிந்து கொண்டனர்; ஆனால் அவர் அவர்களை தைரியப்படுத்தின பின்பு அவர் உண்மையிலேயே உயிரோடு எழுந்திருந்தார் என்று பகிரங்கமாக சாட்சி பகர்ந்தனர். அவர்கள் ஏன் தங்கள் ஜீவனையும் பணையமாக வைத்து மண்ணுக்கிரையான கிறிஸ்துவுக்காக சாட்சி பகர வேண்டும்? உண்மையிலேயே அவர் உயிரோடு எழுந்ததினால்தானே அதைக்குறித்து தைரியமாய்ப் பிரசங்கித்தார்கள்; பிரதான ஆசாரியரையும் குற்றஞ்சாட்டினார்கள்:, (அப்போஸ்தலர் 2:23,24;3 14,15). "ஜீவாதிபதியை கொலை செய்தீர்கள்; அவரை தேவன் மரித்தோரிலிருந்து எழுப்பினார்; அதற்கு நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம்" என்றனர்.

கிறிஸ்தவர்களின் நடுவிலே எண்ணிலடங்காத சபைப் பிரிவுகளும், கருத்து வேற்றுமைகளும் இருந்தபோதிலும், எல்லோரும் ஒரு மனதாக இயேசு கிறிஸ்துவின் உயிர்தெழுதலை சாட்சிப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். கிறிஸ்தவ விசுவாசப் பிரமாணத்தின் அடித்தளமும், ஜீவநாடியும் இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணமும் உயிர்த்தெழுதலுமே. உயிர்த்த கிறிஸ்து இனி ஒருக்காலும் மரிப்பதில்லை; அவர் உயிர்த்தபடியால் நாமும் உயிரோடெழும்புவோம் என்பதுதான் கிறிஸ்தவ


நாணயத்தின் இரு பக்கங்களாகும். அவரது அநாதி அன்பை அச்சாணியாகக் கொண்டு, அவரது வாக்குத்தத்தங்களாகிய ஆரைக்கால்களில் கிறிஸ்தவச் சக்கரம் சுழல்கிறது. மேலும் அவருடன் பாடுபட்டால், அவரோடு கூட மகிமைப்படுவோம் என்றும் வேதம் இயம்புகின்றது (ரோமர் 8:17)

ஆதலால் கிறிஸ்தவர்களாகிய நாம் சரீரமரணத்திலிருந்து மட்டுமல்ல, எல்லாவிதமான மரணங்களிலிருந்தும், கிறிஸ்துவுடன் கூட உயிரொடெழுகிறோம். அவை முறையே:

1. பகை, விரோதம், குரோதம் மற்றும் குடும் பிரச்சனைகள், சண்டைகள் ஆகிய மரணத்திலிருந்து உயிர்த்தெழுகிறோம்.
2. நமது ஜீவாதாரத்தை வேதனையுடன் தான் சம்பாதிக்க வேண்டும் என்ற மரணத்திலிருந்து உயிர்த்தெழுகிறோம்.
3. இருதய பாரங்களும், லௌகீக கவலைகள் முதலான மரணத்திலிருந்து ஜெயம் பெறுகிறவர்களாய் உயிர்த்தெழுகிறோம்.
4. அரைகுறையான விசுவாசம் என்கிற அவிசுவாசமாகிய மரணத்திலிருந்தும் உயிர்த்தெழுகிறோம்.



5. நான் என்கிற அகந்தை, ஆணவம், தன்னலம் ஆகிய மரணத்திலிருந்து நிச்சயமாக உயிர்த்தெழுகிறோம்.
6. வியாதி, துன்பம், பயம் ஆகிய மரணங்களிலிருந்து விடுதலை பெற்று உயிர்த்தெழுகிறோம்.
7. இரண்டாம் மரணமாகிய நித்திய மரண தண்டனையிலிருந்து நிச்சயமாகவே உயிர்த்தெழுகிறோம்.



# கிறிஸ்துவின் சிலுவை நமக்கு கற்பிக்கும் பாடம்

அப்போஸ்தலனாகிய பேதுரு பரிசுத்த ஆவியானவரால் உந்தப்பட்டு இவ்வாறு எழுதுகிறார்: “ஏனெனில் தேவன் மேல் பற்றுதலாயிருக்கிற மனச்சாட்சியினிமித்தம் ஒருவன் அநியாயமாய்ப் பாடுபட்டு உபத்திரவங்களைப் பொறுமையாக சகித்தால் அதுவே பிரீதியாயிருக்கும். நீங்கள் குற்றஞ் செய்து அடிக்கப்படும் போது பொறுமையோடே சகித்தால் அதுவே பிரீதியாயிருக்கும். நீங்கள் குற்றஞ் செய்து அடிக்கப்படும்போது பொறுமையோடே சகித்தால், அதினால் என்ன கீர்த்தியுண்டு? நீங்கள் நன்மை செய்து பாடுபடும்போது பொறுமையோடே சகித்தால் அதுவே தேவனுக்கு முன்பாகப் பிரீதியாயிருக்கும். இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள். ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின் வைத்துப் போனார். அவர் பாவஞ்செய்யவில்லை, அவர் வாயில் வஞ்சனை காணப்படவுமில்லை; அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும் போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச்



செய்கிறவருக்கு தம்மை ஒப்புவித்தார். நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும் படிக்கு, அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள். சிதறுண்ட ஆடுகளைப் போலிருந்தீர்கள்; இப்பொழுதோ உங்கள் ஆத்துமாக்களுக்கு மேய்ப்பரும் கண்காணியுமான வரிடத்தில் திருப்பப்பட்டிருக்கிறீர்கள் (1 பேதுரு 2:19-25)

கிறிஸ்துவின் சிலுவை என்பது அவருடைய பாடுகள் - உபத்திரவங்கள் - நிந்தைகள் ஆகியவற்றின் தொகுப்பாக, உச்ச நிலையாக இருக்கிறது. தமது சிலுவை மரணத்தை அவராகவே தெரிந்து கொண்டு. நாடினார் என்று சொல்வதற்கில்லை; எதிரிகளும் அவர் மீது திணித்த ஒரு தண்டனையுமல்ல; ஆனால் அது தேவனுடைய அநாதி திட்டத்திற்கும் தீர்மானத்திற்கும் இசைய ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட முடிவாகும். இது நிகழ்வதற்கு 700 ஆண்டுகளுக்கு முன்பே கிறிஸ்து அடையப் போகும் இவ்விதமான மரணத்தை ஏசாயா தீர்க்கதரிசி தமது நூலில் 53;4-12ல் தெளிவாகச் சித்தரித்திருக்கிறார்.

**‘மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்; நாமோ. அவர் தேவனால் அடிபட்டு**

வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம்.

நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்கு சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்.

நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன்தன் வழியே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர் மேல் விழப்பண்ணினார்.

அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை; அடிக்கப்படும்படி கொண்டு போகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப் போலவும்; தன்னை மயிர் கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப் போலவும், அவர் தம்முடையவாயைத் திறவாதிருந்தார்.

இடுக்கணிலும் நியாயத்தீர்பிலுமிருந்து அவர் எடுக்கப்பட்டார்; அவருடைய வம்சத்தை யாரால் சொல்லி முடியும்; ஜீவனுள்ளோருடைய தேசத்திலிருந்து அறுப்புண்டு போனார்; என்



ஜனத்தின் மீறுதல்களினிமித்தம் அவர் வாதிக்கப்பட்டார்.

துன்மார்க்கரோடே அவருடைய பிரேதக்குழியை நியமித்தார்கள்; ஆனாலும் அவர் மரித்த போது ஐசுவரியவானோடே இருந்தார்; அவர் கொடுமை செய்யவில்லை; அவர் வாயில் வஞ்சனை இருந்ததுமில்லை.

கர்த்தரோ அவரை நொறுக்கச் சித்தமாகி, அவரைப் பாடுகளுக்குட்படுத்தினார்; அவருடைய ஆத்துமா தன்னைக் குற்ற நிவாரண பலியாக ஒப்புக் கொடுக்கும் போது. அவர் தமது சந்ததியைக் கண்டு, நீடித்த நாளாயிருப்பார்; கர்த்தருக்குச் சித்தமானது அவர் கையினால் வாய்க்கும்.

அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார்; என் தாசனாகிய நீதிபரா தம்மைப்பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார்; அவர்களுடைய அக்கிரமத்தைத் தாமே சுமந்து கொள்வார்.

அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி, அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து, அக்கிரமக்காரருக்காக, வேண்டிக்

**கொண்டதினிமித்தம் அநேகரை அவருக்குப் பங்காகக் கொடுப்பேன்; பலவான்களை அவர் தமக்குக் கொள்ளையாகப் பங்கிட்டுக் கொள்வார். (ஏசாயா 53:4-12)**

இந்தத் தீர்க்கதரிசனப் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள கடவுளுடைய தாசன் (வேலைக்காரன்) தாமேதான் என்பதை இயேசு நன்கு உணர்ந்திருந்தார். ஆதலால் இவ்விதமான வாதைகளும், துன்பங்களும் தமக்குக் காத்திருக்கின்றன என்று அறிந்தவராக தம்மைக் கைது செய்யும் படியாக வந்த போர்ச் சேவகர்களுக்கு எந்தத் தீங்கும் இழைக்கக் கூடாதென தமது சீஷர்களுக்குப் பணித்தார். "அப்பொழுது இயேசு அவனை நோக்கி; உன் பட்டயத்தை திரும்ப அதின் உறையிலே போடு பட்டயத்தை எடுக்கிற யாவரும் பட்டயத்தால் மடிந்து போவார்கள். நான் இப்பொழுது என் பிதாவை வேண்டிக் கொண்டால், அவர் பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமான தூதர்களை என்னிடத்தில் அனுப்ப மாட்டாரென்று நினைக்கிறாயா? அப்படிச் செய்வேனானால், இவ்விதமாய்ச் சம்பவிக்க வேண்டும் என்கிற வேத வாக்கியங்கள் எப்படி நிறைவேறும் என்றார்" (மத்தேயு 26:52-54)

யூத மார்க்கத் தலைவர்கள் இயேசுவை பிலாத்துவிடம் ஒப்படைத்து, அவரைச் சிலுவையில்



அறைய வேண்டும் என்று ஆவேசமாக சத்தமிட்டபோது, அவர்களுடய தவ்றாத்தின் ஒரு சிறு விதியையாவது, பிரமாணத்தையாவது இயேசு மீறினவர் என்று அவர்களால் நிரூபிக்க முடியாமற்போயிற்று. அவர் தம்மைத் 'தேவனுடைய குமாரன்' என்றும், 'இரட்சகர்' என்றும் கூறின யதார்த்தமான அறிக்கையை அவர்கள் அனர்த்தப்படுத்தி தேவ தூஷணம் கூறினார் என்று குற்றம் சாட்டினார்கள். வேறொரு குற்றத்தையும் அவர் மீது சுமத்த முடியவில்லை!

நாம் நிச்சயமாகப் பரலோகத்தில் இறைவனுடன் வாழ்வதற்குரிய ஆவியும், அந்தஸ்தும், ஜீவனும் தகுதியும் பெறும்படியாகவும், பாவத்தின் வல்லமையினின்று நாம் இரட்சிக்கப்பட்டு பரிசுத்தமான வாழ்க்கை வாழ்வதற்காகவும், கிறிஸ்து பெருமான் நமது பாவங்களுக்காக பிணையாளியாக பாடுபட்டு மரித்தார் என்பதனை இடைவிடாமல் சுட்டிக் காண்பித்துக் கொண்டிருக்கும் 'நினைவுச் சின்னமே' சிலுவை.

# கிறிஸ்துவின் பரமேறுதல் (மிராஸ்) Miraj

எருசலேம் நகருக்கருகிலுள்ள பெத்தானியா என்னப்படும் இடத்திலிருந்த ஒலிவ மலையிலிருந்து இயேசுவானவர் பரலோகத்திற்கு ஏறிச் சென்றார் (மிராஸ்) என்பதற்கு அப்போஸ்தலர்கள் பதினொருவரும், வேறு பல சீஷர்களுமாக 500க்கும் அதிகமான சாட்சிகள் உண்டு என்று விவிலியம் அறுதியிட்டு உறுதியாய்க் கூறுகிறது. (லூக்கா24:50;1 கொரிந்தியர் 15:6) கிறிஸ்துவின் பரமேறுதலைக் குறித்து குர்ஆன் எவ்வித மறுப்பும் கூறுவதில்லை. அதற்கு ஆதரவாகத்தான அநேக வசனங்கள் உண்டு.

إِذْ قَالَ ٱللَّهُ يَـٰعِيسَىٰٓ إِنِّى مُتَوَفِّيكَ وَرَافِعُكَ إِلَىَّ

ஈஸாவை நோக்கி அல்லாஹ் கூறியதை அவர்களுக்கு ஞாபகமூட்டும்; "ஈஸாவே நிச்சயமாக நான் உம்முடைய ஆயுளைப் பூர்த்திச் செய்வேன். உம்மை என்னளவில் உயர்த்திக் கொள்வேன். நிராகரிப்போரின் அவதூற்றிலிருந்து உம்மைப்ப ரிசுத்தமாக்கி வைப்பேன். உம்மை பின்பற்றுவோரை, நிராகரிப்போர்மீது மறுமை நாள்வரையில் மேலோக்கியும் வைப்பேன்" (3:55)

கிறிஸ்துவின் பரமேறுதலில் இரண்டு முக்கியமான காரியங்களை கவனித்தல் வேண்டும்:



1. தாம் பூலோகத்துக்கு வந்த நோக்கத்தை மையமாக கொண்டு, இயேசு தம்முடைய சீஷர்களுக்கு அளித்த இறுதியான செய்தி அல்லது அறைகூவல் a) அவர்கள் உலகமெங்கும் போய் சுவிசேஷத்தை பறைசாற்றி, எல்லா ஜாதிகளையும் சீஷர்களாக்குவது. b) பிதா, குமாரன், பரிசுத்த ஆவியென்னும் திரியேக தேவனின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தல் வேண்டும்.

   c) அதனை அடுத்து கர்த்தர் அவர்களுக்கு கற்றுத்தந்த எல்லாவற்றையும், பொதுவாய் பைபிளில் உள்ள யாவற்றையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு போதித்தல் வேண்டும்.

2. இந்த சத்தியத்திற்கு உகந்த சாட்சிகளாக ஜீவிப்பதற்கும், அதற்கு சாட்சி பகர்வதற்கும் அதாவது, கிறிஸ்துவே தேவனுடைய வார்த்தையாகவும், **தேவனுடைய குமாரனாகவும் இருக்கிறார்** – அவராலேயல்லாமல் வேறொரு வராலும் இரட்சிப்பு இல்லை என்கிற நற்செய்தியை கேட்கிறவர்கள் உணர்வடையதக்கதாக ஆற்றலுடன் தைரியமாய் அறிவிப்பதற்கு பரிசுத்த ஆவியானவர் பூமியின் கடைசி பரியந்தமும் சகல நாட்களிலும் அவர்களோடிருந்து அவர்களைத் திடப்படுத்துவார்.

# இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை

உயிருள்ளோரையும், மரித்தோரையும் நியாயந்தீர்க்கும்படி தெய்வீக நீதிபதியாக இயேசுகிறிஸ்து இரண்டாம் முறை இந்த உலகத்துக்குச் சீக்கிரமாய் வருவார் (அப்போஸ்தலர் 1:11;வெளிப்படுத்தல் 20:11-15)

இஸ்லாமியரின் பாரம்பரியங்களின் படியும், இயேசுவே உலகத்தின் காலத்தில் நீதியுள்ள நியாயாதிபதியாக வருவார் என்று அபூ-ஹுரைராவின் ஹதீஸ் புகாரி பதினொராவது புஸ்தகம் 256-ம் பக்கத்தில்

كَيْفَ أَنْتُمْ إِذَا نَزَلَ ٱبْنَ مَرْيَمَ فِيكُمْ وَإِمَامُكُمْ مِنْكُمْ

“மர்யமின் மகன் ஈஸாமஸீஹ் மறுபடியும் இறங்கி வந்து உங்களுடைய மார்க்கத் தலைவரும் குருவும் போதகருமானால் உங்களுடைய நிலமை எவ்வாறிருக்கும்? என்று வினவுகிறார். முஸ்நாத் இமாம் அஹ்மத் இபின் ஹன்பாலின் ஹதீஸ் புத்தகம் 2:240

ليوشكن أنْ يَنْزِلَ فِيكُمْ ٱبْنَ مَرْيَمَ إِمَاماً مَهْدِياً وَحَكَماً عَدْلاً„ “மர்யமின் மகன் தலைசிறந்த போதகராகவும்



நீதியுள்ள நியாயாதி பதியாகவும் உங்களிடம் சீக்கிரமாய் வருவார்”.

3. ஹதீஸ் முஸ்லீம் என்ற முதலாவது நூலின் 76-ம் பக்கத்தில்

وَٱللَّهَ لِيَنْزِلَ ٱبْنَ مَرْيَمَ حَكَماً عَدْلاً

“நிச்சயமாகவே, அல்லாஹ்வின் தீர்மானத்தின்படி, மர்யமின் மகன் நீதியுள்ள நியாயாதிபதியாய் மகிமையோடு இறங்கி வருவார்” என்று ஒரு சமயம் முஹமது நபி அவர்களே அறுதியிட்டு உறுதியாய்க் கூறினார் என்று சொல்லப்படுகிறது. அப்படியானால் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்தும் அவர் நீதியுள்ள நியாயாதிபதியாக வெளிப்பட வேண்டியதன் அவசியத்தைப் பற்றியும் முஹமது நபியே நிச்சயமாக எதிர்பார்த்தார் என்பது தெளிவாகிறது.

இந்த ஹதீஸின் விளக்கமாவது இயேசுக் கிறிஸ்து இந்த யுகத்தின் முடிவில் மறுபடியும் அல்லது இரண்டாவது முறையாக இவ்வுலகிற்கு வருவார் என்பதனை தெளிவுபடுத்துகிறது.

“ஹக்காமன்” (Hakaman) (நீதிபதியாக இருத்தல்) என்ற வார்த்தையின் அர்த்தம் என்னவென்றால் பைபிளில் அல்லது குர்ஆனிலுள்ள, இப்பொழுது அமுலில் இருந்து வருகிற தேவனுடைய நீதிச் சட்டத்தை மக்களுக்கு கொண்டு வருகிற நபியாக

இயேசுக்கிறிஸ்து வரமாட்டார் எனவும், ஆனால் 'ஜீவ புஸ்தகம்' என்ற புதிய புஸ்தகத்தடன் எல்லா மக்களின் நியாயாதிபதியாக இறங்கி வருவார் எனவும் விளங்குகிறது. (வெளி 20:11-15)

ஹதீஸ் அல்சாகிஹ் புகாரி முஸ்லீமிலுள்ள வாசகம், பைபிளிலுள்ள ரோமர் 2:16க்கு ஒப்பனையாக இருக்கிறது என்றால் மிகையாகாது. "என் சுவிசேஷத்தின் படியே, தேவன் இயேசுக்கிறிஸ்துவைக் கொண்டு மனுஷருடைய அந்த ரங்கங்களைக் குறித்து நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் நாளிலே இது விளங்கும்."

இவ்வாறிருப்பதால், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை என்னுடைய தேவனாகவும், சொந்த இரட்சகராகவும் ஏற்றுக் கொள்வதற்கு எனக்கு வேறு எந்தத்தடையும் இருக்கவில்லை மேலும், அவர் நீதியுள்ள நியாயாதிபதியாக வருவாரென்று நிச்சயமாகவே அவர் வருகையை எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்.

இயேசுவைப் பின்பற்றுகிறவர்களுக்கு, நிச்சயமாகவே இரட்சிப்பும் மீட்பும் உண்டென்பதை உறுதிப்படுத்துவதாக குர்ஆனின் வசனம் இவ்வாறு கூறுகிறது.

إِذْ قَالَ ٱللَّهُ يَـٰعِيسَىٰٓ إِنِّي مُتَوَفِّيكَ وَرَافِعُكَ إِلَ
وَمُطَهِّرُكَ مِنَ ٱلَّذِينَ كَفَرُوا۟ وَجَاعِلُ ٱلَّذِينَ ٱتَّبَعُوكَ
فَوْقَ ٱلَّذِينَ كَفَرُوٓا۟ إِلَىٰ يَوْمِ ٱلْقِيَـٰمَةِ.



ஈஸாவை நோக்கி அல்லாஹ் கூறியதை அவர்களுக்கு ஞாபகமூட்டும்: "ஈஸாவே நிச்சயமாக நான் உம்முடைய ஆயுளைப் பூர்த்திச் செய்வேன். உம்மை என்னளவில் உயர்த்திக் கொள்வேன். நிராகரிப்போரின் அவதூற்றிலிருந்து உம்மைப் பரிசுத்தமாக்கி வைப்பேன். உம்மை பின்பற்றுவோரை. நிராகரிப்போர்மீது மறுமை நாள்வரையில் மேலோக்கியும் வைப்பேன்" (3:55)

கிறிஸ்துவை பின்பற்றுவோருக்கு இரட்சிப்பும், மோட்சமும் நிச்சயமாக உண்டென்று குர்ஆன் சாட்சி பகர்வது வெளிப்படையாக விளங்குகிறது இயேசுவும் ஏற்கெனவே இவ்விதமாகவே, சொல்லியிருந்தார்.

என் வசனத்தைக்கேட்டு என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத்தீர்ப்புக்கு உட்படமால் மரணத்தை விட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் (யோவான் 5:24)

நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான். (யோவான் 14:6)

# சத்திய வேதாகமத்தின் புனித உண்மை

இந்த என் அனுபவ சாட்சியின் துவக்கத்திலேயே நான் கூறியுள்ளபடி, பரிசுத்த வேதாகமத்தை வாசிப்பதற்கும், அது உண்மையும் சத்தியமுமானதையே விளம்புகிறதென்ற நிச்சயத்தைப் பெற்றுக் கொள்வதற்கும், எனக்கு ஊக்கமும் ஆக்கமுமளித்த குர்ஆனின் வசனம் ஸுரத்துல்மாயிதா 5:68 ஆகும். இந்த வசனத்தின் வாயிலாக முழு வேதாகமும், (தவ்றாத்,ஜபூர்,இன்ஜீல்) கடவுளை, அவருடைய சித்தப்படியும், அவருக்குப் பிரியமான முறையிலும் ஆராதிக்கின்ற மக்கள் அனைவரும் வாசிப்பதற்கும், விசுவாசிப்பதற்கும், நேசிப்பதற்கும் உகந்த புஸ்தகம் என்று வலியுறுத்துகின்றது.

சத்திய வேதாகமம் சில அறிவிலிகளால் அல்லது விஷமிகளால் கெடுக்கப்பட்டது, மாற்றப்பட்டது என்பதாக வேறு சில குர்ஆனின் வசனங்களைக் கொண்டு ஒருசில இஸ்லாமிய பண்டிதர்களும், மௌலவிகளும் களங்கப்படுத்தி பிரச்சாரம் செய்கின்றனர். ஐயகோ! அவர்களுள் நானும் ஒருவனாக இருந்தேன்.



எவ்வாறு கிறிஸ்தவர்களின் வேதம் உண்மையை வெளிப்படுத்துகிறதா, நம்பத்தகுந்ததா என்று அறிவதற்காக வேத வாக்கியங்களை துருவித்துருவி ஆராய்ந்தேனோ அதுபோல, இந்த குர்ஆன் வசனங்களின் மெய்பொருள்தான் என்ன, அதனை துல்லியமாக அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்துடன் அரபிய மொழியில் தேர்ச்சி பெற்று, மூல பாஷையிலேயே குர்ஆனை கற்க ஆரம்பித்தேன். நான் கண்டடைந்த இந்த உண்மை மெய்தானா என்று திட்டவட்டமாக அறிந்து கொள்வதற்காக, முக்கியமான குர்ஆனின் வசனங்களை, அடிக்கடி சிந்தித்து சீர் தூக்கிப்பார்த்து வந்தேன்.

أَفَتَطْمَعُونَ أَنْ يُؤْمِنُوا۟ لَكُمْ وَقَدْ كَانَ فَرِيقٌ مِّنْهُمْ
يَسْمَعُونَ كَلَٰمَ ٱللَّهِ ثُمَّ يُحَرِّفُونَهُۥ مِن بَعْدِ مَا عَقَلُوهُ
وَهُمْ يَعْلَمُونَ

விசுவாசிகளே! அல்லாஹ்வுடைய வசனங்களைக் கேட்டு அதை நன்கறிந்த பின்னரும் வேண்டுமென்றே அதைப் புரட்டிவிடும் ஒரு பிரிவினரும் அவர்களிலிருக்க, உங்கள் வார்த்தைகளுக்காக இவர்கள் விசுவாசங் கொள்வார்கள் என நீங்கள் எதிர்பார்க்கின்றீர்களா? (2:75)

இவ்வாக்கியத்தில் கூறப்பட்டுள்ள 'ஒரு சாரார்' "ஃபரிக்குன்ன மின்கும்" (Fariqunminhum) என்ற பதம்

கிறிஸ்தவ – யூத இறையியல் வல்லுநர்களை குறிக்கும் எனவும் அவர்கள் தான் தங்கள் சாமர்த்தியத்தினாலும், சதி சர்ப்பனையினாலும் வேதாகமத்தின் வாக்கியங்களையும் அதன் மூலக் கருத்துக்களையும் மாற்றி விட்டார்கள் என்று முஸ்லிம்கள் பொதுவாக யூகிக்கின்றனர்.

என்னுடைய ஆராய்ச்சியின் பலனாக அல்பஹரா 2:75ம் வசனம் இந்த அர்த்தத்தை கொடுக்காது என்று விளங்கினது. அதற்கு மாறாக யூதர்களிலிருந்தும் கிறிஸ்தவர்களிலிருந்தும் முஸ்லிம்களாக மாறினவர்கள். முஹம்மதுவின் போதனைகளைக் கற்ற பின்னரும் வேண்டுமென்றே அவற்றை நிராகரித்து, மறுதலித்துப் போனவர்களை குறிக்கும் என்று துலாம்பரமாக அறிந்து கொண்டேன். அன்னார் குர்ஆனின் வசனங்களையும் அவற்றின் அர்த்தத்தையும் திரித்துக் கூறுவதாக குற்றஞ் சாட்டப்படுகிறார்களேயல்லாமல் பைபிளின் வசனங்களை அல்ல.

“.... முகம்மதுவே இவர்கள் ஈமான் கொள்வார்கள் என ஆசை வைக்கிறீர்களா?” அதாவது அவர்கள் குர்ஆனை உள்ளபடியே ஏற்றுக்கொள்வார்கள் என்று இன்னமும் எதிர்பார்க்கிறீரா? இவ்வாறிருப்பதால், யூத சமய வல்லுநர்களும், கிறிஸ்தவ பண்டிதர்களும் ஒன்று



சேர்ந்து விவிலியத்தின் வாசகங்களை மாற்றிவிட்டனர் என்று கூறாமல், பின் வாங்கிப்போன, இடைக்கால முஸ்லிம்கள் குர்ஆனை மாற்றினதையே குறிப்பிடுகிறது என அறியலாம்.

مَا نَنسَخْ مِنْ أَيَةٍ أَوْ نُنسِهَا نَأْتِ بِخَيْرٍ مِّنْهَا أَوْ مِثْلَهَا

நபியே! முந்திய வேதங்களிலிருந்த யாதொரு வசனத்தை நாம் மாற்றிவிடுவோமாயினும் அல்லது அதை மறக்கடித்துவிடுவோமாயினும், அதற்கு ஒப்பானதை அல்லது அதைவிடச் சிறந்ததை நாம் கொண்டுவருவோம்.

“ஒரு வசனத்தை நாம் மாற்றினால்” என்ற சொற்றொடர் வேதாகமத்தின் வசனங்களை கிறிஸ்தவர்கள் மாற்றிவிட்டனர் என்று அர்த்தப்படும் என்பதாக முஸ்லிம்கள் கூறுகின்றனர். ஆனால் உண்மையில் ‘மாற்றப்பட்ட வசனங்கள்’ குர்ஆனின் வசனங்களையே குறிப்பிடுகின்றது; ஏனெனில் அநேக குர்ஆனின் சட்டதிட்டங்களும், கட்டளைகளும் நீக்கம் செய்யப்பட்டுவிட்டன. 5முதல் 50 வசனங்கள் வரை குர்ஆனிலிருந்து ரத்து செய்யப்பட்டு விட்டன என்று அல்தட்ஜிட்ஃபில் இஸ்லாம் (“Al-Tadjdid fil-Islam”) என்ற நூல் கூறுகின்றது.

நீக்கம் செய்யப்பட்ட வாக்கியங்கள் முஹம்மது நபி அற்புதங்கள் செய்ததாக வர்ணிக்கின்றன;

ஆனால் தமக்கு முன்னர் இருந்த இறைவெளிப்பாடு பெற்ற மூஸா, மற்றும் ஈஸா நபிகள் அற்புதங்களைச் செய்ததுபோல, முஹம்மதுவின் சேவைக்காலத்தில் ஒரு அற்புதமும் நடைபெறவில்லை! இவ்வாறு முஹம்மது அற்புதங்கள் நிகழ்த்தியதாக கூறுகின்ற பொய்யான வசனங்களே குர்ஆனிலிருந்து ரத்து செய்யப்பட்டு விட்டன எனறு அநேகர் அபிப்பிராயப்படுகின்றனர். எனவே மெய்யான தெய்வ வழிபாட்டுக்கு அஸ்திபாரமாயிருக்கும் திருமறைக்கு அல்பஹரா 106 சற்றேனும் பொருந்தாது ஸுரா-அல்மாயிதா 5:13

فَبِمَا نَقْضِهِم مِّيثَٰقَهُمْ لَعَنَّٰهُمْ وَجَعَلْنَا قُلُوبَهُمْ قَٰسِيَةً
يُحَرِّفُونَ ٱلْكَلِمَ عَن مَّوَاضِعِهِۦ وَنَسُوا۟ حَظًّا مِّمَّا ذُكِّرُوا۟ بِهِۦ
وَلَا تَزَالُ تَطَّلِعُ عَلَىٰ خَآئِنَةٍ مِّنْهُمْ إِلَّا قَلِيلًا مِّنْهُمْ

அவர்கள் தங்களுடைய உறுதிமொழிக்கு மாறுசெய்ததன் காரணமாக, நாம் அவர்களை சபித்து, அவர்களுடைய இருதயங்களை இறுகச் செய்துவிட்டோம். ஆகவே அவர்கள் தங்கள் வேதவசனங்களை, அவற்றின் உண்மை அர்த்தங்களிலிருந்து புரட்டுகிறார்கள். அன்றி, அதில் அவர்களுக்கு நினைவூட்டப் பெற்றிருந்த பாகத்தையும் மறந்துவிட்டார்கள். (5:13)



"அவர்கள்" என்று இவ்வசனத்தில் குறிப்பிடுவது யூதர்களையும், கிறிஸ்தவர்களையும் சுட்டிக் காண்பிக்கின்றன என்றும், "வேதவசனங்களை அவற்றின் இடங்களை விட்டும் (மகிழ்ச்சியுடன்) மாற்றி விடுகின்றனர் என்ற சொற்றொடரும் தவ்றாத், இன்ஜீலுக்கே பொருந்தும்; அவற்றிலுள்ள வசனங்களைத்தான் இவர்கள் மாற்றிவிட்டனர். என்றும் சிலர் வியாக்யானம் செய்கின்றனர்.

அல்பஹரா 2;75ம் வசனத்தைப்போன்றே அல்மாயிதா 5:13-ம் வசனமும், தற்காலிகமாக இஸ்லாமில் சேர்ந்துவிட்டுபின்னர் தங்கள் பூர்வீக மதங்களுக்கே திரும்பிப் போய் விட்ட யூதர்களையும் கிறிஸ்தவர்களையும் குறிக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை இப்படிபட்டவர்களே இஸ்லாத்தின் செய்தியையும், முஹம்மதுவின்போதனைகளையும் கண்டறிந்த பின்னரும், தங்கள் பழைய வழிக்கே / வாழ்க்கைக்கே திரும்பிவிட்டனர் என்ற குற்றச்சாட்டுக்கு இலக்காகின்றனர். அல்மாயிதா 5:13-ம் வசனத்தை, 7 முதல் 14-ம் வசனங்களின் பின்புலத்தில் வைத்துப்படித்தால்தான் அதன் மெய்ப்பொருள் விளங்கும். எனவே பரிசுத்த வேதாகமத்தை திருத்தியோ மாற்றியோ விட்டதற்கு அல்மாயிதா 5:13ஐ பிரயோகிக்க முடியாது என்பது வெள்ளிடை மலை.

## நமது முடிவு

மேற்கண்ட மூன்று முக்கியமான குர்ஆனின் வசனங்களைப் போலவே, வேறு பல வசனங்களும் பைபிளின் உண்மையை புறக்கணிப்பது போல தோன்றுகிறது. ஆகிலும் அவற்றை எல்லாம் தீர்க்கமாக ஆராய்ந்து பார்த்த பின்னர் நான் கண்டறிந்த உண்மையாவது பைபிள் அதன் பூர்வீக தூய்மையிலிருந்து எவ்வளவேனும் களங்கப்படுத்தப் பட்டதாக குர்ஆனில் ஒரு வசனமாவது, ஒரு குறிப்பாவது இல்லை. ஆதிமுதல் எழுதப்பட்ட விதமாகவே பைபிள் இருக்கிறது என்று தீர்மானித்தேன்.

முடிவாக தேவனை அவரது சித்தப்படியே ஆராதித்து அவருக்கு ஊழியம் செய்ய விரும்பும் ஒவ்வொருவருக்கும் சத்திய வேதாகமம் ஒப்பற்ற ஒரே வழிகாட்டியாக இருக்கிறது என்பதைத்தான் அல்மாயிதா 5:68, அல்பஹ்ரா 2;62 அல்ஸஜாதா இன்னும்பிற குர்ஆனின் வாக்கியங்களும் குறிப்பிடுகின்றன.



## சூழ்நிலைகளின் தாக்குதல்களுக்கு எதிரான எனது போராட்டம்

பரிசுத்த வேதாகமத்தின் அடிப்படை உண்மைகளை எல்லாம் பூரணமான சத்தியம் என்று என் உளமாற நான் விசுவாசித்தும், ஏற்றுக் கொண்டும் இருந்தபோதிலும், வெளிப்படையாக ஞானஸ்நானத்தின் மூலம் கீழ்படிந்து கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்து என்னுடைய சொந்த இரட்சகர் என்றுஅறிக்கை செய்வதற்கு என்னுடைய சந்தர்ப்பங்களும் சூழ்நிலைகளும் முட்டுக்கட்டையாக இருந்தன. பயமும் பீதியும், விசாரமும் கவலையும் என்னை மிகவும் வாட்டின.

என்னைப் போன்று அநேக சத்தியத்தை அறிந்த பின்னர் கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவை தங்களுடைய சொந்த இரட்சகராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக் கொள்வதற்கு விருப்பம் தெரிவித்த போதிலும், அவர்களது சமயப் பற்றுகளும், சமுதாய கட்டுப்பாடுகளும், குடும்பச் சூழ்நிலைகளும் அவர்களுக்கு பெரிய இடையூறாக இருக்கின்றன என்பதை எனது அனுபவம் எடுத்துக் காண்பிக்கின்றது. தங்களுடைய பெற்றோருக்கும், இன பந்துக்களுக்கம்

துக்கமும் கோபமும் உண்டாகுமே என அஞ்சுகின்றனர். துவக்கத்தில் தங்களுக்கு வரப்போகும் துன்பங்களையும், உபத்திரவங்களையும் கண்டு பின்வாங்குகின்றனர். மேலும் தாங்கள் கிறிஸ்தவர்களாகிவிட்டது மேலதிகாரிகளுக்கும், எஜமானர்களுக்கும் தெரியவந்தால் தங்களுடைய வேலையும் வருவாயும் பறிபோகும் அபாயத்தை எதிர் நோக்கி அஞ்சுகின்றனர். ஒரு விசுவாசி தாம் திருமணம் செய்யப் போகின்ற பெண்ணிடம் அவளும் இயேசுக் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளுமாறு கூறின வேளையில் ஒரு பெரிய போராட்டம் ஏற்பட்டதை நான் அறிவேன். இன்னும் விசுவாசத்துக்குள் வந்த கணவன்மார்களுக்கும், மனைவிமார்களுக்கும் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையில் பிரச்சனைகள் வருவது மிகவும் சகஜமே. இவ்வாறு பல தடைகளைத் தாண்டித்தான். ஒருவர் இயேசுக் கிறிஸ்துவை தன் உள்ளத்தில் இரட்சகராகவும் இராஜாவாகவும் ஆளும்படி அனுமதி கொடுக்க வேண்டியுள்ளது.

சந்தர்ப்ப சூழ்நிலைகளின் பயங்கர தாக்குதல்கள் எவ்வாறு இருக்கும் என்று நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மத்தேயு 10:34ல் எச்சரித்துள்ளார். கிறிஸ்துவை பின்செல்ல ஆசிக்கும் ஒவ்வொருவரும் துன்பங்கள் அனுபவிக்கத் தயாராக இருக்க வேண்டும்



என்று ஐயந்திரிபற கூறுகின்றார். பெற்றோராலும், உற்றாராலும் பகைக்கப்படுவர்; அல்லது அவர்கள் உயிருக்கே ஆபத்து ஏற்படலாம் – இவை எதற்கும் தயாராக இருக்க வேண்டும் என்று கர்த்தரே முன்னறிவிக்கவில்லையா? ஆகிலும், செல்லும் செலவைக் கணக்கிட்டு, முழுக்கிரயத்தையும் செலுத்துவதற்கும் ஆயத்தமுள்ளோர், சீக்கிரமாகவே இவ்விதமான கவலைகள், விசாரங்களிலிருந்து விடுதலை பெறுவர் என்பது திண்ணம். ஒவ்வொரு கவலையையும், பயத்தையும் மேற்கொள்ள தேவனே பெலனளிப்பார். நான் உன்னைவிட்டு ஒருக்காலும் விலகுவதில்லை; உன்னைக் கைவிடுவதும் இல்லை என்று உறுதியளித்துள்ள ஆண்டவரின் பிரசன்னம் இந்த சூழ்நிலைத் தாக்குதல்களினின்று வெற்றிபெற எனக்கு உதவிற்று. ஒவ்வொரு நெருக்கடியிலும் கர்த்தரே எனக்கு விடுதலையின் மார்க்கத்தை திறந்தார்.

1961 முதல் 1964 வரை நான் இரு சமயங்களுக்கும் உண்மையுள்ளவனாக இருந்தேன். இஸ்லாமின் சடங்காசாரங்களையும் விட்டுவிடவில்லை; கிறிஸ்தவத்தின் விசுவாசப் பிரமாணத்திற்கும் உண்மையுள்ளவனாக இருந்தேன்! இஸ்லாமிய முறைப்படி தொழுகை செய்து ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பள்ளி வாசல் சென்று வந்தேன்.

ஞாயிற்றுக் கிழமைகளில் கிறிஸ்தவ ஆலயத்துக்கும், சில வேளைகளில் சனிக்கிழமைகளில் ஏழாம் நாள் ஓய்வுக்காரரின் கூட்டங்களிலும் கலந்து கொண்டேன் இதுதான் சத்தியம் என்றும் தெளிவாக அறியாத காரணத்தால் நான் பலவிதமான கிறிஸ்தவ வழிபாட்டுதலங்களுக்குச் சென்று சத்தியத்தை ஆராய்ந்தறிய முற்பட்டேன். கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களின் நூல்களைப்படித்து, அவற்றின் மூலமாக கிறிஸ்தவர்களும் விக்கிரகங்களையும், சிலைகளையும், படங்களையும் வைத்து வணங்குகிறார்கள் என்று யூகித்து கொண்டேன். ஜக்கார்த்தா ( இந்தோனேஷியாவின் தலைநகர் ) வையும் அதைச் சுற்றிலுமுள்ள ஆலயங்களுக்கும் சென்று விக்கிரக ஆராதனை நடைபெறுகிறதா என்று உற்று கவனித்தேன்.

இறுதியாக என்னுடைய சந்தேகத்திற்கு எந்தவித ஆதாரமும் இல்லை எனவும், கிறிஸ்தவ சபைகளில் சிலைவணக்கம் இல்லை எனவும் முடிவு செய்தேன்.

1964-ம் ஆண்டிலிருந்தே, என் இருதயத்தை சத்திய ஆவியானவராகிய பரிசுத்த ஆவியானவர் நிரப்பிவிட்டார். அதுமுதல் கர்த்தராகிய இயேசுவை மனப்பூர்வமான எனது இரட்சகராக ஏற்றுக் கொள்ள தீர்மானித்து விட்டேன். ஆகிலும் எனக்குள் பதுங்கி



இருந்த பயமும் பெலவீனமும் பகிரங்கமாக கிறிஸ்துவை அறிக்கை செய்யாதபடி என்னைத் தடுத்தன. ஒரு அந்தரங்க கிறிஸ்தவனாகவே இருந்து வந்தேன். எனது உள்ளத்தின் போராட்டத்திற்கு க்விடாங் என்ற இடத்திலுள்ள கிறிஸ்தவ சபைக்குச் சென்று எனக்கு இரகசியமாக ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தேன். ஏனென்றால் என் மனைவிக்கும், குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் தெரியக்கூடாது என்று விரும்பினேன். அந்த சபைக்கு போதகர் அல்லது தலைவர் யாரென்று எனக்கு தெரியாமலிருந்தது; ஆனால் அந்த சபையின் ஒழுங்குப்படி ஒருவருக்கும் இரகசிய ஞானஸ்நானம் கொடுக்கக் கூடாது என்ற மரபின்படி எனது வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டது.

சில வாரங்கள் சென்ற பிறகு, இதே நோக்கத்தோடு ஐத்தி நெகரா என்ற ஊரிலுள்ள பெத்தேல் சபை போதகர் அருள் திரு. சவுலெத்தே அவர்களை அணுகி என் உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தினேன். அவர் எனக்கு இரகசியமாக ஞானஸ்நானம் கொடுக்க சம்மதித்தார்; ஆனால் நான் திருமுழுக்கு பெற்ற பிறகு எனக்கு நல்ல ஆவிக்குரிய ஆலோசனைகள் கொடுக்கவும், கிறிஸ்தவ ஜீவியத்தில் வழிநடத்தவும் உறுதுணையாயிருக்கக் கூடிய இரண்டு

மூன்று சகாக்களை அழைத்துக் கொண்டுவரும்படி சொன்னார். இந்த நிபந்தனையை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை; ஏனெனில் அதற்கு பின்னர் என்னுடைய ஞானஸ்நான செய்தி இரகசியமாயிருக்க முடியாது. வீட்டிலும், வெளியிலும் அநேக குழப்பங்கள் வரும் என்று அஞ்சினேன். என்னுடைய மனைவியை ஆலயத்துக்கு வரும்படி வற்புறுத்தினால், அவள் என்மீது குரோதங்கொண்டு என்னைப் பழிவாங்கி விடுவாள் என்று பயந்தேன். இஸ்லாமிய திருமணப்பதிவாளரிடம் என்னை அழைத்துக் கொண்டு போய் விவாகரத்துக்கு மனுச் செய்யலாம்; அப்பொழுது எனது நிலை மிகவும் தர்ம சங்கடமாகிவிடும். இக்காரணத்தை முன்னிட்டே நான் இரகசிய கிறிஸ்தவனாக இருந்து காலங்கழிக்க விரும்பினேன்! ஆகிலும் என்மனப் போராட்டத்திற்கெல்லாம் முற்றுப் புள்ளியாக.

இனியும் நான் நிலைமாற மாட்டேன்; என் இயேசு இரட்சகரை யாவர் முன்னிலையிலும் ஏற்றுக் கொள்வேன், என்று என் ஆத்துமா என்னோடு சொல்லிற்று, இப்பொழுது இருதலைக் கொள்ளிபோல் இஸ்லாத்துக்கும் கிறிஸ்தவத்துக்கும் கட்டுப்பட்டிருக்க முயற்சிக்காமல், கிறிஸ்தவ ஆராதனைக்கே சென்று வரலானேன். ஆகிலும் அந்தராத்மாவில் உள்ள பயத்தை எப்படி மேற்கொள்வதென்று



அறியாதிருந்தேன். யாருடைய ஆலோசனையையும் உதவியையும் நாடாதவனாக எனக்குள்ளேயே மிகவும் வாதிக்கப்பட்டேன்.

என் மனக் கலக்கங்களையெல்லாம் நன்கு அறிந்திருந்த என் தேவன் தமது வேளையில் தமது சித்தப்படியே எனது போராட்டத்திலிருந்து விடுதலை ஈந்தார். முன்பெல்லாம் என் மனைவியுடன் என் விசுவாசத்தை பகிர்ந்து கொண்டால் நிச்சயமாக பிரச்சனை ஏற்படும் என்று பயந்திருந்தேன். ஆனால் அவள் மூலமாகவே தேவன் கிருபையாகப் பேச ஆரம்பித்தார். அப்பொழுது கிறிஸ்துமஸ் இல்லங்களில் அலங்காரமாக வைக்கப்பட்டிருந்த மரவிழா (Christmas trees) மற்றும் உள்ளத்தில் சமாதானத்துக்கும் சந்தோஷத்துக்கும் அடையாளங்களாக காணப்பட்டன.

அவளுடைய உள்ளத்தில் என்றுமில்லா அமைதியும், சாந்தியும், பரலோக ஒளியும் மிளிர ஆரம்பித்தன. அவ்வேளையில் எனது மனைவியும் ஒரு மகளும் என்னிடம் வந்து, நாமெல்லாரும் கிறிஸ்தவர்களாகி நமது குடும்பம் கிறிஸ்துவை தலையாகக் கொண்டிருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் எனறு உணர்ச்சியுடன் கூறினார். இதுவே நான் அதுகாரும் காத்திருந்த அரிய சந்தர்ப்பம்!

அடுத்த நாள் கிறிஸ்துமஸ் பண்டிகையாக இருந்தது. நான் மறுபடியும் சந்தித்து நானும் என் குடும்பத்தினரும் இயேசுக் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்களாக திருமுழுக்கு பெற ஆவலோடிருக்கிறோம் எனக் கூறினேன். அவரும் சொல்லொண்ணா ஆனந்தம் அடைந்தவராய் என் வேண்டுகோளுக்கு இணங்கி எனக்கும், எனது மனைவிக்கும் எங்களுடைய ஏழு பிள்ளைகளுக்கும் 1969 டிசம்பர் 26 திங்களில் ஞானஸ்நானம் கொடுத்தார். திருமுழுக்குப் பெறாமல் விடப்பட்ட எங்கள் மகனும் மறுவாரத்திலேயே ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டான். அவனும் அந்தரங்க கிறிஸ்தவனாகவே ஆலயங்களுக்கு போய் வந்திருந்தான். நான் என்னுடைய மனைவி பிள்ளைகள் உண்மையை அறிந்து கொள்வார்களோ என்று பயந்திருந்தது போல அவனும் எனக்கு பயந்திருந்தான். உண்மையில் நாங்கள் கண்ணாம்பூச்சி விளையாட்டு விளையாடிக் கொண்டிருந்தோம்! கர்த்தருக்கு ஸ்தோத்திர முண்டாவதாக! எனது குடும்பத்தில் ஒருவர் பாக்கியில்லாமல் எல்லாருமே கர்த்தருடைய பிள்ளைகளாகிவிட்டோம்; எங்களுடைய இருதயங்களில் இயேசு கிறிஸ்துவே ஆட்சி செய்கிறார்.

## மகிழ்ச்சியான பல ஆசீர்வாதங்கள்

டிசம்பர் 26, 1969ம் நானும் என் குடும்பத்தினரனைவரும் கர்த்தரை ஏற்றுக் கொண்டு



திருமுழுக்குப் பெற்றதிலிருந்து எங்களிடத்தில் அநேக சந்தோஷமான மாறுதல்கள் தோன்றின. எங்களுடைய வாழ்க்கை முழுவதையும் மாற்றி அமைக்கத்தக்க ஆசீர்வாதங்களை தேவன் பொழிந்தருளினார்.

அப்போஸ்தலனாகிய பவுல் 2கொரிந்தியர் 5:17ல் கூறுவது எத்தனை உண்மையாயிருக்கிறது! "இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான் பழையவைகள் ஒழிந்து போயின எல்லாம் புதிதாயின." ஒருவன் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை தன்னுடைய சொந்த இரட்சகராக அங்கீகரிக்கும்போது தேவன் அவனுடைய வாழ்க்கையில் பெரியதொரு மாற்றத்தைக் கொண்டு வருகிறார். "தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார்" (ஆதியாகமம் 1:27) இந்தப்புதிய சுபாவத்திலிருந்து புதிய மகிழ்ச்சியும், புதியவிதமான அன்பும், புதுமையான வாஞ்சைகளும் தோன்றுகின்றன. முன்பு அவன் எதை நேசித்தானோ, அதை இப்பொழுது வெறுக்கிறான்; முன்பு எதை வெறுத்தானோ அதை இப்பொழுது நாடுகிறான். இந்த மாறுதல்கள் எல்லாம் யதார்த்தமான வையாகவும், மற்றவர்கள் அடையாளங் கண்டு கொள்ளக் கூடியவனாகவும் இருக்கின்றன. அவனுடைய நடை, உடை, பாவனை, சிந்தனை சொல், செயல்

அனைத்திலுமே மாற்றம். இப்பொழுது அவனைக் காண்போர் ஒரு புதிய மனிதனைத்தான் சந்திக்கின்றனர். என்ன அற்புதம்!

இந்த விதமான மாறுதல்கள் எல்லாம் என்னிடத்திலும், என் குடும்பத்தாரிடத்திலும் வெளிப்படலாயின. கோபமும் எரிச்சலும் தணிந்து, அன்பும் சாந்தமும் அதிகரிக்கலாயின. எங்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்திலும் அதிகமான சமாதானத்தையும் சந்தோஷத்தையும் உணர்ந்தோம். எங்கள் சந்தேகங்கள் எல்லாம் நீங்கிப் போயின கேள்விகளுக்கெல்லாம் சரியான பதில் கிடைத்து விட்டன. எங்கள் ஆத்துமாக்களில் திடநம்பிக்கையும், நித்திய பாதுகாப்பும், சொல்லிமுடியாததும் மகிமையால் நிறைந்ததுமான சந்தோஷமும் பொங்கி வழிந்தன. எங்களுடைய பொருளாதார நிலையும் வளம் பெறலாயிற்று. இவையனைத்தும் தேவன் தம்முடைய வாக்குறுதிகளையும், உடன்படிக்கையையும் தம்முடைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவர்களுக்கு குறைவில்லாமல் நிறைவேற்றுகிறார் என்பதை அனுபவ ரீதியாக நிரூபிக்கின்றன.

"பண்டிகையின் கடைசி நாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று, சத்தமிட்டு "ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம்



பண்ணக்கடவன். வேத வாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவ தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார்." (யோவான் 7:37,38)

"நானே அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்" (யோவான் 10:10)

எங்களுடைய குடும்பத்திலும், வாழ்க்கையிலும் ஏற்பட்ட மாற்றங்களையும், நாங்கள் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பதையும் கண்ட அயலகத்தாரும் சுற்றத்தாரும் காழ்ப்புணர்ச்சியால் எங்களைப் பற்றி தீதாகப் பேசவும், பரியாசம் பண்ணவும் துணிந்தனர். நாங்கள் கிறிஸ்தவர்களாகி விட்டபடியால் அதற்கு வெகுமதியாக, எங்களுக்கு அயல்நாட்டுக் கொடை கிடைத்திருப்பதாகவும் பேசிக் கொண்டார்கள். சீக்கிரமாக பணக்காரராக விரும்பினால் திரு. அம்ப்ரியின் முன்மாதிரியை பின்பற்றவும்; நீங்கள் "நீங்கள் கிறிஸ்தவர்களாக மதம் மாறி விடுவீர்கள் என்றால் கிறிஸ்தவ சபைகளிடமிருந்து இலட்சக்கணக்கான ரூபாய் இலவசமாகக் கிடைக்கும்" என்று அநேக மக்கள் ஏளனம் பண்ணினார்கள்.

எங்களுடைய செல்வச் சீரைப்பார்த்து நாங்கள் கிறிஸ்தவர்களானதற்காக கிடைத்த கைக் கூலி அல்லது லஞ்சம் என்று சந்தேகிக்கலாயினார். ஆனால்

உண்மை அதுவல்ல! நாங்கள் எந்த கிறிஸ்தவ ஸ்தாபனத்திடமிருந்தும் எந்தவிதமான உதவியையும் பெற்றுக்கொள்ளவில்லை. யாருடைய அச்சுறுத்தலுக்கும் அல்லது ஆசை வார்த்தைகளுக்கும் இணங்கி கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளவில்லை. பணம், பொருள் அல்லது வேலை கொடுப்போம் என்று எந்த கிறிஸ்தவரும் நப்பாசை காண்பிக்கவில்லை. கர்த்தருக்கு மகிமையாக நாங்கள் ஒரு பைசா கூட அநாவசியமாக ஒருவரிடமிருந்தும் பெறவில்லை என்று சாட்சி கூறுகிறேன். பெருந்தகையாளரும், நன்கொடை வழங்குவதில் ஈடு இணையற்றவருமான கடவுளே அவருடைய ஐசுவரியத்தின்படி எங்களை ஆசீர்வதித்தார். அவரை நம்புவோருக்கு அபரிமிதமான ஆசீர்வாதங்களை பரிபூரணமாய் வழங்கப்படும் என்பது அவருடைய நிலைமாறாத வாக்குத்தத்தம் அல்லவா!!

## என்னுடைய செயலற்ற, பயனற்ற கிறிஸ்தவ ஆண்டுகள்

1970 முதல் 1972 வரை நான் ஒரு செயலிழந்த கிறிஸ்தவனாக இருந்தேன் என்று கூறினால் மிகையாகாது. நான் என்னுடைய வாணிபத்தை வளர்ப்பதிலும், என்னுடைய குடும்பத்தை கவனிப்பதிலுமே எனது பெரும்பாலான நேரத்தை



செலவிட்டு வந்தேன். ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் ஆலயத்துக்குச் செல்வதிலும், ஓய்வு நேரங்களில் சிறிது வேதம் வாசிப்பதிலும் காலத்தை கழித்தேன். இவ்விதமான எனது உலக சிந்தையினிமித்தம் கர்த்தர் என்னைக் கடிந்து கொண்டார். ஏனோதானோ வென்றிருக்கிற வெதுவெதுப்பான என்னுடைய கிறிஸ்தவ ஜீவியத்தைக் குறித்து தேவன் எச்சரிப்பதை உணர்ந்தேன். உன்னுடைய வாழ்க்கையில் நீ பெற்ற ஆசீர்வாதங்களை அனுபவிப்பதிலேயே காலங் கடத்துவது தகாது என்றும்,அது சோம்பேறி வாழ்க்கை என்றும் தேவன் உணர்த்தினார். கிறிஸ்தவ ஜீவியத்தில் 'பார்வையாளர்கள்' என்ற வகுப்பே கிடையாது என்று வெளிப்படுத்தினார். மத்தேயு 28:19-20 கர்த்தர் கொடுத்த கடைசி கட்டளையை உண்மையாய், உத்தமமாய் நிறைவேற்றுகிற சாட்சியாகவும், சீஷனாகவும் இருக்க வேண்டும் என்று கர்த்தர் ஞாபகப்படுத்தினார்.

நான் எவ்விதமாக வெளிப்படையாக கிறிஸ்துவைக் குறித்து சாட்சி சொல்வேன் என்ற திகைப்பு எனக்குத் தோன்றினது. சுவிசேஷ ஊழியத்தை செய்ய வாஞ்சையுள்ளவனாய் இருந்தபோதிலும் அதை எங்கே, எப்படி துவங்குவதென்று அறியாதவனாக இருந்தேன். இதிலும் கிருபையாக கர்த்தரே எனக்கு அனுகூலமான வாசலைத் திறந்து வழி நடத்தினார்.

பன்ஜார்மாசினிலிருந்து என்னுடைய நெருங்கிய நண்பர் ஒரு நாள் வந்து எங்களுடன் இராத்தங்கினார். அவர் எங்களுடைய வாழ்விலும் தாழ்விலும், எல்லா இலாப நஷ்டங்களிலும் பங்கெடுத்த ஆருயிர் நண்பராக இருந்தார். சில வேளைகளில் டச்சு இராணுவத்தினால் கைது செய்யப்பட்ட பொழுது நாங்கள் இருவரும் ஒன்றாகவே சிறைக் கூடத்திலும், வேறு கைதிகள் முகாமிலும் தங்கி இருந்திருக்கிறோம்.

பழைய வழக்கத்தின் படியே, 'அஸ்ஸலாமு அலைக்கும்' என்ற இஸ்லாமிய வாழ்த்துதலை கூறிக்கொண்டே எங்கள் வீட்டிற்குள் நுழைந்தார். நாங்கள் கிறிஸ்தவர்கள் ஆகிவிட்டோம் என்பதற்கான அறிகுறிகள் எதுவும் எங்கள் இல்லத்தில் காணப்படவில்லை. நானும் அவர் கூறினதற்கு பதிலாக, 'வா அலைக்கும் அஸ்ஸலாம்' என்று அவரை வரவேற்றேன். வேறு சில நண்பர்கள் மூலமாக நான் கிறிஸ்தவனாகி விட்ட செய்தியை அவர் கேள்விப் பட்டிருந்தார். ஆனால் அவர் அதை நம்பவில்லை. அப்படிக் கூறினவர்களுக்கு கடுமையான மாறுத்தரமும் அளித்திருந்தார். "எனது ஆத்ம நண்பர் ஹம்ரான் அம்ப்ரியை பல ஆண்டுகளாக நன்கு அறிவேன். ஜக்கார்த்தாவில் மாத்திரம் அல்ல, பன்ஜார்மாசினிலும் நான் அவருடன் நெருங்கி பழகி இருக்கிறேன். அவர் ஒரு சாதாரண முஸ்லிம் என்று



எண்ணிக் கொள்ள வேண்டாம்; அவர் தம்முடைய மதத்தற்காக இரத்தம் சிந்தவும், உயிரைத் துச்சமாகவும் மதிக்கக் கூடிய கிறிஸ்தவ எதிர்ப்பாளர் என்று நன்கு அறிவேன். மேலும் முகம்மதியா தலைவர்களுள் ஒருவர், இஸ்லாமிய பத்திரிக்கை ஆசிரியர், மதப்பிரச்சாரகர் என்றெல்லாம் கலிமந்தான் மாநிலம் முழுவதிலும் நன்கு அறியப்பட்டவர்; 1947ல் அமுந்தாய் என்ற இடத்தில் நடைபெற்ற அகில கலிமந்தான் இஸ்லாமிய காங்கிரஸின் தலைவராகவும், மதத்தைக் காப்பவராகவும், வளர்ப்பவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவை போதாதென்று பன்ஜார் மாசின் இராணுவத்தில் ஹம்ரான் அவர்கள்தான் தலைமை இஸ்லாமியப்போதகராக நியமிக்கப்பட்டிருக்கிறார். ஹம்ரான் அம்ப்ரி ஒருபோதும் மதம்மாற மாட்டார்; நிச்சயமாக கிறிஸ்தவத்தை தழுவவே மாட்டார்." இவ்வாறு அடுக்கிக் கொண்டே போனார்.

ஆனால் என்னுடைய பக்கத்து வீட்டுக்காரர், நான் கிறிஸ்தவனாக மாறிவிட்டதையும் முழுக்குடும்பமாக மதம்மாறி போய் விட்டனர் என்றும், பல வருஷங்களாகவே கிறிஸ்தவ ஆலயத்திற்கு நான் போய்வருகிற உண்மையை ஊர்ஜிதப்படுத்தி சமீபத்தில்தான் மரவிழா வைத்து பண்டிகை கொண்டாடினதாகவும் அவருக்கு மறுக்க முடியாத

சான்றுகளைக் கொடுத்து அவரை நம்ப வைத்தார். நேரடியாகவே ஹம்ரானிடம் கேட்டு தெரிந்து கொள்ளுமாறும் வற்புறுத்தி அனுப்பியிருந்தார்.

எனவே அந்த நண்பர் எங்கள் வீட்டிற்குள் நுழைந்தும் அவர் கேள்விப்பட்டதெல்லாம் உண்மைதானா; நாங்கள் கிறிஸ்தவர்களாகி விட்டோம் என்று முகமுகமாய் வினவினார். உடனடியாக நானும் உண்மையை மறைக்காமல் வார்த்தைகளை விழுங்காமல்; "ஆம் எனது நண்பரே நீர்கேள்விப்பட்டது நிஜந்தான்; நானும் என் குடும்பத்தினர் அனைவரும் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறோம்." என்று பதிலளித்தேன்.

என்னுடைய பதிலைக் கேட்டவுடன் அவர் மிகவும் அழுதார். அவருடைய இருதயத்தில் ஈட்டி கொண்டு குத்தினது போல் வேதனைப்பட ஆரம்பித்தார். அவரால் வேறு எதுவும் செய்ய முடியாத நிலையில் ஒரு கணம் வியப்பிலும் துக்கத்திலும் ஆழ்ந்து கற்சிலையாக நின்று விட்டார். பின்னர் அவர் பன்ஜார்மாசினுக்கு திரும்பிச் சென்றபோது எல்லாரிடமும் எனது நிலையை எடுத்துரைத்தார்.

இந்தச் செய்தி காட்டுத் தீபோல் பரவவே பன்ஜார் மாசினில் உள்ள என்னுடைய இன்னொரு நெருங்கிய நண்பர் அர்ஸியாத் மானன் என்ற இஸ்லாமிய பத்திரிக்கையாசிரியர் ஹரியான் உத்தாமா என்ற இஸ்லாமிய நாளிதழில்



**ஒரு பிரபல இஸ்லாமிய இயக்கத்தின் தலைவர் கிறிஸ்தவராகிறார்.**

என்ற தலைப்பின்கீழ், முகம்மதியா வகுப்பை சேர்ந்தவரும், தனது வாலிபத்தின் கீர்த்தி வாய்ந்த தலைவரும், 'ஜிஹாத்' என்ற பத்திரிகையின் தலைமைப் பதிப்பாளருமாக இருந்தவர் என்று செய்தி வெளியானது.

வேறுபல எழுத்தாளர்களும் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிடலாயினர். அண்டிமமாஸ் என்பவர்.

**முகம்மதியா இயக்கத்தின் முக்கியஸ்தர் கிறிஸ்தவராக மதம் மாறி விட்டார்;**

அதிர்ச்சி தரும் செய்தி !

ஆர்த்தும் ஆர்தா என்ற வேறொரு எழுத்தாளர்: "இந்தத் தகவல் உண்மையல்ல என நம்புகிறோம்: சுதந்திர போராட்ட வீரர்களுள் முன்னோடியான ஹம்ரான் அம்ப்ரி மதம் மாறி விட்டார் என்பது இன்னும் கேள்விக் குறியாகவே இருக்கிறது!"

பெயர் சொல்லப்படாத வேறொரு எழுத்தாளர்: "அண்மைக்கால பொருளாதார சிக்கல்கள் இஸ்லாமில் ஊறிப்போன ஒரு மதவாதியை மதம் மாறச் செய்துவிட்டன" என்று பன்ஜார் மாசினில் உள்ள முஸ்லிம்களுக்கு வெறுப்புடன் எழுதினார்.

I.A.I.N. அண்டசாரி முஸ்லிம் பல்லைக்கழகமும் என்னுடைய மனந்திரும்புதலுக்கு பெரிய எதிர்ப்பு தெரிவித்தது. இதற்கிடையில் P.M.W. (முகம்மதியா) கழகத்தின் செயலாளர், நான் ஒரு முகம்மதியா முக்கியஸ்தராக இருந்த வரலாற்றையே மறைக்க பிரயாசப்பட்டார் என்றாலும் நான் ஒருசிறந்த முஸ்லிம் போராட்டக்காரர் என்று அங்கிகரித்திருந்தார்.

இவ்வாறு என்னைப்பற்றி பல அவதூறான செய்திகளும் இந்த இஸ்லாமிய பத்திரிக்கையிலே வெளியாகி வந்தன. அவர்களுடைய நோக்கம் எல்லாம் என்னை அவமானப்படுத்துவதின் மூலமாக நான் இஸ்லாமுக்கு திரும்பி வந்து விடுவேன் என்று எதிர்பார்த்தனர். ஆனால் அவர்களுடைய எண்ணம் தேவனுடைய சித்தத்திலிருந்து வேறுபட்டதாயிருந்தது. இவ்வாறு அவர்கள் என்னைக் கிளறிவிட்டு கோபமூட்டவே, அது நற்பயனை அழித்தது. நான் இரட்சிக்கப்பட்ட சாட்சியையும், கிறிஸ்துவின் தேவ தன்மையையும் பறைசாற்றுவதற்கு என்னை தூண்டி எழுப்பும் கருவியாய் அமைந்தது.

இவ்வாறு அடுத்த இரண்டு மாதங்களும் என்னைப் பற்றியே அதிகமானசெய்திகள் கொட்டை எழுத்திலும் தலையங்கத்திலும் பன்ஜார் மாசினிலிருந்து ஹரியான் உத்தாமா செய்தித் தாளில்



வெளியிடப்பட்டன. சில இடங்களில் வெட்டு, குத்து சண்டைகளும் ஏற்பட்டதாக அறிந்தேன். ஏனென்றால் அந்த செய்தி துணுக்குகளை நம்பாத என்னுடைய நண்பர்களில் சிலர் என்னைப்பற்றி உண்மைக்குப் புறம்பாக, அவதூறாக எழுதினதாக அவர்களைத் தாக்கினர். நல்ல வேளையாக நான் உடனே அந்த செய்தி தாளுக்கு ஒரு பகிரங்கமான கடிதம் எழுதினேன். அதனை இவ்வாறு வெளியிட்டனர்.

**<u>ஹரியான் உத்தாமா வாசகர்களுக்கு ஒரு திறந்த கடிதம்</u>**

அஸ்ஸலாமு அலைக்கும்
மதிப்பிற்குரிய சான்றோரே.

இதன் மூலமாக நான் ஒரு புராட்டஸ்டாண்ட் கிறிஸ்தவனாக மாறிவிட்டேன் என்பது உண்மையே எனத் தெரியப்படுத்துகிறேன். 1964-ம் ஆண்டிலிருந்தே நான் என் இருதயத்தில் மாறி விட்டேன்.

நான் ஒரு இஸ்லாமியத் தலைவன் என்றும் சுதந்திர போராட்ட வீரர்களின் வரிசையில் முன்னணியில் நிற்பவன் என்றும் உங்களுடைய செய்தித்தாள் என் உள்ளத்தை நெகிழ வைக்கின்றன.

நான் ஒரு தலைசிறந்த முஸ்லிம் என்றோ சுதந்திர போராட்ட தலைவன் என்றோ ஒருபோதும் உணர்ந்தது மில்லை உரிமை பாராட்டினதுமில்லை

என்ற போதிலும் நீங்கள் எனக்கு இந்தப் பட்டங்களை வழங்குவதற்காக நன்றியுள்ளவனாயிருக்கிறேன். கடந்த நாட்களில் எனது நண்பர்கள் கூறினபடி நான் போராட்டங்களில் ஈடுபட்டதற்கான காரணம் அல்லது நோக்கம் என்னவென்றால் நான் நமது தாய்நாட்டின் மகன் என்ற கடமையுணர்ச்சியே தவிர வேறல்ல. ஆதலால் எந்தவொறு பட்டத்தையும், பாராட்டையும், வெகுமதியையும் கைமாறாக எதிர்பார்த்து தியாகம் செய்யவில்லை. எனது கடமையைத் தான் நிறைவேற்றி உள்ளேன்.

என்னுடைய நண்பர்களுள், குறிப்பாக அர்ஸியாத்மானன் ஆன்டிமாஸ் மற்றும் ஆர்த்தும் ஆகியோருக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் எல்லாரும் உண்மையைத்தான் எழுதினார்களே தவிர உண்மைக்குப் புறம்பாக ஒன்றும் கூறவில்லை. "சுதந்திர போராட்ட முன்னோடி" என்ற பட்டத்தை பெறுவதற்கான மனுவில் நான் ஒருபோதும் கையெழுத்திடவில்லை என்ற ஒரு திருத்தம் மட்டுமே உண்டு.

நான் புராட்டஸ்டாண்ட் கிறிஸ்தவ சமயத்தை தழுவுவதற்கு அஸ்திபாரமும் அடித்தளமுமாக இருந்த காரணங்களை 'விசுவாசக் குறிப்புகள்' என்று தொகுத்து திரு. ஆர்த்தும் ஆர்த்தாவுக்கு அனுப்பியுள்ளேன்.



என்ன நேர்ந்த போதிலும் சிநேகிதர்கள் சிநேகிதர்களாகவே இருப்பர்; நல்ல நட்பு என்றும் நிலைத்திருக்கும்; அதை அறுத்து விடமுடியாது. சம்மந்தப்பட்ட அனைவருக்கும் எனது வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜக்கார்த்தா, 6 மே, 1972 தங்கள் உண்மையுள்ள

ஹம்ரான் அம்ப்ரீ

## எனது தீவிர கிறிஸ்தவ சாட்சியின் ஆரம்பமும் கிறிஸ்தவ ஜீவியமும்

மேற்கண்ட பகிரங்கக் கடிதம் ஹரியான் உத்தாமாவிலே வெளிவந்தவுடன், பன்ஜார் மற்றும் ஹுலுசுங்காய் முதலான இடங்களிலுள்ள என்னுடைய நண்பர்களிடமிருந்து பல கடிதங்கள் வந்தன. என்னுடைய 'தவறான முடிவுக்காக' அவர்கள் வருத்தந் தெரிவித்தனர்; அத்துடன் புத்திமதி கூறி குர்ஆனின் வசனங்கள் வாயிலாக எச்சரிப்புக்கள் கொடுத்தனர். ஒருசில கடிதங்களில் நான் கிறிஸ்தவனாக மாறுவதற்குரிய காரணங்களையும், சூழ்நிலை களையும் பற்றி விளக்கந்தருமாறு கேட்டிருந்தனர்.

கிறிஸ்துவுக்காக நான் ஒரு ஜீவனுள்ள, தீவிரமான சாட்சியாக விளங்குவதற்கு இவையெல்லாம் அடிப்படை காரணங்களாக அமைந்தன. முதலில் ஒவ்வொரு கடிதத்துக்கும் தனிப்பட்ட முறையில் டைப்

ரைட்டரில் அடித்து பதில்கள் அனுப்பினேன். இந்தக் கடிதங்களையெல்லாம் சேர்த்துப் பார்க்கின்ற வேளையிலே 'எனது விசுவாசக் குறிப்புகள்' என்ற வியாக்கியானத் தொகுப்பு ஸ்டென்சில் பிரதிகளாக வெளி வந்தன. அதைத் தொடர்ந்து, இந்தக் கருத்துக்கள் மேலும் மிகத் தெளிவான ஒரு கட்டுரையாக "தேவன், இயேசு மற்றும் பரிசுத்த ஆவியானவர்" என்ற தலைப்பில் கை அச்சு இயந்தரத்தின் மூலமாக கட்டுரைகள் வெளியாக் கப்பட்டது. 1973ல் எனது அடுத்த வெளியீடாக "கிறிஸ்து இயல் (Christology) மற்றும் தேவனின் ஒருமைப்பாடு" என்ற நூல் உருப்பெற்றது. இதனை தொடர்ந்து, மேலும் பல கேள்விகளும் அனுதாபங்களும் அடங்கிய கடிதங்கள் வந்து குவிந்தன. சத்தியத்தை மேலும் அறிய நாடினோர் சிலர் கலந்துரையாட விரும்பினர்.

ஜக்கார்த்தாவிலிருந்து வெளிவரும் அநேக பத்திரிக்கைகள் எனது விசுவாசத்தை தாக்கி எழுதின. அந்தக் கட்டுரைகளின் பிரதிபலனாக மேலும் பல கடிதங்கள் எனக்கு வந்தன. இப்பொழுது இந்தோனேஷியாவின் எல்லா மாநிலங்களிலிருந்து மட்டுமல்ல மலேசியா, எகிப்து முதலான அயல் நாடுகளிலிருந்தும் கடிதங்கள் வந்தன.



இந்தக் குற்றச் சாட்டுகளுக்கும், விமர்சனங் களுக்கு சரியான பதில் அளிப்பதன் மூலமாக மிகவும் இயல்பாகவும், சுமூகமாகவும் நான் ஒரு திட சாட்சியாயிருப்பதற்கு தேவன் என்னை வழிநடத்திக் கொண்டு வந்தார்.

சிலருடன் ஏற்பட்ட அஞ்சல் வழித் தொடர்பு மாதங்களுக்கும் மேலாக நீடித்தன. கிறிஸ்தவ விசுவாசத்தைப் பற்றிய பல்வேறு அம்சங்களும் விவாதத்திற்கும் வந்தன. அந்தக் கேள்விகளையும் அவற்றுக்கான விடைகளையும் தொகுத்து எழுதின வேளையில் பின்வரும் நூல்கள் உருவாயின.

1. ஜாக்கர்த்தாவிலிருந்து வெளிவரும் கிப்லாத் பத்திரிகையின் துணை ஆசிரியரும் மே தான் நகரத்தைச் சேர்ந்த முஸ்லிம் பத்திரிகை நிரூபருமான H.M. யூஸுஃப் சுயூப் என்பவருடன் கொண்ட கடிதத் தொடர்பு

2. சலத்திஹா என்ற இடத்திலுள்ள இஸ்லாமிய இறையியல் நிபுணர் சமுதியுடன் கொண்ட கடிதத் தொடர்பு.

3. ஜக்கார்த்தாவிலிருந்து பிரசுரமாகும் ஸ்டுடி இஸ்லாம் என்ற பத்திரிக்கையின் ஆசிரியரான இமாம் மூஸாபிரோ
   – ஜோசிஸ் ஓயோ என்பவருடன் கடிதப் பரிமாற்றம்.

4. தாருல் குத்துபில் இஸ்லாமிய ஜக்கார்த்தாவைச் சேர்ந்த வஹியோனோ ஹாதியுடன் கடிதப் போக்குவரத்து.

5. கெய்ரோவிலுள்ள இஸ்லாமிய மாணவரான அலியாக்கூப் மட்டோன்டாங் உடன் கடிதத்தொடர்பு.

6. இந்தோனேஷியாவிலுள்ள டென்பஸார் பாலியைச் சேர்ந்த இஸ்லாம் ஜமாத் அகமதியாவின் சபாநாயகரான ஹஸன்தவ் உடன் கொண்ட கடிதத் தொடர்பு.

7. சுரபயாவிலுள்ள ஒரு முஸ்லிம் மாணவர் சங்கத்தைச் சேர்ந்த யெஷீஃப்பாஹ்மீ உடனும் ஏனையோருடனும் நிகழ்த்தின அஞ்சல் வழி தொடர்பு.

8. பாண்டுங் சிமாஹி மைய மசூதியின் தலைமை மஸ்ஜித் **M.A.** ஃபாட்லியுடன் கொண்ட கடிதத் தொடர்பு.

1979 வரை இந்தோனேஷியாவின் மூலை முடுக்குகளிலிருந்தெல்லாம் இஸ்லாமிய பின்னணியைச் சார்ந்த சகோதரர்களிடமிருந்து வந்த ஆயிரக் கணக்கான கடிதங்களுக்கும் நான் பதில்



அனுப்பினேன். ஒவ்வொரு நாளும் எனக்கு வந்த கடிதங்கள் என்னை மேன்மேலும் உற்சாகப்படுத்தின. ஏனென்றால் அவற்றின் மூலமாக ஆதங்கமும் எவ்வளவாக இருக்கிறன என்பது வெளிப்பட்டது. அவர்களுடைய கேள்விகளுக்கு நான் அளித்த விளக்கங்கள் அவர்களுக்கு திருப்தி அளித்தன. ஒரு சிலர் நேரிலேயே என்னைப் பேட்டி காண வந்தனர். தேவனுக்கு துதியுண்டாவதாக!

இவை எல்லாவற்றிற்காகவும் தேவனை துதிக்கிறோம்! முஸ்லீம்களுக்கு கிறிஸ்தவ சத்தியத்திற்கும் (வேதாகமத்திலுள்ள இயேசுக் கிறிஸ்துவின் தேவத்துவத்துக்கும்) நடுவே ஒரு மத்தியஸ்தர் போல தேவன் என்னைப் பயன்படுத்தினார். அப்போதுதான் அநேக முஸ்லிம் சகோதரர்கள் கிறிஸ்துவை சரியாக புரிந்து கொண்டனர்.

இவ்வித வினா–விடை வகுப்புகளின் மூலமாக பைபிளைப் பற்றியும் கிறிஸ்துவின் தெய்வீகத் தன்மையைப் பற்றி முஸ்லீம்களுக்குள் இருக்கிற தப்பான எண்ணங்கள் எல்லாம் மாறிப்போகும் என்று நம்புகிறேன்.

# அகன்ற வெளி ஊழியங்கள்

1973-லிருந்து பிப்ரவரி மாதம் 1978 வரை எனக்கு வரக்கூடிய கேள்விகள், விசாரணைகள் அடங்கிய கடிதங்களுக்கு பதில் அளிக்கிற விதத்தில் மேசை ஊழியம் அல்லது எழுத்துப்பணி மட்டும் நிறைவேற்றி எனது சாட்சியை பகிர்ந்து வந்தேன். மேலும் இந்தக் கேள்வி பதில்களை சீரிய முறையில் தொகுத்து புஸ்தக வடிவிலும் சத்தியத்தை பரப்பி வந்தேன். இவ்வாறிருக்கின்ற வேளையில், பிப்ரவரி 1978ல் "ஒ என் கர்த்ாவே, நான் இந்த எழுத்துப் பணியின் மூலமாக உம்மைச் சேவித்தது நல்லது; ஆகிலும் இதைவிட விரிவான பணித்தளத்தை எனக்குத்தாரும்" என்று ஊக்கமாக ஜெபித்தேன். இவ்வாறு ஜெபித்துக் கொண்டிருக்கிற வேளையிலேயே நான் மறுநாள் வீட்டை விட்டு வெளியே போக வேண்டும் என்றும், அங்கு பரந்த அளவில் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்வதற்கு பரந்த, விரிந்த, செறிந்த, புதிய தருணங்கள் காண்பிக்கப்படும் என்ற உள்ளுணர்வைப் பெற்றேன்.

அடுத்தநாள் அதிகாலையிலேயே எழுந்து எங்கு போகவேண்டும் என்று தெரியாமலேயே வீட்டைவிட்டு



புறப்பட்டுச் சென்றேன். ஊரின் பிரதான சாலையை அடைந்த உடனேயே, கர்த்தர் எனக்கு போதித்து, நான் நடக்க வேண்டிய வழியை காண்பிக்க வேண்டும் என்று மனதிலேயே ஜெபித்தேன். நான் வடதிசையை நோக்கி போக வேண்டும் என்று அந்தராத்துமாவில் ஒரு உந்துதல் ஏற்பட்டது. இவ்வாறு திசை சரியாக தெரியாமலும், ஒரு வாகனத்தையும் வாடகைக்கு அமர்த்தாமலும் நான் நடந்து சென்று கொண்டே இருந்தேன். என்னையும் அறியாமலே என் கால்கள் என்னை இந்தோனேஷியாவின் வேதாகம சங்கத்தின் தலைமைக் காரியாலயத்திற்கு முன் கொண்டு போய் நிறுத்தின. நான் அந்த அலுவலகத்திற்குள் போக வேண்டும் என்று கர்த்தர் சொன்னார். ஆகிலும் அங்கு யாரையும் எனக்கு அறிமுகமில்லாததால், நான் சந்தேகத்தோடும் பயத்தோடும் உள்ளே நுழைந்தேன். முன்பு எனக்கு சிறிதளவு பரிச்சயமுள்ள ஒரே நபர் அருள் திரு.பி. ரோபோவினோட்டோ; ஆனால் அப்பொழுது அவர் சலத்திகாவுக்கு மாறுதலாகி போய் விட்டார். எனவே முன்பின் ஒருவரையும் தெரியாத இடத்திற்குச் சென்று நான் என்ன செய்யப் போகிறேன் என்று திகைத்துக் கொண்டிருந்தேன். ஆகிலும் நான் உள்ளே செல்ல வேண்டும் என்று அமர்ந்த மெல்லிய சத்தம் உள்ளே நுழையுமாறு என்னை வற்புறுத்திற்று.

நான் உள்ளே நுழைவதை கண்ட மாத்திரத்திலேயே, எனது நண்பர்களில் ஒருவர் மிகவும்

அன்புடன்; "திரு. அம்ப்ரி அவர்களே! வருக, வருக; உங்கள் வரவு நல்வரவாகுக. என்ன ஆச்சரியமான தேவ நடத்துதல்! உங்களைச் சந்திக்க வேண்டும் என்று இங்கு ஒருவர் காத்துக் கொண்டிருக்கிறார் என்று கூறி என்னை வரவேற்றார். நாங்கள் நட்பு முறையில் பேசிப்பழக ஆரம்பித்தோம். அங்கு வந்திருந்தவர் அருள் திரு. ஜக்ராத் மட்ஜா என்பவராகும். என்னுடைய அற்புதமான மனந்திரும்புதலைப் பற்றியும், புத்தக ஊழியத்தைப் பற்றியும் அதிகமாய் கேள்விப்பட்டிருந்த அவர் என்னை நேரில் பேட்டி காணவும், எனது புத்தகங்களையும் வாங்கிக் கொண்டு போக வேண்டும் என்று வந்திருந்தார்.

இது எவ்வாறு எனது புதிய பரந்த ஊழியத்திற்கு வழியாகும் என்று சிந்திக்கத் துவங்கினேன். இதுவாக இருக்க முடியாது என்ற முடிவிற்கு வந்தவனாக, எனது வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தேன். ஆனால் மறுபடியும் என் உள்ளத்தின் குரல் தொடர்ந்து வடக்கு நோக்கியே நடக்க வேண்டும் என்று என்னை உந்தித் தள்ளினது. சிறிது நேரங்கழித்து நான் கிராமத்வீ என்ற இடத்தை அடைந்தேன். உள்ளே பிரவேசித்து அருள் திரு. டாக்டர் போர்மெஸ் அவர்களைச் சந்திக்க வேண்டும் என்று தூண்டுதலைப் பெற்றேன். அவருடன் பரிச்சயமில்லாததாலும், அவர் வேறொரு சபையைச் சேர்ந்தவரானதாலும் அவரை சந்திப்பதினால் என்ன



பயன் ஏற்படும் என்று ஐயங் கொண்டேன். மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் ஒரே ஒரு முறை அவரைச் சந்தித்திருந்தேன். ஆகலும் ஆவியானவர் என்னை ஏவிக் கொண்டே இருந்தபடியால் நான் அங்கே சென்றடைந்தேன், வீட்டிற்குள் பிரவேசிக்கும் முன்பாக எனக்கொரு சந்தேகம் ஏற்பட்டது. ஏனெனில் முன்பெல்லாம் அங்கு ஏராளமான ஊழியர்கள் போக்குவரத்தாக இருந்தனர்; ஆனால் இப்பொழுதோ அங்கு அமைதி நிலவியது. ஒருவேளை அருள்திரு. போர்மெஸ் வீடு மாறிவிட்டாரோ! ஆனால் நான் அங்கு வருவதை ஏற்கனவே கவனித்துவிட்ட போர்மெஸ் அவர்கள் முன் கதவைத் திறந்து, 'ஹலோ! மிஸ்டர். அம்ப்ரி! நேற்றிலிருந்து உங்களைச் சந்திக்க வேண்டும் என்று என் மனது உறுத்திக் கொண்டே இருந்தது. நிச்சயமாகவே நான் உங்களை எதிர்பார்த்திருந்தேன்! ஒருவேளை நாம் இருவரும் ஒன்றாக ஊழியம் செய்யலாமே," என்று சம்பாஷணையை தொடக்கினார். நான் மிகவும் வியப்படைந்தேன். எவ்வாறு டாக்டர் போர்மெஸ் என்னை ஞாபகத்தில் வைத்திருந்தார்? நாங்கள் இருவரும் நெருங்கி பழகிக் கொள்ளவில்லையே. அப்பொழுது தான் முந்தின தினத்தில் நான் ஏறெடுத்த விண்ணப்பம் எனது நினைவிற்கு வந்தது இவ்விதமாகத்தான் ஆவியானவர் என்னை

புதுவிதமான ஊழியத்திற்கு வழிநடத்துகிறார் என்று முடிவு செய்தேன்.

அவருடன் செலவிட்ட நேரம் எனது உள்ளத்திற்கு மகிழ்ச்சியையும் ஆவிக்கு புத்துயிரையும் தந்தது. அவருடன் ஊழியத்தில் இணைந்து செயல்படுமாறு விரும்பினார். அப்பொழுது எனக்கிருந்த உடல் நலக்குறைவையும் போக்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டார்.

அந்த சந்திப்பின் முடிவில் சோலோ தெரு 4-வது இலக்கத்திலிருந்த பூமி ஆஸி ஸ்தாபனத்தின் இயக்குனரான எம்.கே. சினேகா என்பவருக்கு கடிதங் கொடுத்தார். நானே அதை நேரில் எடுத்துச் சென்று சமர்ப்பித்தேன். வெள்ளிக் கிழமை காலையில் ஹோட்டல் இந்தோனேஷியாவில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த ஊழியர்கள் மாநாட்டில் அநேகர் என்னை சந்திக்க விரும்பினதால் நான் அந்த அழைப்பை தட்டாமல் ஏற்றுக் கொண்டேன்.

பிப்ரவரி 24,1978 வெள்ளிக்கிழமை காலையில் ஹோட்டல் இந்தோனேஷியாவில் கூடியிருந்த ஜக்கார்த்தா கிறிஸ்தவ தொழிலதிபர் வியாபாரிகள் சங்கத்தைச் (C.B.M.C) சேர்ந்த பலர் முன்னிலையில் நான் நின்றேன்.



அங்கு குழுமி இருந்தவர்களுள் அநேகர் எனது பெயரையும், சாட்சியையும் கேள்விப்பட்டிருந்தனர். என்னை நேரில் சந்திக்க ஆசித்தனர் எனவும் அவர்கள் பேசினதிலிருந்து, புரிந்து கொண்டேன்! அன்று முதல் அநேக வீட்டுக் கூட்டங்களில் நான் செய்தி கொடுக்குமாறு அழைக்கப்பட்டேன். இந்தக் குழுக்களெல்லாம் சபையுடன் ஒத்துழைத்து இவ்வாறு கூட்டங்கள் நடத்தினர். இப்பொழுது ஜக்கார்த்தா, பாண்டுங் முதலான பகுதிகளைச் சுற்றியுள்ள எண்ணிறந்த சபைகளில் எனது சாட்சியை பகிர்ந்து கொள்ளுமாறு அழைக்கப்பட்டேன். பிற்பாடு இந்தோனேஷியாவின் மற்ற மாநிலங்களுக்கும், தீவுகளுக்கும் அழைக்கப்பட்டேன். இப்பொழுது என்னுடைய புதிய பணித்தளம் எது என்பதை விளங்கிக் கொண்டேன். கர்த்தர் ஆசீர்வதித்து வருகிற இந்த கிறிஸ்துவின் சுவிசேஷ ஊழியத்தை நான் மன உவப்புடன் செய்து வருகிறேன். இப்பொழுதும் என்னுடைய அஞ்சல் வழி ஊழியமும் அதிகரித்துக் கொண்டு இருக்கிறதே தவிர ஒன்றும் குறையவில்லை. இதற்காக என் தேவனைத் துதிக்கிறேன்! எனக்கு வரும் கடிதங்கள் எனக்கு மிகவும் ஆசீர்வாதமாக இருக்கின்றன; அத்துடன் அவைகளுக்கு பதில் அளிப்பதில் அதிக மகிழ்ச்சி அடைகிறேன்.

# எனது ஊழியம் மேலும் விரிவடைதல்

ஜக்கர்த்தாவில் பட்டங்காரி தெருவில் இருக்கும் தாருசலாம் மசூதியில் முஸ்லிம் இளைஞர் முன்னணியில் பேசுவதற்காக மே, 13-ம் தேதி 1979-ல் அழைக்கப் பட்டேன். அந்த சங்கத்திற்கு லெம்பாஹாபென் காஜியான் இஸ்லாம் அல்ஃபுர்க்கான் என்று பெயர், இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத்துவம் என்ற பொருளின் மீது பேச வேண்டும் என்று அழைக்கப்பட்டிருந்தேன். எனக்கெதிராக வாதம் செய்வதற்கு இஸ்லாமிய பண்டிதர்களான டாக்டர். அபுநாயமின் ரோஹாம் மற்றும் டாக்டர் ஸனிஆர்த்தி ஆயத்தமாயிருந்தனர். இஸ்லாமிய போதகர்களும் மாணவர்களுமாக சுமார் 100 பேர் கூடியிருந்தனர். அவர்களுக்கு பதிலுரைக்குமாறு நான் ஒருவன் மாத்திரம் கிறிஸ்தவனாக அங்கு சென்றிருந்தேன். நான் பேசினது அவர்களுக்கு பிரயோஜனமாக இருந்தது. என்மீது நல்லெண்ணம் கொண்டவர்களாக நட்பு முறையில் கைகுலுக்கி கூட்டத்தை முடித்தனர்.

ஜுலை 22, 1979ல் மீண்டும் அதே இடத்தில் விரிவுரை நடைபெற்றது. இப்பொழுது மஜிலிஸ் உலாமா என்ற இஸ்லாமிய சங்கத்தைச் சேர்ந்த தலைவர்கள் 10



பேர் என்னுடன் சொற்போர் புரியதயாராக வந்திருந்தனர். பார்வையாளர்கள் சுமார் 150 பேர் அமர்ந்திருந்தனர். யாவரும் இஸ்லாமிய மதக் கோட்பாடுகளில் தேர்ச்சி அடைந்தவர்களே, அவர்களுள் பிரபலாமானவர்கள் யாரெனில் கலாநிதி எச்.எம். ரஷீதி, கலாநிதி பனியாவமின் ரோகான், டாக்டர். தாகூர், டாக்டர் ஆஸ்மினி ஆகியோர் ஆவர். பேசின பொருளின் தலைப்பு "சர்வவல்லமையுள்ள தேவன் ஒருவரா மூவரா அல்லது மூவரில் ஒருவரா? என்பதாகும்.

இதனையடுத்து இரண்டு மாத காலத்திற்குள் நான் ஜக்கார்த்தா, மேற்கு - கிழக்கு ஜாவா ஆகிய இடங்களில் செய்திகள் கொடுப்பதற்காக அழைப்புப் பெற்றேன். செப்டம்பர் மாதம் நான் ஒருசுவிசேஷ படைமுயற்சியை மேற்கொண்டவனாக, மெனடோ, ஊஸுங் பண்டாங், தனாஹ்டோரஜா, பாலப்போ, பலிக்பாபாஸ், பன்ஜார்மாசின் மற்றும் கப்பூவால் ஆகிய இடங்களுக்கெல்லாம் சென்றேன். தேவனுக்கே மகிமையும் துதியும் இப்பொழுதும் எப்பொழுதும் உண்டாவதாக!

## முடிவுரை

இரட்சிப்பு என்பதுதான் ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையிலும் பிரதான இலட்சியமாக இருக்கிறது. அவனுக்கு இரட்சிப்பு, அவன் குடும்பத்தினருக்கு இரட்சிப்பு, அவன் நிலபுலங்களுக்கு இரட்சிப்பு என்று பல வகையான இரட்சிப்புக்களையும் நாம் எடுத்தியம்புவது இயல்பு. மனிதனுக்கு மகிழ்ச்சித்தரும் குறிக்கோள்களைஅடைவதே இவற்றின் தலையாய நோக்கம்.

ஒரு சமயப்பற்றுள்ள மனிதனுக்கு, இரட்சிப்பு என்றால் இவ்வுலகத்தோடு முடிவடையும் நன்மைகளை மட்டும் குறிப்பிடாமல், தன்னைவிட்டு எடுபடாத நல்லபங்காகிய பாவ மன்னிப்பு, பாவத்தின் மேல் வெற்றியுள்ள பரிசுத்த வாழ்க்கை, முடிவில்லா பரலோகப் பேரானந்தம் ஆகியவற்றை குறிக்கும். அவனுடைய ஆவிக்குரிய இரட்சிப்பு பரலோக வாழ்க்கையின் இன்றியமையாத தத்துவமாகிய அன்பு என்றும் குணாதிசயத்தோடு நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளது.

ஆதாமும், ஏவாளும் பாவத்தில் விழாமல் இருந்தார்கள் என்று வைத்துக்கொள்வோம். இந்த யூகம் உண்மையானால் அவர்கள் இதுவரைக்கும், இனிமேலும், நித்தியமாக வாழ்ந்து கொண்டே



இருப்பார்கள். ஆனால், அவர்களுடைய ஆதிபாவத்தால் ஆதாமும், ஏவாளும் தேவன் தங்களுக்குக் கொடுத்திருந்த ஒரே கட்டளையை மீறினதால் ஜீவ விருட்சத்தின் கனியையும் புசித்து என்றென்றும் ஜீவனோடிராதபடிக்கு ஏதேனிலிருந்து விரட்டியடிக்கப் பட்டனர். எனவே ஆதாமின் சந்ததியான மனுக்குலம் அனைத்தும் ஆவிக்குரிய சரீர மரணத்தையும், அழிவையும் அனுபவித்துக்கொண்டே இருக்கின்றனர்.

இவ்வாறு குறைந்து, நலிந்து, நாசமாய்ப் போகின்ற ஆவிக்குரிய மற்றும் சரீரத்திற்குரிய ஜீவனைத்தான் நாம் ஆதாம் ஏவாளிடமிருந்து சுதந்தரித்துக் கொண்டிருக்கிறோம். பாவத்தின் சம்பளம் மரணம் என்ற மாறாத பிரமாணத்திற்கு நீங்களும் நானும் அல்லது ஒருவரும் விதிவிலக்கு இல்லை.

அன்பில், இரக்கத்தில், தயவில், கிருபையில் எல்லையில்லா ஐசுவரியமுள்ள தேவன் நாம் பாவத்திலேயே செத்துக்கிடப்பதையும், அவரிடமிருந்து பிரிக்கப்பட்டிருக்கிறதையும் சகிக்க முடியாதவராக ஏற்கனவே, அநாதிகாலமாகவே இம்மாபெரும் இரட்சிப்பை நிர்ணயித்துள்ளார். அவர் இப்பொழுது அருளும் நித்திய ஜீவன் ஆதாமும் ஏவாளும், சிருஷ்டிக்கப்பட்ட நாளிலே பெற்ற ஜீவனைப் பார்க்கிலும் மகா சிறந்ததும் மேன்மையான தன்மை கொண்டாதுமாயிருக்கிறது.

இரட்சிப்பின் முதல் படி : ஆதி நாட்களிலிருந்தே தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகளின் மூலமாக நாம் எல்லோரும் மனந்திரும்ப வேண்டும், அவருக்கு கீழ்ப்படிய வேண்டும், மோசே மற்றும் தீர்க்கதரிசிகள் மூலமாய் (எபிரெயர் 1:1) தேவன் கொடுத்த நீதிப்பிரமாணத்தை கடைப்பிடிக்க வேண்டும் என்று கட்டளையிட்டிருக்கிறார்.

இரண்டாவது படி: தேவன் தம்முடைய வார்த்தையாகிய இயேசுக்கிறிஸ்துவை மாம்சத்தில் (மனுஷரூபத்தில்) வெளிப்படச் செய்து, அவரே ஜீவனுள்ள வார்த்தை, பிதாவின் ஏகசுதன் என்று அழைத்திருக்கிறார். (எபிரெயர் 1:1; யோவான் 1:1,14:1 யோவான் 1:1)

மூன்றாவது படி: தேவன் தம்முடைய பரிசுத்த ஆவியானவராகிய தேவ ஆவியானவரின் உதவியுடனும் ஒத்தாசையுடனும் எல்லா மனிதரையும் மனந்திரும்பச் செய்வதற்கும், பரிசுத்த வேதாகமத்தில் தாம் ஏதித்தந்துள்ள வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியவும், நேரான வழியில் நடக்கவும் வழிவகுத்திருக்கின்றார். ஆதலால், அவருடைய திவ்ய வெளிப்பாட்டையும், வழி நடத்துதலையும் மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டு அவருடைய வாக்குத்தங்களை நம்பியிருப்போருக்கு நித்திய ஜீவனை அருளுகிறார்.



மேற்கூறியவற்றிற்கு ஆதாரமாக பின்வரும் வேத வாக்கியங்களை கருத்தில் கொள்ள வேண்டும்:

“தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ. அவன் கெட்டுப் போகாமல், நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.” (யோவான் 3:16)

“விசுவாசமுள்ளவனாகி, ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்” (மாற்கு 16:16)

“நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்” (யோவான் 10:10)

“இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்” (மத்தேயு 28:20)

“கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ அப்படியே மறுபடியும் வருவார் (அப்போஸ்தலர் 1:11)

“அப்பொழுது மனுஷ குமாரன், மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் மேகத்தின் மேல் வருகிறதைக் காண்பார்கள்” (லூக்கா 21:27)

முந்தின வசனத்தில் தூதர்கள் சீஷர்களுக்கு அறிவித்தனர்; ஆனால் இச்சந்தர்ப்பத்தில் இயேசுதாமே சீஷர்களுடன் பேசுகின்றார்.

இயேசுக்கிறிஸ்துவின் இரண்டாம் வருகை பரிசுத்த வேதாகமத்தில் முக்கியமான இடம் பெறுவதுடன், முஸ்லிம்களும் இதை விசுவாசித்து எதிர் நோக்கி இருக்கின்றனர் என்ற உண்மை நாம் ஏற்கனவே பார்த்தபடி, ஹதீஸிலுள்ள முஹம்மதுவின் அறிக்கைகளிலிருந்தும் உறுதிப்படுத்தப்படுகிறது. இயேசு நீதியுள்ள நியாயாதிபதியாக இரண்டாம் முறை இவ்வுலகத்திற்கு வருவார் என ஹதீஸ் திட்டமும் தெளிவுமாக கூறுகின்றது.

தேவனுடைய பிள்ளைகளுக்கு மூன்று வாக்குறுதிகள் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளன:

1. பரலோகத்தில் நித்திய ஜீவன், அதாவது ஆதாமும் ஏவாளும் ஆதியில் பெற்றிருந்த ஜீவனைக்காட்டிலும் மிக மேலான மகிமையுள்ள ஜீவன். இந்த நித்திய ஜீவனையும், பரலோக இரட்சிப்பையும் அடைவதற்கு மக்கள் கிறிஸ்து



இயேசுவை விசுவாசிப்பதுடன், அவருடைய உண்மையான சீடர்களாகி ஞானஸ்நானமும் பெற வேண்டும்.

2. பரிபூரண ஜீவன் அதாவது ஆவிக்குரியதும் சரீர சம்பந்தமுமான இகபர ஆசீர்வாதங்களை பரிபூரணமாகப் பெற்றனுபவிப்பது ஆகும். கிறிஸ்துவின் அடியார்களுக்கு ஒருபோதும் குறைவிருக்காது: எப்பொழுதும் நிறைவே இருக்கும்.

3. கிறிஸ்துவை தன்னுடைய சொந்த இரட்சகரும் ஆண்டவருமாக அறிக்கை செய்து அவருடைய உண்மை அடியவரான ஒவ்வொரு நபரின் உள்ளத்திலும், அவர் எங்கிருந்தாலும், எப்பொழுதும் (உலகத்தின் முடிவு பரியந்தமும்) பரிசுத்த ஆவியானவராகிய தேவ ஆவியானவர் வாசஞ் செய்கிறார்.

அன்பான நண்பரே, இப்பேர்ப்பட்ட வாக்குத்தத்தங்களும் முகாந்தரங்களுமிருக்க, நான் பணிவன்புடன் உமக்குக் கூறும் ஆலோசனையாவது:

இந்தக் கணமே தீர்மானிக்க மாட்டீரா! வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளதும், ஆயத்தமாக்கப்பட்டிருக்கிறது மான இந்த இரட்சிப்பை இப்பொழுதே ஏற்றுக்

கொள்வீரா? கர்த்தராகிய "இயேசு ராஜாவே, என் உள்ளத்தில் வந்து, என்னை ஆட்கொண்டு, உமது மெய்யான சமாதானத்தையும் சந்தோஷத்தையும், தெய்வீக ஜீவனையும் தாரும், ஐயா!" என்று கேளும் அப்பொழுது நாம் கடவுளோடு நித்திய நித்திய காலமாக வாழுவோம். இந்த அரிய சந்தர்ப்பத்தை நழுவவிட வேண்டாம். நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம் என்று காலம் தாழ்த்த வேண்டாம். நாளை நமதல்ல. இன்றைக்குச் செய்ய வேண்டியதை இப்பொழுதே செய்ய வேண்டும். கிருபையின் வாசல் அடைக்கப்படுமானால் நீர் முடிவில்லா மன வருத்தமும் தண்டனையும் அனுபவிக்க நேரிடும். உத்தம இருதயத்தோடும், யதார்த்தமான உள்ளத்தோடும் இயேசு கிறிஸ்துவை உமது சொந்த இரட்சகராக வரவழைத்து, நித்திய நித்தியமாக உள்ள பரலோக இரட்சிப்பின் வாசல் வழியாக வருவீராக. "இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் வரும் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்வோம்?" (எபிரெயர் 2:4).



## வினா - விடை

## தேவன் எனக்கு நித்திய ஜீவனைத் தெரிந்து கொண்டிருக்கிறார்

வியப்பூட்டும் இந்த விந்தையான வாழ்க்கைச் சரித்திரத்தைக் கவனமாகப் படித்திருப்பீரென்றால் பின்வரும் கேள்விகளுக்கு எளிதாக நீர் பதிலளிப்பீர். இவற்றுள் 24 வினாக்களுக்குச் சரியான விடையளிப்பீர் என்றால் பரிசாக வேறு ஒரு நூலை அனுப்புவோம். அதன் வாயிலாக கடவுளைப் பற்றி அதிகமாக அறிந்து கொள்வதுடன் அவருக்குக் கீழ்ப்படிகிறவர்களுடைய வாழ்க்கையில் எவ்வாறு வல்லமையாக, மகிமையாக தேவன் செயல்படுகிறார் என்பதையும் கண்டுபிடிப்பீர்.

1. 'தவ்றாத்தும் இன்ஜீலும்' எவ்வித மாற்றமுமின்றி அப்படியே பைபிளில் இப்பொழுதும் இருக்கின்றன என்பதைச் சுட்டிக் காண்பிக்கும் முக்கியமான குர்ஆனின் வசனம் எது?

2. கடவுளின் சித்தப்படியே உள்ள சத்தியம்தான் தவ்றாத்தும் இன்ஜீலும் என்பதற்கு ஆதாரமாயுள்ள குர்ஆனின் பகுதிகள் நான்கு எவை?

3. மோசேக்கும் கிறிஸ்துவுக்கும் உள்ள தனித்தன்மை வாய்ந்த அசாதாரணமான ஒற்றுமைகள் எவை?

4. உபாகமம் 18ல் உள்ள தீர்க்கத் தரிசனத்தில் எந்த விசேஷித்த அடையாளங்கள் இயேசு கிறிஸ்துதான் மனிதனாக மாம்சத்தில் வெளிப்பட்ட "தேவனுடைய வார்த்தை" என்பதைக் காண்பிக்கின்றன?

5. சகோதரர் ஹம்ரான் அம்ப்ரி பரிசுத்த வேதாகமம் மெய்யான தேவனுடைய வார்த்தை என்று அறிந்த பின்னரும் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதில் தாமதமும் தயக்கமும் கொண்டது ஏன்?

6. போதகர்களும் நற்செய்தியாளர்களும் அளித்த விடைகளும், விளக்கங்களும் அவருக்குப் பூரண திருப்தி தராத காரணம் என்ன?

7. ஹம்ரான் அம்ப்ரிக்கு ஏற்பட்ட மூன்று முக்கியமான தடைகளை அவர் எப்படி ஜெயித்தார்?

8. அந்தத் தடைகளை மேற்கொள்ள தேவன் அவருக்கு எவ்விதமாக ஒத்தாசை புரிந்தார்?

9. இயேசு கிறிஸ்து "கர்த்தர்" என்று அழைக்கப்படுவது ஏன்?



10. ஹம்ரான் அம்ப்ரி கிறிஸ்தவரான பிறகும் தேவனின் ஒருமைப்பாட்டுக் கொள்கையை மாற்றிக் கொள்ள அவசியமில்லாமற் போனது ஏன்?

11. கடவுள் ஒருவரே என்பதையும் தேவனின் ஏகத்துவத்தையும் கிறிஸ்தவப் போதனை எவ்வாறு தூய்மைப்படுத்துகிறது?

12. பல தெய்வ வணக்கம் என்றால் அர்த்தம் என்ன?

13. கிறிஸ்தவர்களை பல தெயவ் வழிபாட்டுக் காரர்கள் என்று கருதமுடியாது ஏன்?

14. திரியேகத்துவம் என்ற கிறிஸ்தவ இறை தத்துவம் முஸ்லிம்களுக்குப் பெருந்தடையாக இருப்பது ஏன்?

15. கிறிஸ்தவ கண்ணோட்டத்தில் பரிசுத்த திரித்துவத்தில் ஏகத்துவம் அடங்கியிருப்பதை விளக்கவும்.

16. இயேசு கிறிஸ்து மெய்யாகவே சிலுவையில் அறையுண்டார் என்பதை எங்ஙனம் ருசுப்படுத்த இயலும்?

17. இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்தார் என்பதை நாம் எவ்வாறு அறியலாம்?

18. எவ்வகையான மரணங்களிலிருந்து நாம் உயிரோடு எழுப்பப்படக் கூடும்?

19. கிறிஸ்து இயேசுவின் 'சிலுவை' என்பதன் அர்த்தத்தை சுருக்கிக் கூறுக?

20. ஏசாயா 53:4-12ஐ மனனம் செய்து, ஐந்து முறை எழுதிப் பார்க்கவும்.

21. 'பட்டயத்தை எடுக்கிற' யாவருக்கும் என்ன சம்பவிக்கும்?

22. இயேசுக்கிறிஸ்து பரலோகத்திற்கு சென்றிருக்கிறார் என்பதற்கு குர்ஆன் மறுப்பு தெரிவிக்கிறதா?

23. இயேசு உலகத்திற்கு மறுபடியும் வரும்பொழுது என்ன செய்வார்?

24. பைபிள் பங்கப்பட்டுள்ளது - பொய்யாக்கப் பட்டுள்ளது என்பதாக எந்த குர்ஆனின் வசனங்களை அனர்த்தப்படுத்துகின்றனர்?

25. பைபிள் பொய்யாக்கப்பட்டது அல்லது அதன் பூர்வாங்க உண்மை எடுக்கப்பட்டது என்பதை வலியுறுத்தக்கூடிய திடமான குர்ஆனின் வசனங்கள் ஏதாகிலும் உண்டா?

26. நாம் இயேசு கிறிஸ்துவை பின்பற்றுவதினால் நமக்கு எவ்வகையான உபத்திரவங்கள் ஏற்படக் கூடும்?



27. கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட பிறகு ஹம்ரான் அம்ப்ரி மற்றும் அவருடைய குடும்பத்தினாரிடம் ஏற்பட்ட மாறுதல்கள் எவை?

28. தேவனுடைய பிள்ளைகளுக்கு உத்தரவாதமாக கொடுக்கப்பட்டுள்ள மூன்று வாக்குத்தத்தங்கள் எவை?

29. யோவான் 3:16யையும் அப்போஸ்தலர் 4:12ஐயும் மனதார மனனம் செய்து ஐந்து முறை எழுதிப்படிக்கவும்?

30. ஜீவனோடுள்ள இயேசு கிறிஸ்துவை பின் செல்வதற்கு தீர்மானித்து விட்டீரா?

மதிப்பிற்குரிய வாசகரே! இந்தப் புத்தகத்தை வாசித்தபின் உங்களுக்கு உண்டாகும் மன எழுச்சிகளை, விருப்பங்களை கீழ்காணும் விலாசத்திற்கு உங்கள் முகவரியுடன் எழுதி அனுப்பும்படி வேண்டிக்கொள்கிறோம். உங்களுடைய கேள்விகளுக்கும் சந்தேகங்களுக்கும் பதில் எழுத, ஆவலுடன் காத்திருக்கிறோம். உங்களுக்கு உதவி செய்வதில் எங்களுக்கு பெரும் மகிழ்ச்சியுண்டு.